பேசும்படம்

ஆகஸ்ட் 1961 • 75 காசு

அடிக்கடி ஏற்படும் ஜலதோஷமும் இருமலும் வீர்யத்தை குறைக்கிறது...சுவாசப் பைகளில் பரவும் தொத்து நோய்களைத் தடுக்கும் சக்தியை குறைக்கிறது

இருமலும் ஜலதோஷமும் தாமாகவே உபாதையளிக்கக்கூடியது மட்டும் அல்ல; திரும்பத் திரும்ப வரும் நோய்த் தாக்குதல்கள் அதிக அபாயகரமான நோய்களுக்கு அடிகோலுகிறது. ஆகையால் ஜாக்கிரதையாக இருங்கள். உடனடியாக வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் உட்கொள்ள ஆரம்பியுங்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

- ★ இருமலையும் சுவாசப் பைகளில் ஏற்படும் நெரிசலையும் தவிர்க்கிறது.
- ★ இருமல் மற்றும் ஜல தோஷத்தை எதிர்க்கும சக்தியை உண்டு பண்ணுகிறது.
- ★ ஜீரணத்திற்கு உதவுகிறது.
- ★ சரீரத்தின் எல்லா அவயவங்களுக்கும் புத்துணர்ச்சியளிக்கிறது.



கிரியோஸோட், க்வயகால் இவைகளால் வீர்யம் அதிகப்படுத்தப்பட்ட வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சுவாசப் பைகளில் ஏற்படும் நெரிசலையும், கடினமான இருமலையும் ஜலதோஷத்தையும் கரைக்கிறது. அது தேக நிலையை பரிபூர்ணமாக சீராக்கி நோய்களை எதிர்க்கும் சக்தியை வளர்த்து நீங்கள் வருடம் பூராவும் திடகாத்திரமாக இருக்க உதவுகிறது. அது குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஒருங்கே நற்பயனளிக்கிறது. பில்பர் ப்ரூப் மூடியை கவனிக்கவும்.

உட்கொள்ளுங்கள் இன்பமான ருசியுள்ள

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

(சிகப்பு லேபில்)

நீங்கள் திடகாத்திரமாக இருக்க

குங்குமப்பூ கலர் லேபிலுடைய வாட்டர்பரீஸ் விடமின் காம்பவுண்டும் கிடைக்கிறது. ஒரு பொதுவான டானிக்கென சிபாரிசு செய்யப்படுகிறது.

வார்னர்-லாம்பர்ட் பார்மஸியூடிகல்கம்பெனி

(யு.எஸ்.ஏ.யில் வரையறுக்கப்பட்ட மூலதனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)


சித்ராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்
தேன்நிலவு
ஒளிப்பதிவு: வின்சென்ட்
இசை: ஏ.எம்.ராஜா
பாடல்கள்: கண்ணதாசன்

துரிதமாக
தயாராகிறது!
P.A.குமார்
புரொடக்ஷன்ஸ்
தளபதியின்
தாய்
டைரக்ஷன்:
K.சங்கர்
திரைக் கதை வசனம்:
சக்தி கிருஷ்ணசாமி
பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்
இசை:
விசுவநாதன்-ராமமூர்த்தி
கலை:
பாலு
படப்பிடிப்பு:
தம்பு
K.S.Ramu
RIGHTS CONTROLLED BY: ஸ்ரீ கணேஷ் குமார் மூவீஸ்
உரிமையாளர்: (M.T.குழந்தைவேலு செட்டியார்) சென்னை-4

ஆகஸ்ட்
வெளியீடு
திருமகள் பிலிம்ஸ்
மகளே உன் சமத்து
டைரக்ஷன்: D.S.ராஜ்கோபாலன் • தயாரிப்பு: P.A.குமார், S.V.ராஜகோபால்
RIGHTS CONTROLLED BY:
V.கிருஷ்ணசாமி செட்டியார், திருப்பூர் V.K.பிக்சர்ஸ்
5/3 ஸ்டேன்ஸ் ரோடு. திருப்பூர்.
விவரங்களுக்கு:
திருமகள் பிலிம்ஸ்
13 பாலகிருஷ்ணா ரோடு, சென்னை-4

ஸெக்ஸ் புத்தகங்கள்

கொக்கோக சாஸ்திரம் ரூ. 3/- பெண்ணை ஆண் வசியம் செய்வது ரூ. 4/-. மணவாழ்க்கை 88 படங்களுடன் ரூ. 5/-, குடும்பக்கட்டுபாடு [படங்களுடன்] ரூ. 6/- ரதி சாஸ்திரம் ரூ. 3/- ஸெக்ஸ் வாழ்க்கை ரூ. 3/- காமசூத்திரம் படங்களுடன் ரூ. 6/- ஸெக்ஸ் அவயவங்களின் 325 படங்கள் கொண்ட (அமெரிக்கன் வெளியீடு) ரூ. 5/- காதல் செய்யும் கலை ரூ. 3/- ஆண் பெண் ஸெக்ஸ் புதிர்கள் ரூ. 5/- அழகிய பெண்கள் 125 படங்கள் கொண்டது ரூ. 6/- தேன் நிலவு ரூ. 3/- இரகசியக் காதல் கடிதங்களும் பதில்களும் ரூ. 3/50. 60 படுக்கையறை வர்ணப்படங்கள் ரூ. 6/- ஸெக்ஸ் அதிசயங்கள் (படங்களுடன்) ரூ. 10/- முத்தமிடும் கலை (படங்களுடன்) ரூ. 2/50. ஸெக்ஸ் புதிர்கள் சுருக்கம் ரூ. 3/50.

புத்தகம் ஒன்றிற்கு தபால் செலவு ரூ. 1/- 1-3 புத்தகங்களுக்கு ரூ. 1/50.

மின்சாரம் ரேடியோ அட்டவணை

200 படங்கள் கொண்ட இப்புத்தகத்தைக் கொண்டு 25 ரூபாயில் ஒரு ரேடியோவை வீட்டிலேயே செய்யலாம். ரேடியோ ரிப்பேரிங், மின்சாரம், 'ஒயரிங், மெக்கானிஸம் மற்றும் பல தொழிலைப்பற்றி அடங்கியுள்ளது. நீங்கள் ஒரு மெக்கானிக் ஆகலாம். விரிவான புதிய வெளியீடு. இரண்டு பாகங்கள் கொண்டது. ரூ. 7/- வி.பி. சார்ஜ் 1/50. டெய்லரிங், கட்டிங் [படங்களுடன்] ரூ. 4/- சோப்பும் வாசனை திரவியங்களும் செய்யும் விதம் ரூ. 4/50. போட்டோ கலை ரூ. 3/- எம்பிராய்டரி டிசைன் புத்தகம் ரூ. 4/- வி.பி. சார்ஜ் ரூ. 1/.

GLOBE BOOK DEPOT

(77-2) P.B. 23, Aligarh City.

பொது மக்களுக்கொரு வேண்டுகோள்

பவானிநகர் காவிரி, பவானி ஆற்று வெள்ளத்தால் பெருமளவு பாதிக்கப்பட்ட விவரங்களை பத்திரிகைகள், வானொலி மூலம் பொது மக்கள் அறிந்திருப்பார்கள். ஏழை மக்களின் குடிசைகளும் வீடுகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பவானி நகரத்தில் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்கள், தனிப்பட்ட நபர்கள், சங்கங்கள் ஆகியோர் கொண்ட "பவானி நகர வெள்ள நிவாரணக்குழு" ஒன்று அமைக்கப்பட்டு நிவாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன. கோவை மாவட்ட கலெக்டர் இதை அங்கீகரித்திருக்கிறார்.

மனிதாபிமானமுள்ள எல்லாப் பொதுமக்களும் இந்தத் தூய பணிக்கு உதவ முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். நன்கொடை அளிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்களால் இயன்றதை அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

பொருளாளர்,

பவானி நகர வெள்ள நிவாரண நிதிக் குழு,

பவானி. P. O.

ஈரோடு வழி.

கருத்து வாய்ந்த காதல் காவியம்...
BHARANI PICTURES
MADRAS 17
பரணியின்
கானல் நீர்
கதை
சரத் சந்திர சட்டர்ஜி
பாடல்கள்
கண்ணதாசன்
வசனம்
வலம்புரி சோமநாதன்
தயாரிப்பு, டைரக்ஷன்
ராமகிருஷ்ணா
பானுமதி · நாகேஸ்வர ராவ் ·
சௌகார் ஜானகி · ஜாவர் சீதாராமன்
முத்தய்யா · பேபி காஞ்சனா · விஸ்வநாதன்
நடித்தது
ஜெமினி ரிலீஸ்
சென்னை வெலிங்டன் · அசோக்
மகாராணி மற்றும் தமிழ்நாடெங்கும்

Rights Controlled by : M/S. அண்ணாமலை & கோ. சென்னை-1.



படம் 19

காட்சி 12

பேசும்படம்

★ ஆகஸ்ட் • 1961 ★

பொருளடக்கம்

1. பேசும்படம் காலண்டர் ... 9
2. செய்திச் சுருள் ... 10
3. செய்திப் படங்கள் ... 13
4. கணேஷ் பிலிம்ஸ் தயாரிப்பில் பானுமதி... 18
5. ஜெயஸ்ரீ ... 19
6. மனோரமா - ஆடை அலங்காரம் ... 20
7. ஸ்டுடியோ விஜயம் ... 25
8. நினைத்ததும் நடந்ததும் ... 32
9. எல்லாம் உனக்காக - கதை வசனம் ... 41
10. குமுதம் - படக் காட்சிகள் ... 57
11. பாலும் பழமும் - படக்காட்சிகள் ... 61
12. தபால் பெட்டி ... 66
13. கேள்வி - பதில் ... 72
14. வெட்டுங்கள், வெட்டுங்கள் ... 78
15 பாக்கியலக்ஷ்மி - படக்காட்சிகள் ... 81
16. நான் ரசித்த காட்சி ... 90
17. போடு வரி ... 96
18. குட்டிச் சம்பவங்கள் ... 101
19. பேசும் படம் போட்டோ ஆல்பம் ... 105
20. நகீனில் நாங்கள் ... 122

★ **NINETEENTH YEAR OF PUBLICATION** ★

PESUM PADAM. Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:

Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon

Rights Controlled by: S. B. சேஷய்யர் - மதுரை.

பேசும் படம் காலண்டர்

ஆகஸ்ட்

1961

ஞா		6	13	20	27
தி		7	14	21	28
செ	1	8	15	22	29
பு	2	9	16	23	30
வி	3	10	17	24	31
வெ	4	11	18	25	
ச	5	12	19	26	

செய்திச் சுருள்

குமுதம்

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பான 'குமுதம்' திரைப்படம் ஒரு சுவையான சமூகச் சித்திரம். உள்ளத்திற்கும் உணர்ச்சிக்கும் நடக்கும் போராட்டங்களை விளக்கும் அருமையான கதையை இதற்கென எழுதி, கருத்து மிக்க வசனங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறார், கே. எஸ். கோபாலகிருஷ்ணன். கவிஞர் கண்ணதாசன், மருதகாசி இருவரும் இயற்றியுள்ள பாடல்களுக்கு கே. வி. மகாதேவன் இசை அமைத்திருக்கிறார். 'நடிகவேள்' எம். ஆர். ராதா, எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, சௌகார் ஜானகி மற்றும் பலர் நடித்துள்ள இப்படத்தை ஏ. சுப்பாராவ் டைரக்ட் செய்திருக்கிறார்.

தேவர் பிலிம்ஸ் 'தாய் சொல் தட்டாதே' படத்தில் எம். ஜி. ஆர்., சரோஜாதேவி தோன்றும் உணர்ச்சி மிக்க கட்டம்.

இந்திரா என் செல்வம்

'மணப் பந்தல்' புகழ் அசோகன் கதாநாயகனாக நடித்து வரும் 'இந்திரா என் செல்வம்' படத்தை அசோகா பிக்சர்சார் தயாரித்து வருகிறார்கள். முடிவடையும் தறுவாயிலிருக்கும் இந்தப் படத்தை டங்கன் மணி - பத்மநாபன் இருவரும் கூட்டாக டைரக்ட் செய்து வருகிறார்கள். விருதை ந. ராமசாமி வசனம் எழுதியுள்ள இப்படத்தில் பண்டரிபாய், நடிகவேள் எம் ஆர். ராதா மற்றும் பலரும் நடித்து வருகிறார்கள். விரைவில் திரைக்கு வரப்போகும் படங்களில் இதுவும் ஒன்று.

மகளே உன் சமத்து

'நடிகவேள்' எம். ஆர். ராதா, 'விஜயபுரி வீரன்' ஆனந்தன், எஸ். ஏ. நடராஜன், ராமராவ், ராஜஸ்ரீ, ஜெமினி சந்திரா, மனோரமா மற்றும் பலர் நடித்துள்ள 'மகளே உன் சமத்து' இம்மாதம் திரைக்கு வரவிருக்கிறது. பி. ஏ. குமார் எஸ். வி. ராஜகோபால் இருவரும் கூட்டாகச் சேர்ந்து திருமகள் பிலிம்சாருக்

ஆதிவாசிகளோ என்று அதிசயப்படாதீர்கள்! எம். ஏ. வி. யின் ‘செங்கமலத்தீவு’ படத்தில் ராஜஸ்ரீ ஆனந்தன்.

காக இதைத் தயாரித்திருக்கிறார்கள். வீரமும் சாகசமும், காதலும் சோகமும், இழைந்தோடும் கதையைக் கொண்ட இந்த ‘மகனே’ டி. எஸ். ராஜகோபால் டைரக்ட் செய்திருக்கிறார்.

தாய் சொல்லைத் தட்டாதே

‘தாய்க்குப்பின் தார’த்தை முதல் படமாக வெளியிட்ட தேவர் பிலிம்ஸார், தங்களது ஆறாவது தயாரிப்பாக ‘தாய் சொல்லைத் தட்டாதே’ என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்கள். அவர்களது முதல் தயாரிப்பில் நடித்த ‘புரட்சி நடிகர்’ எம். ஜி. ஆர். இந்த ஆறாவது தயாரிப்பிலும் கதாநாயகனாக நடிக்கிறார். அவருடன் நடிக்க பி. சரோஜா தேவி, எம். ஆர். ராதா, வி. கே. ராமசாமி; ‘குலதெய்வம்’ ராஜகோபால் மற்றும் பலரும் நடித்து வருகிறார்கள். விஜயா - வாஹினி ஸ்டுடியோக்களில் படமாக்கப்பட்டு வரும் இப்படத்திற்கு ஆரூர் தாஸ் கதை, வசனம் எழுதியிருக்கிறார். எம். ஏ. திருமுகம் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

தளபதியின் தாய்

சக்தி கிருஷ்ணசாமி கதை - வசனம் எழுதியுள்ள ‘தளபதியின் தாய்’, குறுகிய இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் வளர ஆரம்பித்திருக்கிறது கே. சங்கர் டைரக்ஷனில் வளர்ந்து வரும் இந்தப் படத்தை, பி. ஏ. குமார் தயாரித்து வருகிறார். விஸ்வநாதன் - ராமமூர்த்தி இருவரும் இசை அமைத்து வரும் இப்படத்திற்கான பாடல்களை கவிஞர் கண்ணதாசன் எழுதியிருக்கிறார்.

மதுரத்தின் இரண்டாவது

‘மீண்ட சொர்கம்’ படத்தை வெளியிட்ட மதுரம் பிக்சர்ஸார்,

சிவாஜி கணேசன் - சாவித்திரி இருவரையும் பிரதம பாகத்தில் நடிக்க வைத்து, தங்கள் இரண்டாவது தயாரிப்பை உருவாக்கப் போகிறார்கள். சோலைமலை கதை, வசனம் அமைக்கும் இதில் அவர்களுடன் 'நடிகவேள்' எம். ஆர். ராதா, முத்தய்யா, சௌகார் ஜானகி முதலியோரும் நடிக்க விருக்கிறார்கள். கே. சங்கர் படத்தை டைரக்ட் செய்யப் போகிறார்.

அமெரிக்காவுக்கு சிவாஜி!

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனை தங்கள் நாட்டிற்கு வந்து சிறிது காலம் தங்கி, சுற்றுப் பயணம் செய்ய அமெரிக்க அரசாங்கம் அழைத்திருக்கிறது. இதற்கான அழைப்பை, நடிகர் திலகம் நேரடியில் பெற்றுக் கொண்டிருக்கிறார். செப்டம்பர் மாத வாக்கில் அவர் அமெரிக்கா செல்வார்.

யார் மணமகன்?

'பூத்தாலி' என்ற பெயரில் மலையாளத்தில் வெளியிட்ட தங்களது படத்தை, நீலா புரொடக்ஷன்ஸார் தமிழில் தயாரித்து வருகிறார்கள். அதற்கு 'யார் மணமகன்?' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். முடிவடையும் தறுவாயிலிருக்கிறது இப்படம்.

சித்ராலயாவின் "தேன் நிலவு"க்காக 'காலையும் நீயே மாலையும் நீயே' என்ற பாடல் காஷ்மீரில் படமாக்கப்பட்ட போது "பேசும் படத்"திற்காகப் பிரத்தியேகமாக எடுக்கப்பட்ட படங்களுடன் கூடிய விசேஷக் கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறுகிறது.

அஞ்சலியின் படம்

'அடுத்த வீட்டுப் பெண்' படத்தை வெளியிட்ட அஞ்சலி பிக்சர்ஸார், வினஸ் ஸ்டுடியோவில் ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார்கள். தமிழ் - தெலுங்கு இருமொழித் தயாரிப்பான இப்படத்தில் அஞ்சலி தேவியுடன் - என். டி. ராமராவ் கதாநாயகனாக நடித்து வருகிறார். வேதாந்தம் ராகவய்யா இதை டைரக்ட் செய்து வருகிறார்.

தமிழ் ஹிந்தியாகிறது

தமிழில் வெளிவந்த பாசமலர், களத்தூர் கண்ணம்மா இரண்டும் ஹிந்தியில் தயாரிக்கப்பட விருக்கின்றன. தமிழில் அவற்றை முறையே ராஜாமணி பிக்சர்ஸாரும் ஏவி. எம்.மும் வெளியிட்டன.

பாசமலர் ஹிந்திப் படத்தில் அசோக்குமார், பிரதீப் குமார், அமீதா, வஹிதா ரஹ்மான், லலிதா பவர் முதலிய ஹிந்தி நக்ஷத்திரங்கள் நடிக்கப் போகிறார்கள். பிரபுராம் பிக்சர்ஸ் தயாரிக்கும் இதை பீம்சிங் டைரக்ட் செய்கிறார்.

'களத்தூர் கண்ணம்மா'வில் சாவித்திரி ஏற்று நடித்த பாத்திரத்தில் மீனாகுமாரி நடிக்கிறார். கமலஹாஸன் பாத்திரத்தில் நடிக்க ஒரு சிறுவனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

விரைவில் இவற்றின் படப்பிடிப்புகள் ஆரம்பமாக விருக்கின்றன.

துரைராஜ் டைரக்டராகிறார்

ஹாஸ்ய நடிகர் டி. எஸ். துரைராஜ் இரண்டாவதாக ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறார். முற்றிலும் புது முகங்களையே கொண்டு தயாரிக்கப் படவிருக்கும் இப்படத்தை, டி. எஸ். துரைராஜ் டைரக்ட் செய்வார்.

செய்திப் படங்கள்



தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர் திரு. ஏ. எல். சீனிவாசன் பிலிம் தயாரிக்கும் பாஷே கம்பெனியின் பொன் விழாவில் கலந்து கொள்ள பாரிஸ் சென்ற போது கொடுத்த உபசரிப்பு. திரும்பி வந்த அவருக்கு தென்னிந்திய சினிமா பத்திரிகையாளர் தலைவர் டி. வி. ராமநாத் சங்க சார்பில் கொடுத்த வரவேற்பு.

சோலார் பிலிம் துவக்கம்.

போட்டோக்கள் :
டி. ஐ. சந்தாமியான்

ஏ. வி. எம். ஸ்டுடியோ அதிபர்
திரு. ஏ. வி. எம்., திருமதி ஏ. வி
எம். ரஷ்யா நாட்டுக்கு சென்ற
போது தென்னிந்திய நடிகர்கள்
படத் தயாரிப்பாளர்கள்
கொடுத்த மாபெரும் வழியனுப்பு.



ஏ. எல். எஸ். தயாரித்து, எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் வெளியிட்ட 'திருடாதே' படத்தின் 100 நாள் விழா சென்னையில் பிளாசா, மகாலக்ஷ்மி, பாரத் தியேட்டர்களில் நடந்தது. விழாவில் தயாரிப்பாளர், நடிகர், நடிகைகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

			ரூ.	பை.
நந்தி.	231 & A பித்தான்கள் ஒன்றுக்கு		0 -	80
நந்தி.	ஷர்ட் லிங்க்ஸ்	ஜதை	2 -	50
நந்தி.	248. தோடு	,,	2 -	75
நந்தி.	டபில் ஜூம்கா	,,	6 -	00
நந்தி.	218—1 ஜூம்கா லோலாக்கு	,,	4 -	00
நந்தி.	305—2-0" முத்து வளையல்கள்	,,	16 -	00
நந்தி.	305—2-4" ,,	,,	18 -	00
நந்தி.	290—2-0" ஜடை வளையல்கள்	,,	12 -	50
நந்தி.	290—2-4" ,,	,,	14 -	00
நந்தி.	306—2-0" கல் வளையல்கள்	,,	16 -	00
நந்தி.	306—2-4" ,,	,,	18 -	00

கேட்லாக் இனாம்

LUX
Green
LUX
Yellow
LUX
Pink
LUX
Blue
'வானவில்லின்
4 வித
வண்ணங்களில்
என் லக்ஸ் !
வெண்மையிலுங் கூட!"
என்கிறார் எம்.என்.ராஜம்
LTS.93-50 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

ஆடை அலங்கார

மனோரமா கூறுகிறார்

நண்பர்கள் வீட்டில் விசேஷம் என்றால், கொஞ்சம் விலையுயர்ந்த ஆடையணிகளுடன் தானே போக வேண்டும்?

இங்கே நான் உடுத்தியிருப்பது விலையுயர்ந்த காஞ்சிபுரம் பட்டுச்சேலை. பாக்கு கலர் புடவைக்கு, இருபுறம் மெல்லிய சரிகைக் கரை கொண்ட கறுப்பு பார்டர் மிகவும் எடுப்பாக இருக்கும். நடுவில் புள்ளிகள் இருப்பதை 'புட்டா' என்று குறிப்பிடுவார்கள்.

குறுக்குக் கட்டங்கள் போட்ட சாதாரண சில்க் சோளி என்றாலும் இதற்குக் கவர்ச்சி அதிகம். பார்ப்பதற்குப் பளிச்சென்றிருக்கும்.

கோண வகிடு எடுத்து, பின்னால் சரியாக வாரி விடாத இரட்டைப் பின்னல்களை பறக்க விட்டிருக்கிறேன்.

இடது கையில் கைக்கடியாரமும் வலது கையில், கல் வளையல்களுக்கு நடுவே கண்ணாடி வளையல்களும் அணிந்திருக்கிறேன். கல் பதித்த பம்பாய் வகை நெக்லேஸ், காதணி அணிந்திருக்கிறேன்.

ஆகாய வர்ண ஜப்பான் சில்க் 'பிளெய்ன்' புடவை, உடலோடு ஒட்டி எடுப்பாக இருக்கச் செய்யும்.

சரிகைக் கட்டம் போட்ட சிவப்பு நிற காஞ்சிபுரம் பட்டுச் சோளி இந்தப் புடவைக்கு ஏற்றதாகும்.

இடது கையில் கடியாரமும் வலது கையில் புடவை வர்ணத்திற்கு ஏற்ப ஆகாச வர்ண கண்ணாடி வளையல்களும் அணிந்திருக்கிறேன்.

அதே ஆகாசவர்ண ரிப்பன் கொண்டு மடித்து விடப்பட்ட இரட்டைப் பின்னலைக் கட்டியிருக்கிறேன்.

சோளிக்கேற்ப கனகாம்பரம் சூடியிருக்கிறேன்.

கழுத்திலும் காதிலும் அணிந்திருப்பவை பம்பாய் வகையைச் சேர்ந்த நகைகளாகும்.

கையிலே சோளி நிறத்திற்கேற்ப பிளாஸ்டிக் ஒயரால் பின்னப்பட்ட சிவப்பு நிற கைப்பை வைத்திருக்கிறேன்.

சினிமாவுக்குப் போகும்போது நான் அணியும் ஆடையணிகள் இவை.

சினிமா ஆரம்பமாகும் நேரம் நெருங்கிவிட்டதே. போய் வரட்டுமா?

'பளிச்சென்றிருப்பது சிவப்பு வர்ணம் தான். நான் இங்கே உடுத்தியிருப்பதும் சிவப்பு நிறமுள்ள சிங்கப்பூர் சில்க் புடவை தான். மரஞ்செடி கொடிகள், பச்சைப் புல் ஆகியவற்றின் பச்சைநிறச் சூழ்நிலையில் சிவப்பு எப்படி பளிச்சென்று அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?

ராமர் கலர் சரிகை இழை போட்ட டபேட்டா சோளி இந்தச் சிவப்புப் புடவைக்கு ஏற்றதாகும். 'இதை சிம்பிள் டிரஸ்' என்பார்கள். ஆனால் இதற்குக் கவர்ச்சி அதிகம்.

அதிக ஆபரணங்கள் அணியக்கூடாது, இந்த ஆடையணியும் போது. ஆகவே டாலர் பதித்த மெல்லிய நெக்லேஸ் அணிந்திருக்கிறேன். காதில் ஜிமிக்கி யணிந்திருக்கிறேன். வலது கையில் இருபுறமும் கல்பதித்த வளையல்களுக்கிடையே சிவப்பு நிற வளையல்களும் அணிந்திருக்கிறேன். கன காம்பரச் சரத்தைப் பின்புறமாக வளைத்துக்கட்டியிருக்கிறேன்.

வெளியே கிளம்பி கடற்கரைப் பக்கமாக உலாவச் செல்லும் போது இந்த ஆடையணிகளுடன் தான் போவேன்.

பட ஆரம்ப விழாவுக்கு நான் கிளம்புவதானால், பிரோவிலுள்ள புடவை, சோளிகளை யெல்லாம் கலைத்து விடுவேன்! அலங்காரம் செய்து கொண்டால் போகுமிடத்தில் பளிச் சென்று இருக்க வேண்டாமா?

இங்கே நான் உடுத்தியிருப்பது நீல நிற ஷிப்பான் சில்க் புடவையாகும். அதிலே சரிகை பார்டரும் புள்ளி வேலைப்பாடுகளும் இருக்கின்றன. கருத்த நீலமும் சரிகைப் புள்ளியும் வானத்தில் நக்ஷத்திரம் மின்னுவதுபோலில்லையா!

ஆரஞ்சு வர்ண சோளியிலும் இதே போன்ற சரிகைப் புள்ளிகள் உண்டு. தலையிலே கனகாம்பர சரம் சுற்றி முன்புறம் தொங்க விட்டால் கவர்ச்சி கூடத்தான் செய்கிறது. வலது கையில் கல் பதித்த வளையல்களும் இடது கையில் கடியாரமும் அணிந்திருக்கிறேன். காலில் வெளிர் நீல நிற காலணிகள் அணிந்திருக்கிறேன்.

ஆரம்ப விழாவுக்குச் சற்று முன்னால் போக வேண்டாமா? இதோ கிளம்பியாகி விட்டது. வரட்டுமா?

கல்லூரிப் பெண்கள அணியும் நாகரீக ஆடையணிகள் இவை. வயது எத்தனை ஆகிவிட்டாலும் பாவாடை தாவணி அணிந்தால் குறைந்து விட்டது போல் தோன்றுமே!

இங்கே ராமர் கலர் பட்டு (பாட்சி) பாவாடையுடுத்தியிருக்கிறேன். அகல சரிகை பார்டர் இதற்கு எடுப்பாக இருக்கும்.

மஞ்சள் வர்ணத்தில் சிறு புள்ளிகளுடன் எம்ப்ராய்டரி செய்த பெரிய மாங்காய் பார்டரும் பளிச்சென்று இருக்கின்றன அல்லவா?

ஸாமன் பிங்க் வர்ண சில்க் தாவணி மஞ்சள், ராமர் வர்ணங்களுக்கிடையே பளிச்சென்றிருக்கும்.

கோண வகிடு எடுத்து 'ஹேர் பின்கள்' வைத்து தலைவாரி பின்னாமல் விட்டிருக்கிறேன். கழுத்தில் பம்பாய் வகை முத்து நெக்லேஸும் காதில் அதே வகை காதணியும் அணிந்திருக்கிறேன்.

தற்போது 'பாஷ'னாகிவிட்ட பிளாஸ்டிக் மணிகோர்த்த கைப்பை வைத்திருக்கிறேன். பஸ் சத்தம் புத்தகங்களுக்கு வேண்டாமா? இரண்டு கைகளிலும் கல் பதித்த ஐதராபாத் வளைகளணிந்து கொண்டிருக்கிறேன்.

ஸ்டூடியோ விஜயம்

நாகமலையிலே பாம்புகள் ஏராளம். ஆகவே நாகமலையைச் சுற்றி வாழும் மக்கள் பாம்பு பிடித்து ஆட்டுவதையும் விற்பதையும் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள். ஒரே மலைப்பிரதேச மக்களானாலும் அவர்களுக்குள்ளேயும் வடக்கு தெற்கு சண்டை வந்து விடுகிறது! வடக்கு மலைப் பக்கத்து மக்களும் தெற்கு மலைப் பக்கத்து மக்களும் விரோதம் கொண்டிருக்கின்றனர். வடக்கினர் தெற்கேயும் தெற்கினர் வடக்கேயும் போகக்கூடாது, பாம்பு பிடிக்கவும் கூடாது.

இது பழமையான எண்ணங் கொண்ட பெரியவர்களின் முடிவு.

இப்படிப்பட்ட விரோதங்கள் வலுக்கவும் சமரசம் ஏற்படவும் இளம் வயதினர்தானே—அதுவும் ஒரு யுவனும் யுவதியும் தானே காரணமாக இருப்பது வழக்கம்! இங்கேயும் அப்படித்தான் நடக்கிறது.

மருதை என்ற வாலிபன் வடக்கு நாகமலையைச் சேர்ந்தவன். கட்டிளங் காளையான அவன் வடக்குப் புறத்தான் என்பதால் உயர்ந்தவன் என்று தீர்மானித்து விட்டான் போலும்! ஆகவே தெற்குப் புறத்தில் பாம்பு பிடிக்க வருகிறான்.

அழகி என்ற தெற்குப் புறத்துப் பெண் இதைப் பார்த்து விடுகிறாள். காட்டுக் கட்டழகி யல்லவா? மேலும் தைரியமும் துடுக்குத்தனமும் மிக்கவள் அவள். ஆகவே அவனைச் சாடுகிறாள். அவள் கோபிப்பது கூட அழகாக இருப்பதால் அவன் ரசிக்க ஆரம்பித்து விடுகிறான்!

ஜெமினி கணேசன் சம்பந்தப்பட்ட காட்சி ஒன்றை அலங்கார் மூவீஸார் படமாக்கும் போது எடுத்த படம் இது.

ஊடலுக்குப் பின் பரஸ்பரம் இருவரும் மனம்விட்டுப் பேசி, ஒருவரின்றேல் மற்றொருவர் இல்லை என்ற அளவுக்குக் காதலர்களாகி விடுகிறார்கள்!

காதலர்கள் என்றால் பாட்டு வேண்டாமா?

“உன் இதய நாதமும்
என் உயிர் கீதமும்
ஒன்றாய்ச் சேர்ந்ததே
நமது காதல்”

என்று அழகிபாட அவன் மகுடி முன் நாகமாகி விடுகிறான்!

மாதேஸ்வரி பிலிம்ஸார் தயாரித்துவரும் “நாகமலை அழகி” படத்திற்காக இந்தக் காட்சி பிலிம் சென்டரில் சுடப்பட்டது. மருதையாக டி. ஆர். நடராஜனும் அழகியாக புதுமுகம் லீலாவும் நடித்தனர். ஜி. விஸ்வநாத் டைரக்ட் செய்தார்.

இந்தப் பாடலைப் பாடியிருப்பவர் பி. சுசீலா.

இந்தப் படத்தில் மற்றும் எம். ஆர். ராதா, சந்திரா, ஆனந்தன், ராகினி, எஸ். எஸ். சிவசூரியன் முதலியோர் நடித்து வருகிறார்கள். கதிர்ஒளி கதை-வசனம் எழுதியிருக்கும் இப்படத்தை சின்னி சம்பத் தயாரிக்கிறார்.



‘கொஞ்சும் சலங்கை’யில் சாக்ரடீஸ் தங்கராசுவும் நடிகநண்பரும்.

* * *

செல்வராஜ் ஒரு பெரும் செல்வந்தன். மனைவியை விட்டுக் கொட்டகையிலே வாழவைத்து விட்டு, ராணி என்ற நாட்டியக்காரியின் மோகவலையில் சிக்கி அவளை வீட்டிலேயே குடிவைத்து விடுகிறான். ராணியின் தாய் அவன் சொத்திலே கண் வைத்துக்

வலது கோடியில் கண்ணாடி அணிந்திருப்பவர்தான் டைரக்டர் டி. ஆர். ரகுநாத். ‘மருதநாட்டு வீரன்’ படப்பிடிப்பின்போது எடுத்தது இது.

1961-62-ல் என்ன நேர இருக்கிறது ?

புத்தாண்டாகிய 1961-62-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினல் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்தவிதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனல் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினல் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனல் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

PT. DEV DUTT SHASTRI, RAJ JYOTISHI,
(PPM - 3) JULLUNDUR CITY. (Punjab.)

ரூ. 1000 ரொக்க இனும்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணுயிருந்தாலும் பெண்ணுயிருந்தாலும், அக்ஷணமே வசியமாய் விடுவார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனல் மலட்டு ஸ்திரீகளுக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, வியாபாரம், பந்தயம், சூதாட்டம், வழக்கு, பரீட்சை இவற்றில் வெற்றி பெறுவீர்கள். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். ஜீவிய காலம் சுகமாகக் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1. 94. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3. 00. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3. 94. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும் இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படி பலன் இல்லையென்றல் இரட்டிப்புசார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனும்!

Principal : SHINING MESMERISM HOUSE,
(PPM-3) JULLUNDUR CITY, (Pb.)



குதூகலம் கொண்டாடுவோம்—
லைப்பாய் சோப்பினால் நீராடுவோம்...
ஆஹாஹா, கிளுகிளுக்கும்
உல்லாச நயம்... 'எல்லாம் இன்ப மயம்!'
அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக்
களைவது லைப்பாய்; குடும்ப முழுமைக்கும்
குன்றாத சுக வாழ்வு!

லைப்பாய் இருக்குமிடம்
அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்

L.26-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து வருகிறாள். ஆனால் ராணி செல்வராஜிடம் உள்ளம் பறிகொடுத்து விடுகிறாள்.

செல்வராஜின் பங்களாவை ராணி பேருக்கு எழுதி வாங்கி விடுகிறாள் அவள் தாயார். செல்வமும் போய் வீடும் போய் சாதாரண ஏழையாகி விட்ட செல்வராஜிடம் அவளுக்கு இனி என்ன இருக்கிறது? ஆகவே வீட்டை விட்டு வெளியேறுமாறு அவனிடம் கண்டிப்பாகக் கூறுகிறாள்.

"ஸ்ரீ வள்ளி"யில் பரமசிவன் வேஷத்தில் நடிகர் பார்த்திபன்!

செல்வராஜ் ஆத்திரத்தாலும் அவமானத்தாலும் புயலாகச் சீறுகிறான். ஆனாலும் அவன் செய்துவிட்ட தவறுக்கு யார் என்ன செய்ய முடியும்? ஆகவே அவர்களைக் கறுவியபடி வெளியேறுகிறான்.

ஆனால் ராணி ரொம்பவும் நல்லவள். கேவலம் காசுக்காக அவனை அவள் நாடி வரவில்லை. ஆகவே அவனில்லாமல் தனக்குமட்டும் அந்த வீட்டில் ஒன்றுமில்லை என்று தாயிடமே கூறிவிட்டு, "அத்தான்... அத்தான்!" என்று கூவியபடி அவன் பின்னால் ஓடுகிறாள்.

தாயார் விடுவாளா? ஓடிச் சென்று ராணியை இழுத்துப்



புதிதாக வந்திருக்கும் 'ஹெரால்ட் ஸ்டாண்டர்ட்' காரை, படப்பிடிப்பின்போது பார்க்கிறார் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன்.



லலா ஆடுகிறார். காமிராவுக்குப் பின்னாலிருந்து டைரக்ட் செய்கிறார் ஜானகிராம். ''ராக் - என் - ரோல்'' படப்பிடிப்பில்.

போட்டுக் கதவைப் பூட்டுகிறாள். ராணி கேவிக் கேவி அழுகிறாள்.

ஐரிஸ் மூவிஸாரின் ''பங்காளிகள்'' படத்திற்காக மேற்படி காட்சி மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

எம். ஆர். ராதா செல்வராஜாகவும் தேவிகா ராணியாகவும் பி. எஸ். ஞானம் அவள் தாயாகவும் நடித்தார்கள். ஜி. ராமகிருஷ்ணன் டைரக்ட் செய்தார்.

எம். எஸ். சோலைமலை கதை-வசனம் எழுதியுள்ள இப்படத்தில் ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி, இ. வி. சரோஜா, டி. எஸ். துரைராஜ், கே. சாரங்கபாணி, எஸ். வி. ரங்கராவ் முதலியோரும் நடித்து வருகின்றனர்.

* * *

மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் சுசிலா பாடிய பாட்டு ஒன்று ஒலிப்பதிவு செய்யப்பட்டது. தேவர் பிலிம்ஸைச் சேர்ந்தவர்கள் அங்கே இருந்ததால் அவர்கள் படத்திற்காகத்தானிருக்கும் என்று நினைத்து விசாரித்தேன்.

''கண்ணுக்கு அழகாய் மாப்பிள்ளை வந்தார்'' என்ற அந்தப் பாடல், ''தாய் சொல்லைத் தட்டாதே'' என்ற, தேவர் பிலிம்ஸ் படத்திற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்டது. ''வெங்கிமலை ரங்கன்'' என்ற பெயர்தான் ''தாய் சொல்லைத் தட்டாதே'' என்று மாற்றப்பட்டிருக்கிறது. கண்ணதாசன் இயற்றியுள்ள மேற்படி பாடலுக்கு இசையமைத்தவர் கே. வி. மகாதேவன்.

இந்தப்படம் மூன்றே மாதங்களில் தயாரித்து முடிக்கப்படும் என்று, சம்பந்தப்பட்டவர்கள்

ஐடெக்ஸ் கண் மை

சிறு குழந்தைகள் முதல் எல்லோரும் உபயோகிக்கலாம். சாஸ்திரிய முறையில் தயாரிக்கப்பட்டது.

அரவிந்த் பிந்தி குங்கும சாந்து ஆறு கலர்களில் எங்கும் கிடைக்கும்

அரவிந்த் லாபரட்டரீஸ்,
P. B. 1415 - மதராஸ் - 17

கூறினார்கள். பல புதுமுகங்கள் நடிக்கவிருந்த இப்படத்தில் புகழ் பெற்ற நடிகர்கள் நடிப்பார்கள். எம். ஆர். ராதா, எம். ஜி. ராமச்சந்திரன், அசோகன், 'குலதெய்வம்' ராஜகோபால், கண்ணாம்பா, பி. சரோஜாதேவி முதலியோர் நடிக்கும் இப்படத்தை எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்கிறார். வழக்கம்போல மிருகங்களும் நடிக்கும்.

* * *

அந்த யுவன் ஊரைவிட்டு வெளியேறி நீண்ட நாட்களாகின்றன. அவன் எங்கு சென்றான், என்ன செய்கிறான் என்பதே யாருக்கும் தெரியாது. இப்போது அவனுக்கு ஊர் நினைவும் வீட்டார் நினைவும் வந்து விடுகின்றன. சுயருபத்துடன் போக அவன் விரும்பவில்லை. ஆகவே மாறு வேடத்துடன் தன் வீட்டுக்குச் செல்கிறான். தன் தகப்பனார் வறுமையால் பிடிக்கப்பட்டு வேதனைப் படுவதைக் காண்கிறான்.

முக்தா பிலிம்ஸார் தயாரித்து வரும் "பனித்திரை" படத்திற்காக மேற்படி மாறுவேடக் காட்சி பரணியில் படமாக்கப்பட்டது. ஜெமினி கணேசன் மாறுவேடத்தில் நடிக்கும் இக்காட்சியில் பாலையா அவரது தகப்பனாராக நடிக்கிறார். தயாரிப்பாளர் வி. ஸ்ரீநிவாசன் டைரக்ட் செய்கிறார். இதில் மற்றும் எஸ். வி. சுப்பையா, அசோகன், தங்கவேலு, எம். சரோஜா, லக்ஷ்மி பிரபா முதலியோரும் நடிக்கிறார்கள். ஜி. பாலசுப்பிரமணியம் கதை - வசனங்களை எழுதியிருக்கிறார்.

* * *

பி. ஏ. குமார் புரொடக்ஷன்ஸின் சார்பில் தயாரித்து வந்த "தளபதியின் தாய்" படப்பிடிப்பு சிறிது காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததல்லவா? இப்போது அந்தப் படம் வேகமாக வளர ஆரம்பித்திருக்கிறது. சமீபத்தில் எம். வி. ராஜம்மா சம்பந்தப்பட்ட சில காட்சிகள் பரணியில் படமாக்கப்பட்டன. எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா, ஆனந்தன், 'குலதெய்வம்' ராஜகோபால், சந்திரா, பி. எஸ். வீரப்பா, பி. எஸ். ஞானம் முதலியோர் நடிக்கும் இப்படத்தை கே. சங்கர் டைரக்ட் செய்கிறார். சக்தி கிருஷ்ணசாமி கதை - வசனம் எழுதியிருக்கிறார். தம்பு ஒளிப்பதிவு செய்யும் இதன் இசையமைக்கும் பொறுப்பு விஸ்வநாதன் - ராமமூர்த்தியிடம் விடப்பட்டிருக்கிறது.

ஆல்மன்டைன்
பலவிருத்தி லேகியம்
டோனடெல்
பிரசவத்திற்குப் பிறகு லேகியம்

நஞ்சன்கூடு - பல்பொடி

ஜிஞ்சிப்
அஜீர்ண, பித்தசமனி
நீலா
கூந்தல் தைலம்
டிகாகோ
ஆரோக்கிய சர்பத்

சேவல் மார்க்கு (ரிஜிஸ்டர்ட்டு) அம்பர் பத்தி, கஸ்தூரி பத்தி, ஜவ்வாது பத்தி, சந்தன முகப்பவுடர் (முகப்பரு தடுக்க) அரகஜா, புனுகு, அரகஜா பவுடர், ப்ளவர் டஸ்டு பாக்கெட் (ஆடை பெட்டியில் வைக்க)

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, சென்னை-1

நினைத்ததும் நடந்ததும்

புஷ்பலதா

இப்பொழுது நினைத்தால் கூட எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது, பள்ளியின் ஆண்டு விழாவன்று நான் மேடையில் தோன்றினேன். பாம்பு நடனமாடினேன். விழாவுக்குத் தலைமை வகித்த திரு. பி. ஏ. ராஜு செட்டியார் எனக்கு ஒரு வெள்ளிக் கோப்பையைப் பரிசளித்து விட்டு, "இந்தச் சிறுமியின் பாம்பு நடனத்தைப் பார்க்கும்போது குமாரி கமலாவின் நடனம் பார்ப்பது போலவே இருக்கிறது. இவளுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது" என்று பாராட்டி வாழ்த்தினர்.

அப்போதுதான் நான் பரத நாட்டியம் பயில ஆரம்பித்திருந்தேன். செட்டியாரவர்களின் வாழ்த்துரை எனக்கு நடனத்தில் மேலும் பிடிப்பையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது. ஆகவே முழு மூச்சுடன் பரத நாட்டியம் கற்றேன்.

இந்த ஆர்வம் மேலும் வளரும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தஞ்சாவூர் மணி பிள்ளையிடம் நடனம் பயின்ற நான் அவர் காலமாகி விட்டதால், பிறகு பழனிஸ்வாமி என்பவரிடம் நடனப் பயிற்சியைத் தொடர்ந்தேன். முதன் முதலாக கோவை கீதா ஹாலில் அரங்கேற்றமும் நடைபெற்றது. வடநாட்டில் பல இடங்களில் நடனம் ஆடினேன். அப்போது வார்தா காங்கிரஸ் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே நேருஜி மற்றும் ஏராளமான தலைவர்களின் முன்னிலையில் நான் நடனமாடினேன். ஆகவே அது முதற்கொண்டு

எனது நடன ஆர்வம் அளவிட முடியாததாகி விட்டது.

கோவை கீதா ஹாலில் சி. எஸ். ரத்னுபாய் மூலமாக சி. எஸ். ரதன சபாபதி முதலியார் முன்னிலையில் எனது நடன அரங்கேற்றம் நடைபெற்றபோது கிடைத்த பாராட்டு உற்சாக மூட்டியது. செட்டியாரவர்களின் பாராட்டு மேலும் உற்சாக மூட்டியது. நேருஜியின் முன்னிலையில் ஆடிய பின் நடன ஆர்வம் கொழுந்து விட்டு வளர்ந்தது.

ஆனால் நான் நினைத்தபடியே எனது நடனக் கலை பூரண மடைந்ததா? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். பிரபல ஸ்பெஷல் நாடக ஹார்மோனியக்காரரான திருமதி சி. எஸ். ரத்னுபாய் என்னிடம் பேரன்பு கொண்டு, தன் குழந்தைபோலப் பாவித்து ஆதரவளித்து வந்தார். கோவைக்கு வர நேரும்போதெல்லாம் சினிமா நடிகை எஸ். ஆர். ஜானகி, ரத்னுபாய் இல்லத்தில்தான் தங்குவது வழக்கம். ஒரு சமயம் அப்படி வந்திருக்கும்போது என்னை ரத்னுபாய் அவரிடம் அறிமுகப்படுத்தினர். ஏராளமான பள்ளி நாடகங்களில் நடித்திருந்த நான் சினிமாவில் நடித்துப் புகழ் பெறுவேன் என்று ஆசி கூறிய எனது உபாத்தியாயர்களைப் போல, ஜானகியும், "நீ சினிமாவில்

புகழ் பெற முடியும்" என்று வாழ்த்தினார். அங்கே உடுமலை நாராயண கவியும் வந்திருந்தார். நானும் என் சகோதரியும் இருந்தோம். அவர் எப்போதுமே குறும்பாகப் பேசிக் கேலி செய்வார். ஆகவே, "உனக்கு நடிப்பும் வராது. ஒன்னும் வராது. பேசாமெ கல்யாணம் பண்ணிகிட்டு நாலு குழந்தையைப் பெத்துக்கோ" என்று கூறி விட்டு, என் சகோதரியைக் குறிப்பிட்டு, "இவளுக்கு நல்ல திறமை யிருக்கு. நல்லா முன்னுக்கு வருவா" என்றார். என் சகோதரி நாடகங்களில் நடித்ததில்லை! திருமணமாகி குழந்தை குட்டிகளும் பெற்று விட்டாள்!

என்னை வாழ்த்தியதுடன் நில்லாமல் சென்னைக்கு அழைத்து வந்து பல கம்பெனிகளிலும் சிபாரிசு செய்தார் ஜானகி. ஆனால் சிறுமியான எனக்குத் தகுந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நடிகையாகிப் புகழ் பெறலாம் என்ற ஆசையுடன் வந்த நான், நிராசையுடன் ஊர் திரும்பி மீண்டும் பள்ளியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன்.

சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற எனது ஆர்வமும் வெறியும் காரணமாக பள்ளியில் படிப்பில் என் மனம் செல்லவில்லை. ஆகவே மூன்றும் பாரத்துடன் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, ஜானகியுடனும் எனது தகப்பனாருடனும் சென்னைக்கு வந்தேன். ஜானகி எனக்காகப் படாதபாடுபட்டுப் பலரிடம் சிபாரிசு செய்தார். அவரது முயற்சி எளிதில் பலனளிக்கவில்லை. கடைசியில் ஒரு மாதிரியாக திரு. எம். ஜி. ஆர். அவர்களின் நாடக மன்றத்தில் நடிகையாக மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தமானேன். இன்பக் கனவு, அட்வகேட் அமரன், சுமைதாங்கி நாடகங்களில் முக்கிய பாக மேற்று நடித்து வந்தேன்.

நான் சினிமாவில் நடிப்பதற்காகச் சென்னை வந்தேன். ஆனால் நினைத்தது நடக்காமல் நாடக நடிகையாகப் பணியாற்றி வந்தேன்.

எனது கலைவாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டு சினிமாவில் நடிக்கும் சந்தர்ப்பம் வராதா என்று நினைத்த சமயத்தில் எம். ஜி. ஆர். அவர்கள் மூலமாகச் சில படங்களுக்கு ஒப்பந்தமானேன். எனது மகிழ்ச்சி எல்லை கடந்ததாக இருந்தது. ''சிரிக்கும் சிலை'', ''அட்வகேட் அமரன்'', ''அதிரூப அமராவதி'', ''கலையரசி'', ''சிலம்புக் குகை'' ஆகிய படங்களில் நடிக்க ஒப்பந்தமானேன். ஆனால் அவை என் ஆசையைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை. அந்தப் படங்கள் வேகமாக வளரவுமில்லை.

திரு. எம். ஜி. ஆர். அவர்களின் அனுமதியுடன் நாவல் பிலிம்ஸின் ''மகனே கேள்'' படத்தில் நடிக்க ஒப்பந்தமானேன். ஆனால் துரதிருஷ்டவசமாக மிகவேகமாக வளர்ந்த அந்தப் படம் முடிவுறாமல் நின்று விட்டது.





மூன்றாண்டு கால ஒப்பந்தத்தில் எம். ஜி. ஆர். மன்ற நாடக நடிகையாகச் சேர்ந்த நான் மேலும் இரண்டு ஆண்டுகளும் அதிலிருந்தேன்.

கலையுலக வாழ்விலிருந்து விலகி விடலாமா என்று நான் நினைத்தேன். நான் நினைத்ததெல்லாம் நடக்காமல் போனதால் விலகிவிட நினைத்தேன்.

ஆனால் -

இப்போதும் நான் நினைத்தபடி நடக்கவில்லை!

தேவர் பிலிம்ஸ் அதிபர் திரு. சின்னப்பா தேவர் அவர்கள் என்னை, தான் தயாரிக்க விருந்த படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்தார். எனது மகிழ்ச்சிக்கு அப்போது எல்லையே கிடையாது.

தேவர் பிலிம்ஸாரின் "கொங்கு நாட்டு தங்கம்" படத்தில் நான் கதாநாயகியாக நடித்தேன். குறுகிய காலத் தயாரிப்பான அதில் நான் நடிக்கும்போது, அவ்வப்போது தேவரவர்கள் எனக்கு ஊக்க மூட்டி உற்சாகப் படுத்திக் கொண்டே யிருந்தார்கள். அவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

சோக பாத்திரங்களிலும் சுட்டிப் பெண்ணின் பாத்திரத்திலும் நடிப்பது என்றால் எனக்குக் கொள்ளை ஆசை. சட்டென்று மக்கள் மனதைக் கவரக்கூடிய பாத்திரங்களல்லவா இவை!

எனக்கு இப்போது சில படங்களில் நடிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளின் மூலம் எனது ஆசைகள் நிறைவேறுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கேற்பட்டிருக்கிறது.

நினைத்தது ஒன்று- நடந்தது ஒன்றாக இருந்த நிலைமை மாறி, நினைப்பது நடப்பது என்ற நிலை ஏற்பட ஆரம்பித்திருக்கிறதல்லவா? நினைத்தது நடக்க ஆரம்பித்த போதே கதாநாயகியாக நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்து விட்டதல்லவா?

புகைப் படம் :
எஸ். வி. சம்பத்குமார்

அமைப்பு :
ம. தேவராஜ்

இவ்வழகி உபயோகிப்பது **ஜேய்** சோப்...

நீங்களும் ஏன் உபயோகிக்கக்கூடாது?

ஜேய் சோப் அளிக்கும் மோகன எழில் உங்களுடையதே.. மிருதுவாக மேனிக்கு மெருகிடுகிறது...பரவசப்படுத்தும் நறுமணம் கமழுவது, என்றிருந்தாலும் அது மேனியழகிற்கு சிறந்ததோர் சோப். எப்பொழுதும்..ஜேய் சோப் உபயோகியுங்கள்.

டாடா தயாரிப்பு

TJY-5



அறிமுகம்

பணக்காரரான வெங்கடாசலத்திற்கு சரளா ஒரே மகள். அதே போல ஏழைக் குமாஸ்தாவான ஏகாம்பரத்திற்கு ஆனந்தன் ஒரே மகன். வெங்கடாசலம் பண பலத்தால் தீமை செய்வதில் பூரிப்பு கொள்ளுகிறவர். மக்கள் சேவையே மாதவன் சேவை என்று நம்பும் உத்தமன் ஆனந்தன். பார்வதி வெங்கடாசலத்தின் தாயார். மல்லிகா குழந்தைமுதல் அந்த வீட்டில் வளர்ந்த வேலைக்காரி. கடைக் குமாஸ்தா சிகாமணி ஆனந்தனின் தோழன். நாகு வெங்கடாசலத்தின் வேலைக்காரன். பாமா ஏகாம்பரத்தின் மைத்துனர் மகள். செல்லம் அவர் மனைவி.

வழக்கறிஞுகப் பணியாற்ற வேண்டியஆனந்தன்,வறியர்களின் துயர் துடைக்க அந்த ஊர் நகர சபைத் தேர்தலுக்கு நிற்கிறான். ஆனந்தனை வாபஸ் பெறச்செய்ய வெங்கடாசலம் சூழ்ச்சி செய்கிறார்.

ஒன்று

போய் வருகிறேன்

சரளாவின் திருமணத்திற்காக தரகர் பல வரன்களைப் பார்த்து தானும் நிறைய சம்பாதிக்கிறார். பல பையன்கள் வருகிறார்கள். ''கல்யாணம் பண்ணிக்கிறது எதற்காக?'' என்று கேள்வி கேட்டு, பதிலளிக்க அவர்கள் திணறும் போது அனுப்பிவிடுகிறார், வெங்கடாசலம். அப்போது அவரைச் சந்திக்க ஆனந்தன் வருகிறான். சரளா அவனுக்கு ஏற்கெனவே அறிமுகமானவள். காரை வேகமாக ஓட்டிப்போய் அவன்மேல் சேற்றை

பாத்திரங்கள்

சிவாஜி கணேசன்	ஆனந்தன்
சாவித்திரி	சரளா
சாந்தி	மல்லிகா
எஸ். வி. ரங்கராவ்	வெங்கடாசலம்
டி. எஸ். பாலையா	ஏகாம்பரம்
டி. ஆர். ராமச்சந்திரன்	சிகாமணி

கதை :
ஆச்சார்ய ஆத்ரேயா

வசனம் :
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

டைரக்ஷன் :
ஏ. சுப்பாராவ்

வாரி இறைத்ததுடன் பம்மையுடன் வாதிட்டவள். ஆகவே அந்தக் கேள்விக்கு அவன் பதிலளிக்கிறான்.

ஆன : வரம்புமீறி பேசற பெண்களின் வாய்த்துடுக்கை அடக்கி முரட்டுத்தனமா நடக்கற பெண்களுக்கு மூக்கணாங்கயிறு போடறதுக்குத்தான் கல்யாணம் பண்றது.

வெங் : என்னய்யா, பதில் ஒரு மாதிரியா இருக்கு?

ஆன : கேள்வியும் அப்படித்தானே இருந்தது? நான் வந்த வேலையே அதில்லிங்களே.

வெங் : பின்னே எதுக்காக வந்தே?

ஆன : நகரசபைத்தேர்தலிலே நானும் நிக்கறேன். அதுக்கு உங்க உதவி தேடி வந்திருக்கிறேன்.

வெங் : ஓஹோ, ஆனந்தங்கிறது நீ தானா?

ஆன : ஆமாம்.

வெங் : குமாஸ்தா ஏகாம்பரத்தின் மகன்...

ஆன : நான்தான்.

வெங் : ஏம்பா, உன்னை பி. ஏ. பி.எல். படிக்க வைக்க உங்கப்பா எவ்வளவு பாடு பட்டிருப்பார்? வக்கீல் தொழிலைக் கவனிச்சு, வயசான உங்க அப்பா அம்மாவை வசதியோட வாழவைக்க வேண்டாம்? அதுதானே உன்னுடைய முதல் கடமை.

ஆன : என்னுடைய கடமையை நான் மறக்கல்லே. அதோட ஒவ்வொரு மனிதனுக்கும் வீட்டுப்பற்று எவ்வளவு முக்கியமோ அதே போல நாட்டுப்பற்றும் அவ்வளவு முக்கியம். இப்ப நம்ப ஊர் நகரசபையை எடுத்துக்குங்களேன். அங்கே சோம்பேறித்தனமும், சுயநலமும் மலிஞ்சு போயி கிடக்கு. சில பெரிய ருசி கண்ட பெருச்சாளிகள் வெளியே தெரியாமே உள்ளுக்குள்ளேயே சுரண்டிக்கிட்டே இருக்காங்க.

வெங் : அவங்களை உன்னாலே என்ன செய்ய முடியும்?

ஆன : முடிஞ்சா திருத்தி நல்வழிப் படுத்த முடியும். முடியலேன்னா அதுக்கு வேற வழியும் இருக்கு.

வெங் : அதுவரைக்கும் உன்னை விட்டு வச்சிருப்பாங்களா?



ஆன : ஒரு நல்லவனுடைய மரணம் பல அயோக்கியர்கள் திருந்தறதுக்கு காரணமாயிருக் கட்டுமே. அதோட நான் என்னைப் பத்திக் கவலைப்படலே.

சர : இத பாருங்க. உங்களுக்கு ஊருக்குள்ளே ஏகப்பட்ட எதிர்ப்பு இருக்குன்னு நீங்களே ஒத்துக் கிறீங்க. அப்படி மரணத்துக்கும் துணிஞ்சு ஜெயிச்சு வரதாகவே வச்சுக்குவோம். தனி மனிதரான நீங்க நகர சபைக்குள்ளே இருந்து அப்படி என்ன சேவை செஞ்சிடப் போறீங்க?

வெங் : கரெக்ட்.

ஆன : தன்னம்பிக்கை உள்ள வனுக்கு தன்னைச் சுற்றி ஒரு கூட்டம் என்னத்துக்கம்மா? பாட முடியாதவனுக்குத்தான் பின் பாட்டுக்காரன் தேவை. கும்பல் சேர்றதினாலே கூச்ச லும் குழப்பமும் அதிகமா குமே தவிர, உருப்படியா ஒண் ணுமே செய்ய முடியாதும்மா. என்னுடைய கொள்கையை சுருக்கமா சொல்றேன் கேளுங்க ளேன். இந்த மாபெரும் தேசத் துக்கு சுதந்திரம் வாங்கித் தந்த அரசியல் காந்தியை விட, குஷ்ட ரோகிகளின் ரணங்களைத் தொட்டு சேவை செய்த தொண் டன் மகாத்மாவைத் தெய்வமாக நான் வணங்குகிறேன். அந்த வழி யிலே நின்னு சேவை செய்ய முடி யுமான்னு பாக்கிறேன். அதுக்கு ஆதரவு கொடுக்க முடிஞ்சா கொடுங்க. இல்லேன்னு விடுங்க.

சர : பேஷ்...பேஷ்....சத்தான பதில்.

வெங் : அடச்சே, என்னய்யா சொல்லிட்டான்?

சர : அவர் பேசறதிலேயும் நியாயம் இருக்கப்பா. எத்தனை உறுதி பாத்தீங்களா?

போகிறார்கள்.

இரண்டு

பெரியவர்கள் குற்றம்

ஆனந்தன் வாபஸ் வாங்காத தால் ஏகாம்பரத்தை வேலையினின் றும் நீக்கி விடுகிறார் வெங்கடா சலம். துரதிருஷ்டவசமாக இடி, மின்னலால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக விபத்தில் சரளாவின் கால் முறிகிறது. மனைவியிடம் அது பற்றி மகிழ்ச்சியுடன் ஏகாம் பரம் கூறும்போது ஆனந்தன் வரு கிறான்.



ஆன : என்னப்பா, யாருக்கப்பா காலு ஒடிஞ்சு போச்சு?

ஏகா : வேற யாருக்கு ஒடியும்? முப்பத்தஞ்சு வருஷ காலமா நாம சாப்பிட்டு வந்த சோத்திலே மண்ணை அள்ளிப் போட்டானே அந்த வெங்கடாசலம், அவன் பொண்ணுக்கு.

ஆன : ச்சு ச்சு...

ஏகா : என்னடா கௌவி அடிக்கிறே? அவன் செய்த குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்கிருண்டா. இனிமே அந்த நொண்டிப் பொண்ணை எவன் கட்டிக்கப் போருன்னு நான் பாக்கறேன். அதைப் பாத்து பாத்து அவன் ஏங்கணும்; நான் சந்தோஷப்படணும்.

ஆன : அப்பா, என்ன இப்படியெல்லாம் பேசறீங்க? அடுத்தவங்க கஷ்டப்படுறதைப் பாத்து சந்தோஷப்படற மனுஷாளும் இருக்காங்களே.

ஏகா : சொல்லு ... சொல்லேண்டா ... பூராவையும் சொல்லு.

ஆன : நான் என்ன சொல்றது? நீங்களே புரிஞ்சுக்குங்க.

ஏகா : அப்ப நீ என்னை மட்டமான ஆளுன்னு நினைக்கிறியா?

ஆன : நான் உங்களை சொல்லலே அப்பா. பொதுவாச் சொல்றேன்.

ஏகா : நானும் பொதுவாத்தான் சொல்றேன். டேய், அதான்டா கடவுளுடைய தண்டனைங்கிறது.

ஆன : அப்பா, தகப்பன் செய்த தவறுக்காக பிள்ளைகள் தண்டனை அனுபவிக்கணுங்கறது தான் கடவுளுடைய நியதியா இருந்தா அதை எதிர்க்கிற முதல் ஆளு நான் ஆகத்தான் இருப்பேன்.

ஏகா : ம்...ஊ ஹூம் ... இப்ப நீ செஞ்ச குத்தத்துக்கு என்னை வேலையிலேந்து வெளியே அனுப்பிச்சிட்டாங்களே, இது யாரு குத்தம்?

ஆன : அது என் குத்தமா?

ஏகா : பின்னே என் குத்தமா?

ஆன : சில பெரிய மனுஷாள் குத்தம்.

ஏகா : இவன் என்ன ஆளுன்னே எனக்குப் புரியலையே.

போகிருர்.

மூன்று

டாக்டர் கூறிய யோசனை

உள்ளூர் டாக்டர்கள் பார்த்துவிட்டு சரளாவின் காலைக் குணப்படுத்த முடியாது என்று கூறிவிடவே, டெல்லியிலிருந்து மூர்த்தி என்ற நிபுணரை வரவழைக்கிருர் வெங்கடாசலம். அப்பா இல்லாத போது சரளாவே டாக்டரிடம் கேட்கிருள்.

சர : இது வரைக்கும் வந்த டாக்டர்கள் எல்லாம் குணமாயிடும் குணமாயிடும்னு சொல்லிட்டுப் போனுங்க. நீங்க பெரிய

டாக்டர். பொய் சொல்ல மாட்டீங்கன்னு நிச்சயமா நம்பறேன். சொல்லுங்க டாக்டர், என் கால் குணமாகுமா? சொல்லுங்க டாக்டர். என் சின்ன இருதயத்துக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியையும் தாங்கக் கூடிய சக்தி இப்ப உண்டாயிடிச்சு. இது என்ன ஆகுமோங்கற கவலையிலே ராப்பகலா தூக்கமில்லாமே அவதிப் படறதை விட இன்னது தாங்கற முடிவு தெரிஞ்சுட்டா என் இதயம் நிச்சயம் ஆறுதல் அடைஞ்சிடும். சொல்லுங்க டாக்டர், குணமாகாதுல்லே ...சொல்லுங்க.



டாக்: ஆகாதும்மா...குணமாகாது. இது ஒரு டாக்டருடைய முடிவுதான், விதியின் முடிவு வேறு விதமா இருக்கலாம்.

சர: விதியின் முடிவு எப்படி வேணும்னாலும் இருக்கட்டும் டாக்டர்.

டாக்டர் வெங்கடாசலத்திடம் போய் குணமாகாது என்று கூறுகிறார்.

வெங்: முடியாதா? முடியவே முடியாதா டாக்டர்? நீங்களுமா இந்தப் பதிலைச் சொல்றீங்க? முடியாதுங்கறதை தெரிஞ்சுக்கவா இவ்வளவு நம்பிக்கையோட உங்களை வரவழைச்சேன்? தயவு செய்து இனி ஒரு தடவை அந்த பதிலை சொல்லாதீங்க. அவள் காலைக் குணப்படுத்த என்னென்ன செய்யணுமோ அதை மட்டும் சொல்லுங்க. லட்சக் கணக்கான ரூபாயை வாரி இறைக்கத் தயாரா இருக்கேன். அமெரிக்கா, லண்டன், ஸ்விட்ஜர்லந்து எங்கு வேண்டுமானாலும் அழைச்சுக்கிட்டுப் போவோம். புறப்படுங்க டாக்டர், புறப்படுங்க. ப்ளீஸ்...

டாக்: செல்வாக்கினாலும் பணத்தினாலும் எல்லா வியாதிகளையும் குணப்படுத்த முடிஞ்சா இயற்கையின் நியதியே மாறி விடுமே.

வெங்: (**கவலையுடன் அமர்ந்தவாறு**) ம்...

டாக்: மிஸ்டர் வெங்கடாசலம்! உங்க பெண்ணுக்குத் திருமணம் ஆயிருக்கா?

வெங்: இல்லையே டாக்டர். அந்த திருமணப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் நேரத்திலே தானே இந்தத் தீமை நடந்திடுச்சி. அவளுக்கு எதிரி நான்தான். அவள் வாழ்வை குட்டிச் சுவராக்கின பாவி நான்தான். அவளுக்கு காலாகாலத்திலே ஒரு கல்யாணம் பண்ணி இருக்கணும். நான் தவறிட்டேன்...தவறிட்டேன்.

டாக்: ச்சு ச்சு...திருமணம் ஆயிருந்தா, அவள் கால் குணம் அடைய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட இடம் உண்டு.

வெங்: என்ன, திருமணம் நடந்தா அவள் கால் குணமாயிடுமா? சொல்லுங்க டாக்டர்.

சோபாவில் இருந்து எழுந்திருக்கிறார்.

டாக்: அவ்வளவு உறுதியா என்னாலே சொல்ல முடியாது. வெளி நாட்டிலே நடந்த ஒரு அபூர்வ சம்பவத்தைக் கொண்டு

சொல்றேன். தற்செயலா விபத்து ஏற்பட்டு கால் முடமான ஒரு பெண், முதல் முறையாக கர்ப்பம் தரித்தாள். பிரசவ நேரத்திலே அந்த வேதனை பொறுக்க முடியாமல் தன்னையும் மீறி எழுந்து நடந்தாள். இயற்கை அவள் கால்களைக் குணப்படுத்தி விட்டது.

வெங்: அப்படியா டாக்டர்...! உடனே அவளுக்கு கல்யாணம் செய்து வைக்கிறேன்.

டாக்: ஆனால் இதுமுடிவல்ல. முயற்சி தான். இதிலே வெற்றி கிட்டுமா, கிட்டாதான்னு என்னாலே நிச்சயம் சொல்ல முடியாது.

வெங்: இருக்கட்டும் டாக்டர். எந்த வழியுமே இல்லேங்கிற நேரத்திலே இப்படி ஒரு வழி இருக்குங்கறதையாவது சொன்னீங்களே, அது போதும் எனக்கு.

டாக்: செய்து பாருங்க. வெற்றி கிட்டணும்கிறதுதான் என் பிரார்த்தனை.

நான்கு

மாங்கல்ய பிச்சை

வெங்கடாசலம் ஏகாம்பரத்திடம் வந்து டாக்டர் கூறியதை எடுத்துச் சொல்லி, ஆனந்தனுக்கு சரளாவை மணமுடிக்கக் கோருகிறார். டாக்டர் கூறுகிறபடி குணமாகாவிடில் சரளாவை விலக்கி விட்டு ஆனந்தன் வேறு மணம் செய்து கொள்ளலாமென்றும் சொத்தில் பாதியைத் தருவதாகவும் எழுதிக் கொடுக்கிறார், வெங்கடாசலம். சரளாவிடமும் பத்திரத்தில் அவளறியாமலே கையெழுத்து வாங்குகிறார்கள். ஆனந்தன் ஏகாம்பரத்தைத் திட்ட வெங்கடாசலமே அவனிடம் தனித்துப் பேசுகிறார்.

வெங்: ஆனந்! அரசியல்வாதிகளின் மனம் எவ்வளவு தூரம் அரக்கத்தனமா உருவாகுங்கிறதை இன்னிக்குத்தான் அனுபவ பூர்வமா தெரிஞ்சுக்கிட்டேன். தியாகம், அன்புங்கற பதங்களை அகராதியிலேருந்து எடுத்துப் போதுமேடை வரைக்கும் கொண்டு வந்திருக்கிறோமே தவிர அவைகளை நடைமுறையிலே, செயல்படுத்தற அளவுக்கு நாம் இன்னமும் முன்னேறலேங்கிறதை நினைக்கும்போது...

ஆன: இது சந்தர்ப்ப வாதம்.

வெங்: ஆனந்! நான் சந்தர்ப்ப வாதியாயிருக்கலாம். ஆனால் உன்னை என் பக்கம் சேர்ந்து என் கட்சியைப் பலப்படுத்திக்கணுங்கிற அவசியமோ, அவசரமோ எனக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்பட்டது கிடையாது.

ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது.

குர: ஆனந்தன்...ஒழிக.

குரல்: ஆனந்தன் ... ஒழிக ... ஆனந்தன்...ஒழிக. எங்கள் ஓட்டு ...சுந்தரம்மாவுக்கே ... எங்கள் ...ஓட்டு சுந்தரம்மாவுக்கே ... எங்கள் ஓட்டு சுந்தரம்மாவுக்கே.

வெங்: அதோ பார், அத்தனை பேரும் என்னுடைய ஆட்கள். அவ்வளவு பேரையும் உனக்கு ஓட்டுப் போடச் சொல்லி உன்னை ஜெயிக்க வைக்கிறேன். நீ பதவிக்கு வா.

ஆன : எதுக்காக? என் சுதந்திரத்தைப் பறிச்சு என்னை உங்க கைப்பொம்மையாக ஆட்டி வைக்கவா?

வெங் : இல்லே ஆனந்த்...நீ எந்த வகையிலும் எனக்குக் கட்டுப்பட வேண்டாம். உன் வழியிலே நீ தாராளமாப் போகலாம். இதிலேயும் ஏதாவது...

ஆன : சூழ்ச்சி இல்லேன்னு என்னுலே எப்படி நம்ப முடியும்?

வெங் : எதைக் கொண்டு இப்படிச் சொல்றே ஆனந்த்?

ஆன : தேர்தல் சமயம் பார்த்து திருமணத்தைப் பத்திப் பேச வேண்டிய அவசியமென்ன?

வெங் : அதனுலே...

ஆன : அதனுலே தான் சொல்றேன். இது நீங்க செய்யற தேர்தல் தில்லு முல்லு காரியத்திலே, இந்தத் திருமணமும் ஒண்ணுன்னு.

வெங் : ஆனந்த், கன்னிப் பருவத்திலே ஊனமடைஞ்ச என் செல்வ மகளின் எதிர்காலம் என்னனங்கிற ஒரே கேள்விதான் என் ஹிருதயத்திலே நிறைஞ்சிருக்கே தவிர, இன்னிக்கு வெற்றியும், நாளைக்குத் தோல்வியும் தரக்கூடிய தேர்தலைப் பத்தியோ அரசியலைப் பத்தியோ எனக்கு நினைக்கவே நேரமில்லை. ஆனந்த், இந்தத் தேர்தலுக்கும் திருமணத்துக்கும் தொடர்பே கிடையாது. போகட்டும். தகப்பன் செய்த தவறுக்கெல்லாம் பிள்ளைகள் கண்டனை அனுபவிக்கணுங்கிறது உன்னுடைய கொள்கையா?

ஆன : கிடையவே கிடையாது.

வெங் : பின்னே சரளாவை மணக்க நீ ஏன் தயங்குறே? அவ நொண்டிப் பொண்ணுங்கிறதுக்காகவா?

ஆன : அது என் சிந்தனைக்கே எட்டாத விஷயம். கைகால் முடமானவங்க வாழக்கூடாதுங்கற கருத்துமுடங் கொண்டவன் அல்ல நான்.

வெங் : அவ கால் மட்டும் முடமாகலே ஆனந்த், அவ வாழ்க்கையே முடமாகிப் போச்சு. அப்படி முடமான பொண்ணுக்கு ஊன்று கோலாயிருந்து வழி நடத்திச் செல்ல மாட்டியா? அவளுக்கு வாழ்வு கொடுக்க மாட்டியா? ஆனந்த், இந்தத் தியாகத்தைச் செய்ய உன்னுல் முடியாதா? என்ன இப்படிச் சிந்திக்கிறே?

ஆன : இந்தக் கல்யாணத்துக்கு என்னைத் தேர்ந்தெடுத்த காரணம்? நீங்க நினைச்சா வேறே ஆளைத் தேடிக் கொண்டு வர முடியாதா?

வெங் : நான் தேடிப் போகணுமா? பணம் இருக்குன்னு தெரிஞ்சா பலபேர் என் வீட்டைத் தேடி வரமாட்டாங்களா? அப்படிப் பணத்துக்காக வர்றவங்ககிட்டே...ஆனந்த், இதோ பார் இந்தப் பால் வடியும் முகத்தை ஒப்படைக்கச் சொல்றியா? ...செல்வத்துக்காக வர்றவன் கிட்டே என் செல்வியை ஒப்படைச்சு அவ வாழ்வு சின்னபின்னமாகணுமா? அவ கழுத்து நிறைஞ்சா போதுமா? கருத்து நிறையவேண்டாமா? மாங்கல்யம்

கிடைச்சால் போதுமா? அவளுக்கு மன மகிழ்ச்சி கிடைக்க வேண்டாமா? ஆனந்த், வருமானம் நிறைய வரக்கூடிய வக்கில் தொழிலை உதறி எறிஞ்சுட்டு எத்தனையோ ஏழை மக்களுக்கு வாழ்வு கொடுக்கணும்னு துடிதுடிக்கிறியே, உன் ஹிருதயத்திலே என் மகள் ஒருத்திக்கு மட்டும் இடமில்லையா?

ஆன: சரஸா ஏழை வீட்டுப் பெண்ணல்லவே.

வெங்: அப்படின்னா பணக்காரன் மகங்கிற ஒரே காரணத்துக்காகத்தான் மறுக்கிறியா? சொல்லு...இந்த க்ஷணத்திலிருந்து சரளா யாரோ...நான் யாரோ...அவள் அனாதை. அந்த அனாதையை நீங்க அழைச்சுகிட்டுப் போங்க. அவளைக் கல்யாணம் செய்துகிட்டு வாழ்வு கொடு. இன்னமும் உனக்கு நம்பிக்கை போறக்கலேன்னா எனக்குள்ள

சொத்து சுகம் எல்லாத்தையும் ஏழைகளுக்கு எழுதி வைச்சுட்டு உன் வீட்டுக்கு வர்றோம். அப்போதாவது அவளுக்கு நீ மாங்கல்ய பிச்சை போடு ஆனந்த். சொல்லு ஆனந்த்...சொல்லப்பா.

ஆனந்தன் ஒன்றும் சொல்லாமல் போய் விடுகிறான். வெங்கடாசலம் கலக்கத்துடன் நிற்கிறார். ஆனந்தன் நேரில் சென்று சரளாவின் நிலையறிந்து திரும்புகிறான். ஆனந்தன் சரளாவை மணக்கிறான். ஆனந்தன் தேர்தலிலும் வெற்றி பெறுகிறான். சேர்மன் பதவி கிடைக்கிறது.

ஐந்து

ஆனந்தனின் பேச்சு

ஏழைமக்கள் கறி காய் விற்றுப் பிழைக்குமிடத்திலிருந்து அவர்களைச் காலி செய்யுமாறு கேட்டு கோர்ட்டு உத்திரவுடன் வருகிறார் ஒரு கவுன்சிலர்.

கவு: எத்தனை தடவை சொல்றது?...சொன்னா மரியாதையா கேக்கமாட்டீங்க? கோர்ட்டிலேருந்து உத்தரவு வாங்கியாச்சு. ம்...காலி பண்ணுங்க.

பெண்: அய்யா திடீர்ன்னு போகச் சொன்னா நாங்க எங்கேய்யா போறது?

கவு: எங்கேயாவது போங்க. ம்...என்னய்யா பாத்துகிட்டு நிக்கிறீங்க? தூக்கி எறிங்கய்யா எல்லாத்தையும்.

பெண்: அய்யா! நீங்களாவது கொஞ்சம் கருணை பண்ணுங்கய்யா.

போலீ: நாங்க என்னம்மா செய்யறது? உத்தரவு வாங்கிக்கிட்டு வந்திருக்கோம். எல்லாத்தையும் எடுங்கம்மா.

ஜீப் காரில் ஆனந்தன் வருகிறான். கடைக்காரர்கள் ஐயா, ஐயா என்று கூவி வருகிறார்கள்.

பெரி: ஐயா...இந்த அக்கிரமத்தைக் கேக்க ஆளில்லையா? இதுக்கு முந்தி இருந்த அதிகாரிங்க தான் எங்க வயித்திலே

அடிச்சாங்க. நீங்க வந்தப்புறமாவது எங்களுக்கு குந்த நிழல் கிடைக்கும்னு நினைச்சோம். அதுக்கும் மோசம் வந்திடுச்சுங்களே. காய்கறி வித்தாவது கால் வயிறு கஞ்சி குடிச்சுக்கிட்டிருந்தோம். அதுக்கும் வழி இல்லாமே அதையெல்லாம் தூக்கி நடுரோட்டிலே எறிஞ்சுட்டாங்களே, எங்களுக்கு விமோசனமே கிடையாதா? சொல்லுங்க சாமி.

பெண் : அய்யா, எங்களைப் பாத்தாத்தான் உங்களுக்கும் மனசு இரங்காட்டியும், இந்தக் குழந்தைகளைப் பாத்தாவது கருணை காட்டுங்கய்யா.

குழந்தையை ஆனந்தன் காலடியில் போடுகிருள்.

ஆன : அடடே, **(குழந்தையை தூக்கிக் கொடுத்து)** என்னம்மாது? குழந்தையைப் புடிங்கம்மா. இங்கே என்ன நடந்துதுன்னே எனக்குத் தெரியாதே.

கவு : நான் சொல்றேன்.

ஆன : ஓ...கவுன்சிலரா! வாங்க.

கவு : ஆமாம்... இது நகரசபைக்குச் சொந்தமான இடம். இந்த இடத்தை இதுக்கு முன்னே இருந்த கவுன்சிலர்களும் சேர்மனும் ஏகமனதா தீர்மானிச்சு வித்துட்டாங்க. இவங்களை காலி பண்ணச் சொல்லி நயத்திலேயும், பயத்திலேயும் சொல்லிப் பார்த்து கடைசியிலே கோர்ட்டு வரைக்கும் போயி உத்தரவும் வாங்கிட்டு வந்தாச்சுங்க. அப்படியிருந்தும் காலி பண்ணமாட்டேங்கருங்க. வேற வழியில்லாமே போலீசோட வந்திருக்கோம்.

ஆன : ஓஹோ...இதுக்கு முன்னலே இருந்த சேர்மனும் கவுன்சிலர்களும் சேர்ந்து இந்த இடத்தை வித்தீங்களே, இவங்களுக்கெல்லாம் கடை கிடைபோட வேற ஏதாவது இடம் ஏற்பாடு பண்ணினீங்களா?

கவு : இல்லீங்க.

ஆன : இல்லையா...?

கவு : இந்த இடத்திலே பாக்டரி கட்டப் போறேமுங்க.

ஆன : பாக்டரி கட்டப் போறீங்களா?

கவு : ஆமாம்...

ஆன : யாரது?

கவுன்சிலர் ரகசியமாக ஏதோ சொல்ல முயலுகிருர்.

ஆன் : என்னய்யா ரகசியம் வேண்டிருக்கு. சும்மா சொல்லுய்யா.

கவு : உங்க மாமனுர் தானுங்க. அதிலே நாங்க எல்லாம் ஷேர் ஹோல்டர்ஸ்.

ஆன : ஓஹோ......கவுன்சிலரெல்லாம் ஷேர் ஹோல்டர்ஸா?

கவு : ஆமாங்க.

ஆன் : **(பணத்தை எடுத்து)** யாரைய்யாது பெரியவரே, இங்கே வாங்க. இந்தாங்க. தலைக்கு 50 ரூபா எடுத்துக்குங்க. மறுபடியும் இதே இடத்திலே

வியாபாரம் பண்றதுக்கு ஏற்பாடு பண்ணறேன்.

கவு: அது முடியாதுங்க.

ஆன: ம்...

கவு: அது முடியாதுங்க. அது முடியாதுங்க.

ஆன: முடியாதா? அதை வந்து கவுன்சில் ஹாலிலே சொல்லுங்க. கான்ஸ்டபிள்ஸ், நீங்க எல்லாம் போலாம். நீங்க போய் உங்க வேலையைப் பாருங்கம்மா.

கடை: நீங்க நல்லா இருக்கணுங்க.

நகர சபையில் ஆனந்தன் பேசுகிறான்.

ஆன: நம் மீது நம்பிக்கை வைத்து ஓட்டளித்து, பதவிக்கு அனுப்பிய அந்த பாமர மக்களின் நன்மையைப் புறக்கணித்து, எந்தத் தனி மனிதனும் லாபம் சம்பாதிப்பதை நாம் அனுமதிக்க முடியாது.

கவு: மன்னிக்க வேண்டும் தலைவர் அவர்களே, இதற்கு முன்பிருந்த நகரசபைத் தலைவரும். அங்கத்தினர்களும் ஏகோபித்து நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை நிராகரிப்பது சரியல்ல என்பது. சட்டம் படித்த தலைவர் அவர்களுக்கு தெரியாத விஷயமல்ல.

ஆன்: ஒரு சட்டம் நடைமுறைக்கு ஒத்து வராவிட்டால், அது பலருக்கு தீமையை விளைவிக்கும் என்று தெரிந்தால் அந்த சட்டத்தையே மாற்றுவதற்கு நம்முடைய அரசியல் அமைப்பிலே இடமளித்திருக்கிறார்கள் என்பதை தயவு செய்து தோழரவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கவு-2: எது எப்படி இருந்தாலும் இந்த விஷயத்திலே தலைவர் அவர்கள் பிடிவாதம் காட்டாமலிருக்க வேண்டுமென்பது எங்கள் எல்லோருடைய கோரிக்கை.

கவு-3: ஆமாம்... ஆமாம்...

ஆன: பிடிவாதம் என்று சொல்லுகிறீர்களே. அது எந்தப் பக்கத்தில் இருக்கிறது என்பதை யோசித்துப் பார்த்தீர்களா? வசதி படைத்த ஒரு தனி மனிதனுக்காக நீங்கள் அத்தனை பேரும் பரிந்து பேச வேண்டிய அவசியம் என்ன வென்றுதான் எனக்கு புரியவில்லை.

கவு: அந்த இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வெங்கடாசலம் பல லட்ச ரூபாய்களை இயந்திரங்கள் வாங்குவதற்காக செலவழித்து விட்டார்.

கவு: அங்குள்ள குடிசைகளை அப்புறப்படுத்துவதற்காக ஆட்களை ஏற்பாடு செய்து விட்டார்.

ஆன: பாவம், அந்த சிரமம் கூட அவருக்கு எதற்காக? கூட்டுறவு முறையிலே அந்த இடத்

புதிதாக விற்பனைக்கு வந்திருக்கும் 'ஹெரால்டு ஸ்டாண்டர்ட்' காரை, ஸ்டுடியோவில் சிவாஜி கணேசன் பார்வையிடுகிறார். ஷண்முகம், கிருஷ்ணசாமி, ஏ. பி. என். முதலியோரும் இருக்கிறார்கள்.

தில் காலனி ஒன்று அமைத்து, குடிப்பதற்கு தண்ணீர், குளிப்பதற்கு வசதி, தெரு விளக்கு, இலவசப் பள்ளிக்கூடம், குழந்தைகளுக்கு விளையாட ஒரு பூங்கா இத்தனையும் நகரசபையே ஏற்படுத்தப் போகிறது.

ஆறு

செல்லத்தின் சொல்

சரளா ஒரு ஆண் மகவுக்குத் தாயாகிறாள். ஆனால் கால் குணமாகவில்லை. பத்திரப்படி ஏகாம்பரம் நிர்ப்பந்தித்தால் தன் மகள் வாழ்வு பாழாகி இதயம் வெடித்துப் போகுமே என்று பதறுகிறார் வெங்கடாசலம். செல்லம், ஏகாம்பரம், பாமா மூவரும் குழந்தையைப் பார்க்க வரும்போது, நொண்டிப் பெண்ணின் குழந்தை நொண்டியாகத்தானிருக்கும் என்று சொல்லி வைக்கிறாள் செல்லம். சரளா வேதனைப்பட, அதைக்கேட்டு ஆத்திரத்துடன் குழந்தையைத் தூக்கி வந்து காட்டிப் பொருமுகிறார் வெங்கடாசலம். ஆனந்தன் வருகிறான்.

ஆன : மாமா...மாமா...என்ன மாமா இது? உங்களுக்குப் பைத்தியம் பிடிச்சுப் போச்சா என்ன?

குழந்தையை வாங்கிக் கொள்கிறான்.

வெங் : ஆமாம்பா ... என் பொண்ணு நொண்டி, அவளுக்குப் பிறக்கிற குழந்தையும் நொண்டின்னு சொன்னா பைத்தியம் பிடிக்காமே என்ன செய்யும்?

ஆன : யார் சொன்னது அப்படி?

வெங் : அந்த வார்த்தையை சொல்லும் திமிரு யாருக்கும் இல்லே மாப்பிள்ளே, இந்த வீட்டிலே.

போகிறார். ஆனந்தன் திரும்பிப் பார்க்கிறான். தாயைப் பார்க்கிறான்.

ஏகா : நினைச்சேன்... நானும் நினைச்சேன். மூணு பேரா இல்லே புறப்பட்டு வந்தோம்.

ஆன : ஏம்மா, உனக்கு ஹிருதயம் இருக்கா? பத்து மாசம் சுமந்து பெத்தவ காதிலே விழுந்தா அவ உள்ளம் எப்படியெல்லாம் வேதனைப் படுங்கிறதை நீ நினைச்சுப் பாத்தியா அம்மா? நீ பழிச்ச குழந்தை உனக்கும் பேரன்கிறதை மறந்துட்டியா...இந்தா பாருங்க. இனி ஒரு முறை என் பிள்ளையைப்பத்தி ஏதாவது பேசுனீங்க உங்க பிள்ளை உங்களுக்கு ஒட்டாமே போயிடும். ஜாக்கிரதை.

ஆனந்தன் போய்விடுகிறான்.

ஏகா : சேத்துப் பேசாதேடா. சேத்துப் பேசாதே. இவள் சொன்னதைக் கேட்டு நான் துடிச்சேன். ...ஏய், வீட்டுக்கு வா உன்னை வெட்டறேன். வெட்டறேன்.

செல் : நீங்களும் வீட்டுக்கு வாங்க. உங்களைப் பேசிக்கிறேன்.

ஏகா : போட்டி...போ.

ஏழு

என்னால் முடியாது

ஆனந்தன் தன் மகன் பாபுவை அழைத்தபடி வருகிறான்.

ஆன : (சரளாவிடம்) சரளா, பாபு எங்கே?

சர : தேடிப் பாருங்களேன்.

ஆன : எங்கேயாவது ஓடி ஒளிஞ்சிக்கிட்டிருக்கானா?

சர : அடாடா...உங்க மகனுக்கு காலு முளைச்சுப் போச்சு. அதனாலே ஓடி ஒளியறான்னு நினைக்கிறீங்களா?

ஆன : என்ன அப்படிச் சொல்லிட்டே? அவன் பொறந்தன்னிக்கு மறுநாளே உங்கப்பா அவனை தூக்கி வைச்சுக்கிட்டு என் பேரனைப் பாருங்க. எழுந்திரிச்சி ஓடுவான்னு பந்தயம் போட்டாரே. அவன் நடக்கிறதுக்கு கேக்கணுமா என்ன? அது சரி பாபு எங்கே? என்ன சரளா கேக்கிறேன், பேசாமெ இருக்கே.

சர : ஆமாம்...நானும் கொஞ்ச நாளாப் பாக்கிறேன். வந்த உடனே பாபு எங்கேன்னு தேட நீங்களே தவிர, என்னை பத்தி...

பிரபல சிங்கள ஹாஸ்ய நடிகர் எம். ஏ. மன்சூர் தற்போது பல படங்களில் நடித்து வருகிறார்.

ஆன : போடி பைத்தியக்காரி, பைத்தியக்காரி...நீ எப்போதுமே பாபு கூட இருக்கிறே. நான் ஆபீசுக்குப் போறவன். சாயங்தரந் தானே வர்றேன். அதுவும் இல்லாமெ பாபு கூட விளையாடறதெல்லாம் அவன் தூங்கற வரைக்கும் தானே.

மல்லிகா குழந்தையுடன் வருகிருள்.

ஆன : டேய் பாபு.....பாபு... வாடா...வாடா.

குழந்தையை தூக்கிக் கொள்கிருன். குழந்தை அழுகிறது.

மல் : என்னங்க, குழந்தையை இப்படிக் கொடுங்க, அம்மா கிட்டே கொடுக்கணும்.

ஆன : ஏன் ஐயாகிட்டே இருந்தா என்னவாம்?

மல் : அவன் அழுகிருன் தெரியலே.

ஆன : குழந்தைன்னு அழுகத்தான் செய்யும். சமாதானப்படுத்தினு போகுது.

மல் : அது உங்களாலே முடியாது.

ஆன : ஏன்?

மல் : அவன் கேக்கிறதை உங்களாலே குடுக்க முடியுமா?

ஆன : ஓ...எஸ்....ஆமா, நீ என்ன எப்போ பார்த்தாலும் என்னுலே முடியாது, முடியாதுன்னு சொல்லிக்கிட்டிருக்கே.

மல் : கொண்டாங்க குழந்தையை.

வாங்கிப் போகிருள்.

ஆன : அடடா...என்னடாது, என்னுலே முடியாத காரியம்.

மல்லிகா குழந்தையை சரளாவின் கைகளில் கொடுக்கிருள்.

சர : வாடா...வாடா

குழந்தையை வாங்கிக் கொள்கிருள். மல்லிகா நாற்காலியை வேறு புறமாகத் திருப்பி விட்டு ஆனந்தனைப் பார்த்துச் சிரிக்கிருள். சரளா குழந்தைக்குப் பால் தருகிருள்.

ஆன : **(திடுக்கிட்டு, திரும்பி)** ஓகோ..இது நம்மாலே முடியாது!

சிரிக்கிருன்.

எட்டு

ஆனந்தன் வேதனை

ஏகாம்பரம் பத்திரத்தைப் பற்றிக் கூறி வெங்கடாசலத்தை மிரட்டுகிருன். அப்போது இடியும் மின்னலுமாக ஊரே அமர்க்களப்படுகிறது. ஆனந்தன் ஓடிப் போய்ப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகிருன். சிகாமணி மூலம் துணிக் கடையில் நிறைய துணி இருப்பதறிந்து அதை யெல்லாம் மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்கிருன். அந்தக் கடை வெங்கடாசலத்துடையது. அவர் செய்தியறிந்து ஆனந்தனிடம் பேசுகிருர்.

வெங் : மாப்பிள்ளே, கொஞ்சம் வர்றீர்களா? உங்ககிட்டே கொஞ்சம் பேசணும். இதோ

பாருங்க. மாப்பிள்ளே, வளைஞ்சு கொடுக்கிற சுபாவம்தான் மனுஷனை வாழவைக்கும். லட்சியம் வேறு. நடமுறை வாழ்க்கை வேறு. கொள்கை வேறு. குடும்பம் வேறு.

ஆன : ஊஹூம் ... இதெல்லாம் வெவ்வேறு. ஆனா நகரசபையும் குடும்பமும் ஒண்ணு. அந்த நகரசபையாலே ஏற்படற நன்மைகளையெல்லாம் குடும்பத்திற்குப் பயன்படுத்தறது முறை. அப்படித்தானே?

வெங் : கொஞ்சம் மெதுவாப் பேசுங்க மாப்பிள்ளே. உங்களுக்கு இளம் வயசு, புரிஞ்சுக்க வேண்டிய விஷயம் நிறைய இருக்கு.

ஆன : தேவையே இல்லை. எனக்குத் தெரிஞ்சதெல்லாம் ஒரே வழிதான். நேர்மையான வழி, சத்தியத்துக்குத் தலை வணங்கற வழி.

நாகு : நீங்க நேர்மை வாதிதான். ஆனா நன்றி உணர்ச்சி மட்டும் கிடையாது.

ஆன : அநியாயத்துக்கும், சட்ட விரோதத்துக்கும் உடைந்தையா இருந்தா, அதுதான் நன்றி உணர்ச்சியா? நீயெல்லாம் நன்றி உணர்ச்சியைப்பத்தி பேச வந்துட்டே பாரு.

நாகு : தேவையில்லாத விஷயத்தை ஏன் சார் பேசறீங்க? உங்களைப் பொறுத்தவரை அவர் செய்ததெல்லாம் நன்மை. நியாயப்படி பார்த்தா நீங்களே அவருக்கு சிலை வைக்கணும்.

ஆன : வைச்சிருக்கேன். எங்கே தெரியுமா? இங்கே? எனக்கு நன்மை செய்தவர்ங்கிறதுக்காக, முனிசிபாலிட்டி பணத்தை ஸ்வாகா பண்ணி, சிலை வைக்கணுமா? என்னமோ, நீங்க எல்லாம் திருத்தி வருவீங்கங்கற நம்பிக்கையிலே நான் இன்னமும் உங்ககூட உறவாடிக்கிட்டிருக்

maidenform
has a
curve-creating bra
for every
type of figure
Rs. 8 onwards
(local taxes extra)
INDIA SILK HOUSE
192, MOUNT ROAD, MADRAS-2.
A maidenform authorized dealer.

"உன்னை இப்படி அடித்துப் போட்டது யாராக இருக்கும்?" - மாதேஸ்வரி பிலிம்ஸ் "நாகமலை அழகி" படத்தில் வி. எஸ். ராகவன், டி. ஆர். நடராஜன் தோன்றும் ஒரு காட்சி.

தேன். என்னிக்கு அந்த நம்பிக்கை அத்துப் போகுதோ, அன்னிக்கு, ரத்தபாசத்தைக் கூட அறுத்துவிட்டுப் போக நான் தயங்க மாட்டேன்.

நாகு : இந்த வெட்டி மிரட்டலுக்கு எல்லாம் இங்கே யாரும் பயந்துட மாட்டாங்க மிஸ்டர்.

வெங் : (நாகுவிடம்) என்னடா அளவுக்கு மீறி போறே? போ வெளியே. இதோ பாருங்க மாப்பிள்ளே, உங்களுக்கு எது சரின்னு படுதோ அதைச் செய்யுங்க. நல்லதோ கெட்டதோ நான் எது செய்தாலும் அது எனக்காக அல்ல.

ஆன் : வேறே யாருக்காக?

வெங் : போகப் போகத் தெரியும், மாப்பிள்ளே.

ஆன : ம்...செட்டப் பிரமாதம்.

ஆனந்தன் போகிறான்.

நாகு : என்ன ஸார் இது? எங்க விஷயத்தையுமே ஒரு நிமிஷத்திலே முடிவு பண்ற நீங்க, இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழந்துட்டீங்க?

வெங் : நாகு, இந்த சந்தர்ப்பத்தை மட்டுமல்ல. பெரிய மனுஷன்கிற பட்டம்...என் ஆஸ்தி எல்லாத்தையும் இழக்கத் தயாரா இருக்கிறேன். ஆனால், என் சரளாவுக்கு அப்பாங்கிற ஸ்தானத்தை மட்டும் என்னாலே இழக்கவே முடியாது.

சரளா தள்ளுவண்டியில் சாய்ந்தபடி சிந்தனையில் இருக்கிறாள். குழந்தை தொட்டிலில் படுத்திருக்கிறது. ஆனந்தன் பலவித குழப்பத்தோடு அங்கு வந்து சோபாவில் சாய்ந்து தலையைக் கோதியபடி அமர்ந்திருக்கிறான்.

சர: என்னங்க, ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க? வாங்க சாப்பிடலாம்.

ஆன: நான் சாப்பிட்டாச்சு. நீ போய்ச் சாப்பிடு.

சர: நீங்க வந்த உடனே சாப்பிடலாம்னு இவ்வளவு நேரமும் காத்துகிட்டிருந்தேன்.

ஆன: எனக்காக, எதுக்காக காத்துக்கிட்டிருக்கே? அவங்கவங்க வேலையைப் பாத்துக்கிட்டுப் போறது தானே.

சர: நீங்களும் வந்து ... உக்காந்து.

ஆன: நான் வந்து உக்காந்தாத்தான் சாப்பிட முடியுமா? இல்லாட்டா முடியாதா? சட், சோத்துக்கு இல்லாத ஏழைங்க முகத்தைப் பாக்கற நிம்மதி இந்த வீட்டுக்கு வந்தா எனக்கு இல்லை. பெரிய தொல்லையாப் போச்சு.

சர: நான் உங்களுக்கு தொல்லையா இருக்கேனா?

ஆன: உன்னை யாரு இப்ப சொன்னா? உனக்கு ஏன் கோபம் வருது? உங்கப்...சரி சரி...உங்கிட்டே எதுக்காக வம்பு?

குழந்தை அழுகிறது.

ஆன: குழந்தை அழறது காதிலே விழலே? போயி குழந்தையைத் தூக்கு போ...ஏன் பேசாமே உக்காந்திருக்கே? ம்...குழந்தையைத் தூக்கறதுக்குக்கூட வேலைக்காரி வேணுமா? இல்லே, நான் போயி தூக்கவா?

சரளா நாற்காலியை தள்ளியபடி தொட்டில் அருகே வந்து குழந்தையைத் தூக்கிக் கொள்கிறாள்.

இடையே...

செல்லம் தன் மகனுக்கு இரண்டாந்தாரமாக தனது சகோதரன்

பருக்கள் தீராத பிரச்னையாயிருந்தன...

எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்

OZ-929 TM

மகள் பாமாவை மண முடிக்க விரும்புகிறாள். சரளா நேரிலேயே இதை அறிந்து திரும்பித் துடிதுடிக்கிறாள். ஆத்திரத்தில் வெங்கடாசலம் கவுன்சிலர்களைக் கிளறிவிட, இதனால் ஆனந்தன் தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மக்களுக்குத் தொண்டாற்றப் போகிறான். ரௌடிகள் அவனை அடித்துப் போடுகிறார்கள். ஏகாம்பரம் வெங்கடாசலத்திடம் உதவி கோரிப்போய், பத்திரத்தைக் கொடுத்து விடுகிறார். அதை வெங்கடாசலம் கொளுத்த அவரறியாமல் அணைத்துவிட்டுச் சரளாவிடம் காட்டுகிறான் நாகு. சரளா புழுவாகத் துடிக்கிறாள்.

வீடுகளுக்குத் தீவைக்க ஏற்பாடு செய்கிறான் நாகு. அவர்களில் ஒருவனை சிகாமணி பிடித்துவிட, நாகு தான் சூத்திரதாரி என்று தெரிகிறது. வெங்கடாசலம் காரில் வர அவரை யாவரும் துரத்துகிறார்கள்.

ஒன்பது

சரளா செத்துவிட்டாள்

தானறியாமல் தன்னிடம் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிய தந்தையிடம் ஆத்திரத்தோடு பேசுகிறாள் சரளா.

வெங்: அம்மா சரளா... ஏம்மா இப்படிப் பார்க்கறே? எதுக்காக உன் உடம்பு நடுங்குது? சொல்லம்மா. சொல்லு.

ஏதும் சொல்லாமல் அழுகிறாள்.

வெங்: சரளா ... அழாதேம்மா அழாதே. நீ இப்படிக் கதறும்படியா இப்போ என்ன நடந்தது? சொல்லம்மா.

சர: என்ன நடந்துதுன்னு உங்களுக்குத் தெரியாதா?

வெங்: தெரியாதம்மா. எனக்கு எதுவுமே தெரியாது.

(114-ம் பக்கம் பார்க்க)

இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி மயூட (பொம்மை) வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P.P.M.)

Jullundur City.

மாடர்ன்
தியேட்டர்ஸ்
குமுதம்
காட்சிகள்



மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்திருக்கும் "குமுதம்" அருமையான கதையமைப்பு கொண்டது. எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி இருவரும் பிரதம பாகங்களில் நடித்திருக்கிறார்கள். நடிகவேள் எம். ஆர். ராதா, பி. எஸ். சரோஜா, சௌகார் ஜானகி, எஸ். வி. ரங்கராவ், கள்ளபார்ட் நடராஜன் முதலியோரும் முக்கிய பாகங்களில் நடித்திருக்கும் இப்படத்தை ஏ. சுப்பாராவ் டைரக்ட் செய்திருக்கிறார். கே. எஸ். கோபாலகிருஷ்ணன் வசனம் எழுதியிருக்கிறார். பாடல்களை கண்ணதாசனும் மருதகாசியும் இயற்ற, கே. வி. மகாதேவன் இசையமைத்திருக்கிறார்.

சரவணா
பிலிம்ஸ்

பாலும் பழமும்

காட்சிகள்



அவருடன் சரோ
ஜாதேவி கதாநாயகி
யாக நடிக்கிறார். மற்
றும் குணசித்திர
நடிகர்களான நாகய்
யா புலையா, எம்.
ஆர். ராதா எஸ்.
வி. சுப்பையா ஆகி
யோரும் பிரேம்நசீர்,
ஏ. கருணாநிதி, சுந்
தரிபாய், சி. டி. ராஜ
காந்தம் முதலியோ
ரும் நடித்து வருகி
ருர்கள்.

சரவணு பிலிம்ஸார் 'பாகப் பிரிவினை' வெற்றிப் படத்தைத் தொடர்ந்து இரண்டாவது படத்தை ஆரம்பித்தார்கள். வழக்கம் போல் பெயரிடாமல் ஆரம்பித்து முடிவடையும் இந்தக் கட்டத்தில் அதற்குப் "பாலும் பழமும்" என்று பெயரிட்டிருக்கிருர்கள்.

அருமையான கதை யமைப்பு கொண்ட இப் படத்தில் சிவாஜி கணேசன் முற்றிலும் நூதனமானதொரு பாத்திரத்தில் நடித்து வருகிருர்.

ராசிக்காரரான ஏ பீம்சிங் இதன் டைரக்டர். இப்படம் அவரது புகழை மேலும் ஒரு படி உயர்த்தி விடும் என்று நிச்சயம் நம்பலாம். வேலுமணி இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.

இசை அமைக்கும் பொறுப்பை விஸ்வநாதன் – ராமமூர்த்தி ஏற்றிருக்கும் போது அதன் சுவை பற்றிக் கூறவும் வேண்டுமா? இம் மாதம் திரை

யிடப்படும் படங்களில் 'பாலும் பழமும்' ஒன்றாக இருக்கும். ரசிகர்கள் அனைவரும் பார்த்து, பலவகையிலும் திருப்திப் படும் வகையில் இப்படம் இருக்கும் என்று திடமாக நம்பலாம்.




பூரிப்பு
— எல். விஜயலக்ஷ்மி
போட்டோ:
திருச்சி அருணசலம்

*தவறான செயல்

குறிப்பிட்ட நடிகர் ஒருவர் குறிப்பிட்ட கவிஞரின் பாடல்களுள்ள படங்களில் நடிக்க மறுப்பதாகச் செய்தி படித்தேன். இது மிகவும் தவறான செயலாகும். தனி மனிதன், கட்சி இவற்றிலுள்ள விருப்பு வெறுப்புகளைப் படத் தொழிலில் காட்டக் கூடாது. அரசியல் விஷத் தன்மை கொண்டது. அதை முறை தவறிக் கொடுத்தால் உயிரையே போக்கி விடும். ஆகவே நடிகன் தன் பங்கைச் சரிவர செய்ய வேண்டுமேயல்லாது, மற்ற துறைகளில் தலையிட்டுத் தொல்லை தரக் கூடாது. கூட்டுறவு மனப்பான்மை தான் படங்களுக்கு வெற்றி தருமே தவிர, தனியொருவரின் பெருமையோ, புகழோ, திறனோ அல்ல. ஆகவே தவறான பாதையில் நடிகர்கள் செல்வது அவர்களுக்குத்தான் ஆபத்து என்று கூற ஆசைப்படுகிறேன்.

டி. எம். அப்துல் ஜப்பார்,
கோவை.

** புதிய காப்பி

ஒருமுறை திரையிடப்பட்ட படங்கள் சில மாதங்கள் சென்றதும் மீண்டும் திரையிடப்படுகின்றன. அப்போதும் அதே கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது. ஆனால் படத்திலோ முக்கால் கூடத் தேறுவதில்லை. சப்தம்(!) கேட்பதில்லை. ஜிகினா கோடுகள், இடி, மின்னல் வெட்டு தென்படுவது சகஜமாகி விட்டது. திடீரென்று அறுந்து வெள்ளித்திரையை வெள்ளைத் திரையாக்குவது மிக மிக சகஜம். ஏதோ சில சமயங்களில்தான் 'புதிய காப்பி' என்ற விளம்பரத்தோடு படங்கள் திரையிடப்படுகின்றன. பழையபடம் என்பதால் தேய்ந்து போனவற்றைக் காட்டுவதைத் தடுத்து, பார்ப்பதற்குரியவாறு புதிய பிரதிகளை அனுப்ப, அத்தாட்சிபெற ஏற்பாடு செய்ய வேண்டும். அது ஒழுங்கான முறையில் செயல் படுகிறதா என்பதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்கவேண்டும்.

ஏ. வி. ராஜரத்னம்,
மதுரை.

கலை கலைக்காகவே

"பேசும் படம்" ஜூன் மாத இதழில் "கலங்கிய கங்கை" என்ற தலைப்பில் வந்த கடிதம் கண்டு வருந்தினேன். மத்திய பிரதேசம் போன்ற வட இந்திய ராஜ்யங்களில் வாழும் கொள்ளையரை மையமாகக்கொண்டு எடுக்கப்பட்ட படம் இது. நாகரிகம் என்னவென்றறியாத பழங்குடியினர்தான் பல படுபாதகச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இங்கு காணும் மலம்பாடி, குறவர் போன்ற கூட்டத்தினரும் இச்செயல்களைச் செய்கின்றனர். இவர்களது ஆடையணிகளும் நாகரீகமானவை அல்ல. கூச்சம் இன்னதென பலதையறியாத மக்கள் இவர்கள். இப்படிப்பட்ட மலைப்பிரதேச பக்களின் பண்பாடு, கலை, பழக்கவழக்கங்கள் இவைகளைப்பற்றி மற்றவர்கள் அறியச் செய்வதே படம் எடுத்தவரின் லட்சியம். இந்த லட்சியம் நிறைவேற, உள்ளது உள்ளபடி எடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே படம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே இதில் நடித்தவரையோ, படம் தயாரித்தவரையோ தூற்றுவது, கலைத்தாயைத் தூற்றுவதாகும். கலையை கலைக்கண் கொண்டு பார்க்கவேண்டும். ஆபாசம் என்பது பார்க்கப்படும்பொருளில் இல்லை; பார்க்கிறவர்களின் கண்களில்தான் உள்

---

* முதற் பரிசு ரூ. 15.

** இரண்டாவது பரிசு ரூ. 10

ளது என்பது மேனாட்டறிஞரின் வாக்கு.

கி. சீனிவாசன்,
ஆதம்பாக்கம்.

[பகுதிவாழ் மக்கள், அவர்களது வரலாறு பற்றி செய்திப் படங்கள் வந்தால் ஆபாசம் என்று சொல்ல முடியாது. ஆனால் நடிக, நடிகையர் சினிமாவில் அதைப்போல நடிப்பதாக ஆபாச வேடமிட்டுக் காட்டுவதை வரவேற்க முடியாது. தொதவர் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட படங்களில் நடிகைகள் மேல் துணி ஏதும் இல்லாமல் நடிக்க முடியுமா? கும்பமேளா வரலாறு என்றுகூறி படத்தில் நடிகர்களை நிர்வாணமாக நடிக்கச் செய்யலாமா? ஆகவே வாழ்க்கை முறை என்ற போர்வையில் நடிகைகளை ஆபாசமாக நடிக்கச் செய்வதை யாரும் வரவேற்க முடியாது. இப்போது அந்தப் படத்தின் வசூல் அதன் தூய கருத்துக்காக அல்ல; நடிகையின் 'கோல'த்துக்காகத்தான் என்பதை, தியேட்டர் வாசல் அபிப்பிராயத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாமே! - ஆர்.]

போகவேண்டும் திலகம்

இந்தோனேஷியாவில் நடைபெறும் இந்தியத் திரைப்பட விழாவில் கலந்து கொள்ள நடிகர் திலகம் மறுத்து விட்டதாக அறிந்து வருந்துகிறேன். வட இந்தியப் படங்கள் எது நடைபெற்றாலும் ராஜ்கபூரோ, சாந்தாராமோ, பிமல்ராயோ, சத்யஜித்ரேயோ போகத்தவறுவதே இல்லை. அதுவும் இந்தியத் திரைப்பட விழா நடைபெறும்போது மிகச் சிறந்த நடிகரான நடிகர் திலகம் போனால்

''பொறுமையாக இருங்கள். யோசித்து ஒரு முடிவுக்கு வரலாம்'' —எஸ். ஆர். எஸ். பிக்சர்ஸாரின் ''எல்லோரும் வாழவேண்டும்'' படத்தில் சேதுபதி, அசோகன்.

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

ஸ்பெஷல் நெ. 1 **ரிஜிஸ்டர்டு**

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப் பட்டது. மூளைக்கு குளிர்ச்சி அளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளபடி ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்ய மாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR — BOMBAY - 14.

மதராஸ் டிப்போ 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3.

மலச்சிக்கலும் மூலவியாதியும்

மூலவியாதி அல்லது மலக்குடலின் உட்புறம் வெளிப்புறமுள்ள இரத்தக் குழாய்கள் விங்குவதின் மூலம் ஏற்படும் இரத்தப் பெருக்கு இவை உண்டாவதற்குக் காரணம் அடிக்கடி ஏற்படும் மலச்சிக்கல். உபாதையின் காரணமாக மலநிவர்த்தி செய்ய மிகவும் கஷ்டமாகவும் உபத்திரவமாகவும் இருக்கிறது. மலச்சிக்கல் அதிகமாகி, வலியை உண்டாக்கும் சரும வெடிப்புகளுடன் மூல வியாதியும் அதிகமாகிறது. மூலவியாதியின் தொல்லையும் ஒழிந்தால்தான் குடலிலிருந்து அசுத்தங்களை வெளியேற்றுவது சுலபமாகும். ஹெடன்ஸா அதைத்தான் செய்கிறது. வலியையும் நமைச்சலையும் அகற்றி நிச்சயமான நிவாரணமளிக்கிறது. அதனைத் தொடர்ந்து உபயோகிப்பதால், மூலம் சுருங்கி, பரிபூரண நிவாரணம் கிடைக்கின்றது. பிரசித்திபெற்ற ஜெர்மன் மூல நிவாரணியான ஹெடன்ஸாவில் அவயவத்தை மறத்துப் போகும்படி செய்யக்கூடிய மருந்து ஒன்றும் சேரவில்லை. துணியில் கறை யுண்டாக்காது. உபயோகிப்பது சுலபம். ஒவ்வொரு மருந்து பெட்டியிலும் ஒரு சிறு பிளாஸ்டிக் மூக்குக் குழாயும் அதனை உபயோகிக்கும் முறைகள் அடங்கிய குறிப்பும் உண்டு. மூலவியாதி என்றால், அதற்கு ஹெடன்ஸாதான் ஏற்ற மருந்து. இன்றே ஹெடன்ஸா உபயோகித்துப் பாருங்கள். இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப் படுகிறது.

D2-952

தான் மிகவும் கௌரவமாக இருக்கும். பரவ மன்னிப்பு, படிக்காத மேதை படங்கள் திரையிடப்படும் போது, ரசிகர்கள் நடிகர் திலகத்தை நிச்சயம் ஆவலுடன் எதிர் பார்ப்பார்கள். ஆசிய, ஆப்பிரிக்க விழாவில் நடிகர் திலகம் கலந்து கொண்டதால், அவரால் நாடு புகம் பெற்றது. ஆகவே நடிகர் திலகம் இந்த விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்ற லட்சக்கணக்கான ரசிகர்களின் விருப்பத்தை அவர் பூர்த்தி செய்யவேண்டும்.

கே. ராமன் உன்னி,
கோயமுத்தூர்.

[இதைப்போல் ஏராளமான கடிதங்கள் நமக்கு வந்திருக்கின்றன. தாயின் உடல்நிலை, விருப்பம் காரணமாகவே சிவாஜி கணேசன் வெளிநாடுகளுக்குப்போக மறுக்கிறார். ஆனல் இப்போதுதான் அவர் அமெரிக்க சர்க்காரின் அழைப்பை ஏற்று அமெரிக்கா செல்ல சம்மதித்திருக்கிறார்.
ஆ-ர்.]

மதமும் படமும்

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றாலும் பல மதங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இனம், மதம் என்பதை யெல்லாம் கேலி செய்துவிட முடியாது. ஆனல் படங்களில் பல பாடல்கள் மதத்தினரை வேதனைக்குள்ளாக்கும் வகையில் அமைக்கப்படுகின்றன. "இருந்தா நவாப் ஷா, இல்லாவிட்டா பக்கிரி ஷா', 'ஆனந்தக் கோனரே அறிவு கெட்டுத்தான் போனரே', 'ஆசாரி என்பவனே அடங்காத பொய்யனடா' என்றெல்லாம் பாடி மதத்தினரைக் கேலி செய்கிறார்கள். மதம் அவரவர்களுக்கு உயர்ந்தது அதைக் கேலி செய்வது வருந்தத்தக்கது.

கே. வி. எம். ஷாகுல் ஹமீத்,
கோத்தகுடியம்.

கதையும் நடிகனும்

கதைகள் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஓரிரு காட்சிகளைத்தான் மாற்றி யமைக்கிறார்கள். நடிகன் நல்லவனாகவும் அமைதியானவனாகவும் காட்டப்படுவான். அடுத்த காட்சியில் தெருவிலே நடனமாட ஆரம்பித்து விடுவான். பலவித வேடங்களில் வருவான். பாத்திரத்தின் தரம் ஏறி இறங்கும். சமூகப்படமா? சிறு வயதில் காணமல் போன பையன், பெற்றோருக்கே யாரென்றறியாமல் உதவுவான். உச்சக்கட்டக் காட்சியில்தான் உண்மை தெரியும். சரித்திரப் படமா? ஒரே சண்டை. புராணப் படமா? பிடி சாபம் என்பார்கள். காலம் மாறி வருகிறது. பட உலகின் புகழும் வளருகிறது. படாதிபதிகள் பின்னல் போகிறார்கள். இதில் மாறுதல் வேண்டாமா?

து. குணசீலன்,
கோவை.

அடேங்கப்பா! இந்த ஊருலே என்னை குளிரு குளிருது! — காஷ்மீரில் தயாரிக்கப்பட்ட, சித்ராலயாவின் "தேன் நிலவு" படத்தில் தங்கவேலு.

''ஐயா, ஐயா, வாய்யா! பாரீஸ் கார்னர் போவணுமா? பிலஸர்மாரி இளதுக்குனு போறேன்'' —எஸ். ஆர். எஸ். பிக்சர்ஸ் ''எல்லோரும் வாழ வேண்டும்'' படத்தில் நடிகவேள் எம். ஆர். ராதா.

நக்ஷத்திரப் படங்கள்

நமது படத்தயாரிப்பாளர்களில் சிலர், நக்ஷத்திர நடிகர்களைப் போட்டுப் படமெடுக்கிறார்கள். ஆனால் ஓரிருவருக்குத்தான் வேலை இருக்கிறது. மற்றவர்கள் திறமை, புகழ இருந்தும் உபநடிகர்களாக் கப்பட்டு விடுகிறார்கள். 'பாவமன்னிப்பு படத்தில் ஜெமினி கணேசன், பாலையா, சுப்பையா, சாவித்திரி ஆகியோருக்கு வேலையே இல்லை. 'பாசமலர்' படத்தில் நம்பியார். எம். என். ராஜம் இருவருக்கும் வேலையே இல்லை. புகழ்பெற்றவர்களைப் போடாமல் புதுமுகங்களை இந்தப் பாத்திரங்களில் நடிக்கச் செய்து ஊக்கமூட்டலாம்; செலவும் குறையும். செய்வார்களா?

சாரங்கபாணி,
சென்னை.

காலமும் கோலமும்

படத்தயாரிப்பாளர்கள் கதையின் காலத்தைப்பற்றிக் கவலைப் படுவதில்லை. சம்பூர்ண ராமாயணம் படத்தில் சீதை ஜார்ஜட் சேலை உடுத்தியதுபோல் காலத்திற்கு ஒவ்வாததைக் காட்டினாலும் குறை சொல்லத்தான் செய்வார்கள்! ''பட்டி விக்கிரமாதித்தன்'' படத்தில் அஞ்சலிதேவி 'குதிகால் உயர்ந்த' காலணியுடன் காட்சியளிக்கும் படம் 'பேசும் படம்'' டிசம்பர் '60 இதழில் வெளியாகியிருந்தது. காலத்தைக் கவனித்திருக்க வேண்டாமா?

எஸ். சாந்தகுமாரி,
காரைக்கால்.

[படத்தில் அப்படி வராது! 'டெஸ்ட் ஸ்டில்' என்பார்களே அதைத்தான் நீங்கள் பார்த்தீர்கள்.

அதாவது குறிப்பிட்ட நடிகையை குறிப்பிட்ட பாத்திரத்திற்குத் தேர்ந்தெடுத்தபின், அவருக்கு வேடமிட்டுப் பார்ப்பார்கள். அது பிரத்தியேகமாகப் புகைப்படமெடுக்கப்படும். நடிகை காலணியுடனிருப்பார். ஆனால் அதை விளம்பரத்திற்குத் தவறுதலாக அனுப்பி விடுகிறார்கள். இதே போல ஏலங்குழலி ஐட்டியுடனிருக்கும் படமும் ஜெமினி ஔவையாரிலிருந்து முன்பு வெளிவந்து பிரசுரமாகியது. —ஆ·ர்.]

உலகநாடுகளில் தமிழ்ப்படம்

தென்னகப் படங்களிலே தமிழ்ப் படங்களின் தரம் உயர்ந்து வருகின்றது இப்போது. ஆங்கிலப் படங்களில் கதையம்சம் பிரமாதமாக இல்லாவிட்டாலும் ஒரு சிறு கருத்தை டைரக்டரின் திறமையாலும் காட்சி ஜோடனைகளாலும் பிரமாதமாக்கிக் காட்டுகிறார்கள். ஆனால் தமிழ்ப்பட டைரக்டர்கள் இன்னும் இவ்விஷயத்தில் முழுக் கவனம் செலுத்துவதில்லை. இந்நிலையில் காட்சி ஜோடனை அதிகம் இல்லாவிடினும் ஓரளவு கதையம்சமும் டைரக்ஷனும் கொண்ட படங்கள் சில வெளிவருகின்றன. டைரக்டர்களிலும் பாராட்டப்பட வேண்டியவர் பீம்சிங்தான். அவர் டைரக்ஷனில் வெளிவந்த பாகப்பிரிவினை, படிக்காத மேதை, பாவமன்னிப்பு, பாசமலர் போன்றவை கதை - டைரக்ஷன் இரண்டிலும் புகழ் பெற்றுள்ளன. இத்துடன் காட்சி ஜோடனைகளும் சேர்ந்தால் அகில உலகப் புகழ்பெற தமிழ்ப் படங்கள் தக்க இடம்பெறும்.

ச. சுப்பிரமணி,
சென்னை.

[மேனாட்டு முறைவேறு. இங்குள்ள நிலை வேறு. அங்கே டைரக்டர் பொறுப்பில் சகலமும் விடப்படுகின்றன. நல்லதோ கெட்டதோ, பொறுப்பு அவருடையதே. இங்கு அப்படியல்ல. அடிக்கடிப் பலரும் டைரக்டரின் வேலையில் குறுக்கிடுகிறார்கள். டைரக்டருக்கு அந்தஸ்து, பொறுப்பு, அதிகாரம் கிடையாது, அதிர்ஷ்டவசமாக வாய்த்து விட்டால் புகழ் கிடைக்கிறது. அவ்வளவுதான். ஆ-ர்.]

இரட்டை லாபம்

புகழ்பெற்ற நடிகர் தன் புகழைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். ஜெமினி கணேசன் "பாவமன்னிப்பு", "பாசமலர்" இரு படங்களிலும் உப பாத்திரத்தில் தோன்றினர். அவர் தன் திறமையைக் காட்ட சந்தர்ப்பமே தரப்படவில்லை. இரண்டு படங்களிலும் அவர் பாராட்டப்படவில்லை. இதனல் புகழ் குறையுமே தவிர, வளராது. அவரைப் போன்றவர்கள் வேலை குறைவான உபபாத்திரங்களில் நடிக்க மறுத்தால் இரண்டு விதங்களில் லாபம் உண்டு. அவர்கள் புகழ் குறையாது. வேறு புதுமுகங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். கதாநாயகனா, உபநடிகனா என்ற சந்தேகம் வரக்கூடாதல்லவா?

பிரபல நடிகர்களெல்லாம் இப்படி உபபாத்திரங்களில் நடிப்பதால் ஏராளமான புதுமுகங்கள் படங்களில் இடம்பெற முடியாமல் அவதியுறுவதை இவர்கள் அறியமாட்டார்களா? இளம் நடிகர்கள் முன்னுக்கு வருவதற்காக நாங்கள் விலகி இடம் தருகிறோம் என்று சிலர் பேசி வருவது பொய்யா?

எஸ். சங்கரன்,
சிதம்பரம்.

[இதுபோன்ற ஏராளமான கடிதங்கள் வந்திருக்கின்றன. எந்த வேடத்தையும் ஏற்று நடிப்பவனே உண்மையான நடிகன். தனக்குத் தகுந்த சந்தர்ப்பம் கிடைக்கும்படிப் பார்த்துக் கொள்வது அவன் பொறுப்பு. பெண்ணின் பெருமை, பதிபக்தி. கட்டபொம்மன் படங்களில் ஜெமினி கணேசன் சிவாஜி கணேசனுடன் நடித்தார். நிறைய சந்தர்ப்பமிருந்தது. மற்றவற்றில் அவர் போன்றவர்களுக்கு நிறைய தொகையும் கொடுத்து வேலையும் வாங்காதது அவர் தவறல்ல. நிரந்தர வருவாயற்ற படவுலகில் வருவதை உதறிவிட யாரும் விரும்பமாட்டார்கள். ஆ·ர்.]

கேள்வி ? பதில்

சக்தி லிங்கப்பா, சத்தியமங்கலம்

தமிழ்நாட்டில் பெரிய பணக்காரர் சிவாஜிதானே?

அல்ல. தமிழ்நாட்டின் பணக்கார நடிகர்களில் அவரும் ஒருவர் என்று வேண்டுமானல் சொல்லலாம். ஆனாலும் அவருக்கு ஏராளமான செலவிருப்பது உங்களுக்குத் தெரியுமா?

'புலித்தேவன்' படத்திற்கு தமிழ்வாணன் வசனம் எழுதினல் எப்படியிருக்கும்?

படத்திற்கு விளம்பரம் இன்னும் அதிகம் கிடைக்கும்.

வடநாட்டு நடிகை நளினி ஜெயவந்த் மறுமணம் செய்து கொண்டாராமே?

அது இப்பொது பாஷனுகி விட்டது!

அன்பின் எல்லை எது?

சில சந்தர்ப்பங்களில் கண்ணீரில் அதைக் காணலாம்.

எஸ். எம். பாரூக் ஜஸ்மின்,
பதுளை, இலங்கை

ஜூன் 'பேசும் - படம்' இதழ் 14-ம் பக்கத்தில் கறுப்புக் கண்ணுடி அணிந்துள்ள நடிகை புது முகம் வசந்திதானே?

ஆமாம். ஸ்ரீதர் கண்டெடுத்த புது முகம் அவர்.

எஸ். செல்லய்யா, குருவிட்ட,
இலங்கை

பத்மினியின் திருமண வரவேற்புக்கு 'புரட்சி நடிகர்' எம்.ஜி.ஆர். வந்திருந்தாரா?

இல்லை. அன்று இரவுதான் வெளியூரிலிருந்து திரும்பியிருந்தார் அவர்.

எஸ். ஏ. பத்மநபன்,
திருவனந்தபுரம்

கவிஞர் கண்ணதாசனைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

சிறந்த கவிஞர்.

கலைஞர்கள் அரசியலில் பங்கு கொள்ளலாமா?

தனிப்பட்ட முறையில் அரசியலில் பங்குகொள்ள, மற்ற துறையிலுள்ளவர்களைப் போல அவர்களும் உரிமை பெற்றவர்களே. ஆனல் தங்கள் தொழில் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும் வகையில் அதில் ஈடுபாடு கொள்ளாமலும், கலையுடன் கலக்காமலும் இருந்தால் சிறப்பாக இருக்கும்.

முல்லைத்தருமன், கோவில்பட்டி

'பாவமன்னிப்பு'க்கு முன்பே 'பாசமலர்' வந்திருந்தால்...?

பாசமலர் நூறுவது நாளை முதலில் கொண்டாடி இருக்கும்!

இளமையின் முதற்கொள்கை என்ன?

இயற்கையின் ரசனை!

சிவாஜி கணேசன் தேர்தலில் நிற்பதாகக் கனவு கண்டேன்?

அவரே மறுநாளும் உமது கனவில் வந்து, "நான் அப்படி யெல்லாம் நிற்கப் போவதில்லை. வீண் கனவு காணுதீர்கள்!" என்று சொல்லியிருப்பாரே!

காதலரின் முதல் சந்திப்பில் அவர்கள் விழி பேசும் மொழி எது?

வாலிப உலகின் 'ஷார்ட் ஹாண்ட்' அது!

வி. கிருஷ்ணன், மதுராந்தகம்

அறைகுறையாகப் படித்தவர்கள் எல்லாம் படவுலகிற்கு வரு

வது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

சொல்ல என்ன இருக்கிறது? இந்திய மக்களிலேயே பெரும்பாலோர் படிக்காதவர்கள் என்று தானே புள்ளி விவரம் சொல்கிறது!

பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ள ஏன் 'நீண்ட' நேரம் எடுத்துக் கொள்ளுகிறார்கள்?

மிகக் 'குறுகிய' காலத்தில் பிறரைக் கவர!

பெண்கள் யாரை அதிகம் விரும்புகிறார்கள்?

தங்களைப் பேரழகிகள் என்று வாயாரப் புகழுகிறவர்களை.

லலிதா, பம்பாய்

'எங்கள் ஊரில் நடந்தது' பகுதிக்கு நான் ஒரு சம்பவம் எழுதி அனுப்பி யிருந்தேனே. என் அந்தப் பகுதியையே நிறுத்தி விட்டீர்கள்?

உங்கள் கடிதத்தின் எதிரொலியாக இருக்கலாமோ!

சி. எஸ். சந்திரா, பம்பாய்

'பாவமன்னிப்பு' படத்தில் எம்.ஆர். ராதா பேசும் வசனங்கள் எழுதப்பட்டவையா, அல்லது சொந்தச் சரக்கா?

இரண்டும் சேர்ந்தது தான்!

'புனர்ஜென்மம்' படத்தில் நடிகர்களின் பட்டியலில் புளிமூட்டையின் பெயர் காணப்படுகிறது, ஆனால் படத்தில் அவர் இல்லையே!

பெயருக்குக் கிடைத்த இடம், அவரது பெரிய உருவத்திற்கு கிடைக்கவில்லை போலும்! இட நெருக்கடி!

புனர்ஜென்மம் படம் தோல்வியுறக் காரணம் என்ன?

காலங்கடந்த கதை; தணிக்கையாளரின் தயவு!

மு. ராகவன், திருவள்ளூர்

தொழில் எப்போது கலையாகிறது?

சினிமா என்ற பெயரைச் சூட்டிக் கொள்ளும்போது.

அசோகா பிக்சர்ஸாரின் "இந்திரா என் செல்வம்" படத்தில் நடிக்கும் புதுமுகம் விமலா.

ஏ. எல். அப்துல் ஹலீம்,

கடுவெல, இலங்கை

எம். ஜி. ஆரை புகழ்வதற்குக் காரணம் அவரது நடிப்பிற்காகவா அல்லது குணத்திற்காகவா?

அவரது உயர்ந்த பண்புக்காக.

இரா. அரங்கராசன், பொன்னேரி

'அக்பர்' படத்தின் வசன கர்த்தா உமாசந்திரன் அ. இ. ரேடியோ நிலையத்தைச் சேர்ந்தவரா?

ஆமாம்! ஆகாஷ்வாணியின் வாசனை, அக்பரில் வீசுவதிலிருந்து தெரியவில்லையா?

'பாசமலர்' ஹிந்திப் பதிப்பில் சிவாஜி நடிக்கிறாரா?

நடிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்.

அ. செல்லமுத்து, கரூர்

'கைதியின் காதலி' படத்தில் எஸ் எஸ். ஆருடன் நடிப்பது யார்?

'வி' தான். அதாவது விஜயகுமாரி?

நிச்சயமாக இங்கே ஒரு பாட்டு இருக்கும்! நந்தி பிக்சர்ஸார் ஓய். வி. ராவ் டைரக்ஷனில் தயாரித்து வரும் ''நாகார்ஜுனு'' தமிழ்ப் படத்தில் ஜி. வரலக்ஷ்மி.

லிங்கம், சத்திமாநகர்

தமிழ் 'கல்யாண பரி'சில் தங்கவேலு - ஹிந்தி 'கல்யாண பரி'சில் ஆகா இருவரது நடிப்புக்கும் உள்ள மாறுதல் என்ன?

தங்கவேலுவின் நடிப்புக்கே ''என்னமாக நடித்திருக்கிருர்'' என்பதற்கு முன்பு ஒரு 'ஆகா' போடலாம்!

சரோஜா தேவியிடம், என்ன இல்லை?

தற்போது அவருக்கு ஓய்வெடுக்க நேரமில்லை!

'நடிகர் திலகம்' பொறுமை உள்ளவர் என்பதற்கு என்ன சான்று?

ஏழு மணிக்கே ஸ்டுடியோவுக்கு வந்து, மற்றவர்கள் எல்லாரும் வரும்வரை-பத்துமணிவரை, தனது படப்பிடிப்புக்குக் காத்திருக்கிருரே போதாதா?

நீங்கள் எப்போது மௌனம் சாதிப்பீர்கள்?

கடவுளை வணங்கும்போது.

சத்தியஜித் ரே யிடம் உள்ள உயர்ந்த கொள்கை எது?

கலை கலைக்காகவே என்பதுதான்! அதை வியாபாரமாக்க அவர் விரும்புவதில்லை.

நீங்களும் எம். ஜி. ஆரும் சந்தித்தால் என்ன பேசிக் கொள்வீர்கள்?

படவுலகில் உள்ள அப்போதைய பிரச்னையைப்பற்றி!

பிருதிவிராஜ் பணம் படைத்தவரா?

அவரது பையன்களும் பெரும் பணக்காரர்கள்!

பத்மினியின் திருமண வரவேற்பில் சிவாஜி ஏன் கலந்துகொள்ள வில்லை?

சென்னையில் அன்று அவர் இல்லை.

அதிருஷ்டம் அழைக்க மறுப்பது எவரை?

சில சமயம் திறமை உள்ளவர்களை.

கே. எஸ். சம்பத்குமார், உடுமலை

'பாவ மன்னிப்பு' பாட்டுப் போட்டியில் தாங்கள் கலந்து கொண்டீர்களா?

நான் ரசிகனல்ல; விமர்சகன்.

எம். ஏ. எம். சேட், சேலம்

இந்தி நடிகர் ஷோரப் மோடி எந்த வகுப்பைச் சேர்ந்தவர்?

முதல் வகுப்பைச் சேர்ந்தவர். ரயிலில் அவர் அந்த வகுப்பில்தான் பிரயாணம் செய்கிருர்.

சந்தா கட்டும் நபர்களுக்கு மட்டும்தான் 'கேள்வி பதில்' பகுதியில் இடமளிப்பீர்களா?

நான் பகுத்தறிவுப் போட்டியா நடத்துகிறேன், கூப்பனுடன் வரும் விடைகளை மட்டுமே கவனிக்க? இது பொதுமேடை. யார்வேண்டுமானலும் கேட்கலாம்.

ஆனந்தன் நடிக்கும் 'நாகமலை அழகி', 'மகளே உன் சமத்து' எந்த தேதிகளில் வரும்?

நிச்சயம் வெவ்வேறு தேதிகளில் தான்!

கண்ணன், சேலம்

பிரபல நடிகர் ஒருவரது தயவு இருந்தால பணம் இல்லாமலேயே படம் ஆரம்பிக்கலாமா?

பணம் மட்டுமென்ன. கதையே கூட இல்லாமல் படத்தை ஆரம்பிக்கலாம்.

எம். ஜி. ஆர்., சிவாஜி சேர்ந்த படம் ஏன் வெளிவரவில்லை?

ஏன் வரவில்லை? அவ்வப்போது இருவரும் இணைந்திருக்கும் புகைப் படங்களை வெளியிட்டு வருகிறோமே! சில மாதங்களுக்கு முன்பு எம். ஜி. ஆர்., சிவாஜிக்கு மாலையணிவித்து, அணைத்திருப்பது போன்ற புகைப்படமொன்றை வெளியிட்டிருந்தோமே! அவ்விருவரும் நடித்த "கூண்டுக் கிளி" படத்தை மறந்து விட்டீர்களா?

பாடலுக்கு மெட்டா? மெட்டுக்குப் பாடலா?

'தொன்னையும் நெய்யும்' சேர்ந்த பிரச்னை போன்றது இது!

சிவசுந்தரம், திருச்சி

திரைப்படங்களில் வரும் கதாநாயகர்கள் எல்லாருமே நல்லவர்களாக வருவது ஏன்?

இல்லாவிடில் கதாநாயகி வில்லனையே காதலித்து விடுவாளே!

பத்மினியின் திருமணம் குருவாயூரில் மிக்க எளிதாக நடந்து விட்டது. ரசிகர்கள் அவ்வளவு அமைதியாகவா இருந்தார்கள்?

யார் சொன்னது? ரசிகர்களின் அளவுக்கு மீறிய ஆவல் பெரும் குழப்பத்தையே உண்டாக்கி விட்டது. இடநெருக்கடி காரணமாக விருசாமி ஆகாயத்தை நோக்கி நாதஸ்வரத்தை ஊத ஆரம்பித்தார்! தவுல் கட்டையை ரசிகர்கள் கைப்பற்றி விடவே, தவுல் கட்டை இல்லாமலேயே வாசித்தார் தவுல்காரர். ரசிகர்களது குழப்பத்தில கிழக்கே பார்த்து வணங்க வேண்டிய தம்பதிகள், தெற்கே பார்த்து நிற்க ஆரம்பித்து விட்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, மணமக்கள் பிரதக்ஷிணம் வரும் போது, ஒருவரையொருவரே பிரிந்து விட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

"அய்ய, இவுரு மீசைக்கு யாருங்க பயப்படுவாங்க? இஸ்தா கைலெயே வந்திடுமே!" — கலா சித்ராவின் "ஆயிரம் ரூபாய்" படத்தில் ஹாஸ்ய நடிகர் சிவதாணு, சாவித்திரி.

வி. சு. செல்லப்பா,
தேவகோட்டை

'சர்வாங்காசனம்' செய்வது எப்படி?

ஏதாவது பிரபல நடிகரது வீட்டுக்குப் போங்கள். அங்கு 'தவம்' செய்து உட்கார்ந்திருக்கும் பட முதலாளியைப் பாருங்கள்! அது போதும்!

சென்னை நிதி அமைச்சர் படத் தொழிலின் மீது அதிக அக்கறை காட்டுவது ஏன்?

அவர் ஒரு சிறந்த கலாரசிகராக இருப்பதால்தான்.

மேலை நாடுகளில் நடிகர்கள் ஏதேனும் போராட்டங்களில் ஈடுபடுகிறார்களா?

'பத்து கட்டளைகள்' படத்தின் நடிகர் சார்லஸ் ஹெஸ்டன், ஸ்விடன் தேசத்திலிருந்து அமெரிக்காவிலுள்ள ஒக்லஹாமா நகரத்திற்கு மனைவியுடன் வந்தார். நிறவெறி உச்ச நிலையில் அங்கிருப்பதைக் கண்ட ஹெஸ்டன், அது கூடாது என்று போராட்டம் ஆரம்பித்த கோஷ்டியில் சேர்ந்து. ஊர்வலத்தில் அதைக் கண்டித்து ஒரு பலகையையும் தூக்கிச் சென்றார்!



இளம் நாடக நடிகரான எபி. எஸ். திவாகர் சில படங்களில் நடித்து வருகிறார்.

காசி விசுவநாதன், ராஜ்காட்

மாலினி தற்சமயம் நடித்து வெளிவரவிருக்கும் படம் எது?

சபாஷ் மாப்பிளே! இம்மாதம் முதல் தேதி அது வெளி வந்திருக்குமானால், அடுத்து அவர் நடித்து வரப்போகும் படம் 'மகளே உன் சமத்தா'கத்தான் இருக்கும்.

புளூலாம்ப், மதுரை

ஒரு படத்தின் தரம் அல்லது அது பெற்ற வசூல் அல்லது அதன் மூலதனத்தின் மதிப்பு இவற்றில் எதை அடிப்படையாக வைத்து படத்தின் வெற்றி, தோல்வியை தாங்கள் நிர்ணயிக்கிறீர்கள்?

தரத்தையும் வசூலையும் அடிப்படையாகக் கொண்டு.

ஸ்ரீதர் யூனிட் வேலை செய்து சிவாஜி கணேசன் அளித்த 'விடிவெள்ளி', பீம்சிங் யூனிட் வேலை செய்து அளித்த 'பாசமலர்' இரண்டில் சிறந்த படம் எது?

மலரின் மணம்தான் கம்மென்று வீசுகிறது.

சாயி-கணி, கோவை

'பாவமன்னிப்பு' பாட்டுப் போட்டிக்கு எவ்வளவு கடிதங்கள் வந்தன?

நாலு லக்ஷத்து ஆயிரத்து இரண்டு.

'புனர்ஜன்மம்' டைரக்டர் ஆர். எஸ். மணியும் துப்பறியும் கதைகள் எழுதும் ஆர். எஸ். மணியும் ஒருவரா?

வெவ்வேறு நபர்கள்.

பத்மா-கமலா, சத்தியமங்கலம்

பத்மினிக்கும் ராமச்சந்திரனுக்கும் நடந்தது காதல் திருமணமாமே?

அல்ல. திருமணம் நிச்சயமாவதற்கு முன்பாக ஒருவரை யொருவர் பார்த்ததுகூடக் கிடையாது.

ராணி பிக்சர்ஸாரின் "கண்ணாடி மாளிகை" படத்தில் அசோகனும் ராதாராணியும் பிரதம பாகத்தில் நடிக்கிறார்கள்.

பத்மினிக்குப் பிறகு அவரது இடத்தை யார் அடைவார்கள்?

ராகினிதான் அடைந்திருக்கிறார். பத்மினிக்கு நடந்த அத்தனை உபசாரங்களும் இருவருக்குத்தான் வீட்டில் நடந்து வருகிறது!

வி. சங்கரன், சிவகெங்கை

பிலிமவுத் கார் என்பது என்ன?

நக்ஷத்திர ஸ்தானத்தின் அடையாளச் சின்னம்!

வசனம் என்றால் என்ன?

நக்ஷத்திர வாய்ப்பாடு - மனனம் செய்ய.

தியேட்டருக்கும் படவுலகுக்கும் உள்ள தொடர்பு என்ன?

படங்களை பந்தயக் குதிரைகளாகக் கொண்டோமானால், அக்குதிரைகள் ஓடும் பந்தய மைதானம்தான் இது. இங்கு நூறு நாள் ஒரு படம் ஓடினால், 'கவர்னர் கப்' பரிசு பெற்ற குதிரையைப் போன்றது அது!

நக்ஷத்திரம் எனப்படுபவர் எவர்?

படவுலகின் இன்றைய கண்கண்ட தெய்வம். சர்வ சக்தி படைத்த அணுகுண்டு!

"கட்! கட்!" இது என்ன?

டைரக்டர் செய்யும் ஜபம்!

தயாரிப்பாளர் என்பவர் யார்?

பணம் படைத்தவர் என்று தவறாகக் கருதப்படுபவர்; பரிதாபத்திற்குரியவர்!

படம் தயாரிப்பது எதைப் போன்றது?

இன்றைய சூழ்நிலையில் உரலில் இடும் தலையைப் போன்றது.

நான் டைரக்டராக ஆசைப்படுகிறேன். என்ன சொல்கிறீர்கள்?

அதிகாரமற்ற பெரும் பதவியை அடைய விரும்புகிறீர்கள்!

கோஷ்டி நடனம், படங்களுக்கு ஏன் அவசியம்?

எக்ஸ்ட்ராக்களின் திருவிழா அதுதானே!

நடிகர்களைச் சுற்றி வட்டமிட்டு வரும் கோஷ்டியைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது?

மார்கழி மாத பஜனை கோஷ்டி!

திரையுலகில் அட்வான்ஸ் அல்லது முன் பணம் எதைப் போன்றது?

திரும்பிக் கேட்ட முடியாத ஒன்று; நடிகர்களுக்குக் கிடைக்கும் லாட்டரிப் பரிசும்கூட. அட்வான்ஸ் கொடுக்கும் பலர் பிறகு படம் எடுப்பதே இல்லையே!

வேலுத்தம்பி, சிவகாசி

வயதாகியும் நடிகர்களுக்கு தலை நரைப்பதில்லையே எப்படி?

வெளுத்ததெல்லாம் பால் அல்ல! வீணே ஏமாந்து விடாதீர்கள்!

வெட்டுங்கள்! வெட்டுங்கள்!!

பாசமலர்

ராதா முழுசம்மதம் தராமல் ஆனந்தன் அவள் தலையில் பூ சூட முடியாது. அதை ராஜசேகரனும் பார்க்கிறான். அவன் அவளை அனுப்பிவிட்டு அறையில் தள்ளி ஆனந்தனை அடித்து நொறுக்குகிறான். இது அபத்தம். ராதாவிடம் உயிரையே வைத்திருப்பதாகக் கூறும் ராஜு, உடனே அங்கேயே நல்லதொரு முடிவு செய்திருக்க வேண்டும். அல்லது தூய்மையை விரும்புகிறவனாக இருந்தால் அவனையும் கண்டித்திருக்க வேண்டும். கதையை நீட்டுவதற்காக ஆனந்தனை சபதமிடச் செய்து ராஜுவை மன்னிப்பு கேட்டு அழைத்துவரச் செய்திருக்கிறார்கள் ''பணக்காரப் பெண்கள் தவறாக நடக்கலாம். அதை விட்டாரும் வரவேற்பார்கள். அவனுடன் சினேகம் கொள்பவன் அடித்து விரட்டப்படுவான்'' என்ற தவறான கருத்தைப் பிரதிபலிக்கும் இக்காட்சியை வெட்டிவிட்டு, ஆனந்தனே பயந்து வெளியேறுவது போலவும் பிறகு ராஜு ராதாவை வீட்டில் கண்டித்துவிட்டு ஆனந்தனை விலக்கி விடுவதாகவும் காட்டலாம்.

எஸ். கே. நாராயணன்,
சென்னை.

பாசமலர்

தனக்குப் பிடித்தமான பெண்ணை மணக்க அவள் வீட்டின்முன் உண்ணாவிரதம் இருந்து (அதுவும் பொடிப் பையன்களுடன்) அவள் தந்தையைப் பயமுறுத்தி, செங்கல்வராயன் அவளை மணக்கச் சம்மதம் பெறுகிறான். இது உடனே வெட்டப்பட வேண்டும். விருப்பமில்லாத பெண்ணையோ, அவள் தகப்பனாரையோ பயமுறுத்த, தூய்மையின் சின்னமான உண்ணா



வாழ்ந்ததெல்லாம் பொய். மண்ணும் பெண்ணும் பொன்னும் தரமுடியாத ஈடிணையற்ற இன்பம் தருவது பக்தியே. ஜே. ஆர். புரொடக்ஷன்ஸின் ''பட்டினத்தார்'' இதையேதான் கூறுகிறாரோ!

நாளொரு மேனியாய்

சரும எழில் மேம்பாடு

புதிய ரெக்ஸோனுதுணையோடு

ரெக்ஸோனு சோப்பின் மிருதுவான நுரையில் அடங்கியுள்ளது கேடில் எழிலூட்டும் பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமான கேடில், சருமத்தின் ஊடேசென்று, அதைமென்மையுடனும், மழமழப்பாகவும் மிளிரச் செய்து,...உங்கள் மேனி வனப்பை ஓங்கச் செய்கிறது. எடுப்பான நறுமணத்தினுல் உங்களை மணிக்கணக்கில் புதுமலர்ச்சியுடனிருக்கச் செய்கிறது. உங்கள் அன்ருட அழகுசாதனத்துக்குகந்தது ரெக்ஸோனு.



புதிய மேலுறை,
புதிய வடிவழகு, புதிய
பச்சை வர்ணம் ஆகிய
வற்ருேடு கூடிய புதிய
ரெக்ஸோனுவை
நீங்கள் விரும்புவீர்!

புதிய ரெக்ஸோனு—
உங்கள் சருமத்திற்கு அனுகுணமானது

ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனு ப்ரொ. லிமிடெட் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினுல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

RP.170-50 TM

'பட்டினத்தாரின் பத்தினி இவள். — ஜே. ஆர். புரொடக்ஷன்ஸாரின் "பட்டினத்தார்" படத்தில் சந்திரா.

போன்ற முரட்டுக் காட்சிகள் தேவையில்லை. வயது வந்த பெண்ணை ஒருத்தி அடிப்பதாகக் காட்டுவது அநாகரிகம். பள்ளிச் சிறுவனைக்கூட உபாத்தியாயர் அடிக்க முடியாத காலம் இது.

எம். எஸ். வள்ளிமயில்,
கூனியூர்.

ஸ்ரீ வள்ளி

ஸ்ரீ வள்ளி படத்தில் மறை போற்றும் வேதம் என்று ஒரு வசனம் வருகிறது. மறை என்ருல் வேதம் என்று பொருள். 'வேதம் போற்றும் வேதம்' என்ற உபமானம் அவ்வளவு பொருத்தமாக இல்லை. தவிர, அர்த்தமற்றதாகவும் இருக்கிறது. இதை வெட்டி விடலாம்.

ஸ்ரீதர்,
சென்னை.

விரதத்தைக் கேலி செய்து காட்டுவது ஹாஸ்யமல்ல; மன்னிக்க முடியாத குற்றம்.

கே. எஸ். சீதாராமன்,
சென்னை.

பாசமலர்

ஆனந்தனின் அத்தை ராதாவை அடிக்கிருள். இந்தக் காட்சியை வெட்டிவிடலாம். ராதா நாலும் தெரிந்தவள்; பணக்காரன் தங்கை. நாகரிக மங்கை. அடித்துக் கொடுமைப்படுத்துமளவுக்குப் பொறுக்க மாட்டாள். காலம் போகிற போக்கை யறியாமல், உணர்ச்சி வசப்படுத்தும் காட்சியாக நினைத்து மக்களை ஏமாற்ற முயன்ற டைரக்டர்தான் ஏமாந்து விட்டார். இது

பாசமலர்

தங்கையை விட்டுப் பிரியக் கூடாது என்பதற்காக அவள் வீட்டை விட்டுப் போவதை விரும்பாத ராஜு, தான் மட்டும் வீட்டை விட்டு ஏன் வெளியேறினர்! முரண்பாடான காட்சியாக இருக்கிறதே இது! இந்தக் காட்சியை நீக்கி விடலாம்.

பிரேமா.
சென்னை.

நாராயணன்
கம்பெனி
தயாரிக்கும்
கனகா பிலிம்ஸ்
பாக்கிய லக்ஷ்மி
காட்சிகள்





தியாகத்தையே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்பவள் பெண். உயிருக்குயிராகப் பழகிய தன் தோழியின் நல்வாழ்விற்காகச் சகல செளபாக்கியங்களையும் துறந்து, கடைசி மூச்சுவரை அவளுக்காகவே வாழ்ந்து இறந்த ஒரு தியாகப் பெண்மணியின் உணர்ச்சிமிக்க கதை "பாக்கியலக்ஷ்மி."

ஒரு வார்த்தையிலே அடங்கிக் கிடந்தது அவள் வாழ்வின் இன்பம். ஆனால்





அதைத் தன் உள்ளத்திலேயே புதைத்துக்கொண்டு சொல்லொணாத் துன்பங்களை மௌனமாக அனுபவித்தாள். இன்னொருத்தியின் சிரிப்பிலே தன் துக்கத்தை மறந்தாள்.

தன்னைத் தியாகத்தீயிலே பொசுக்கிக் கொள்ளும்போது அந்த உத்தமப் பெண்ணுக்கு நல்லகாலம் பிறந்தது-மரணப் படுக்கையில். தான் பட்ட துன்பங்களை யெல்லாம் மறந்து தோழியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே கண்மூடுகிறாள் அந்த "பாக்கியலக்ஷ்மி."







நாராயணன் கம்பெனி தயாரிக்கும கனகா பிலிம்ஸின் "பாக்கியலக்ஷ்மி" பெண்ணின் பெருமையை விளக்கும் கதையைக் கொண்டது. சௌகார் ஜானகி, இ. வி. சரோஜா, ஜெமினி கணேசன், தங்கவேலு முதலியோர் நடிக்கிறார்கள். கே. வி. சீனுவாசன் கதை - வசனம் - டைரக்ஷன் பொறுப்புக்களை ஏற்றிருக்கிறார்.

கவிஞர் கண்ணதாசனின் கருத்து மிக்க பாடல்களுக்கு விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் இசையமைத்திருக்கி

னார்கள். இப்படத்தின் ஆர்ட் டைரக்டர் சேகர் என்னும்போது கலைச்சிறப்புக்குக் கேட்கவே வேண்டாம். ஜி. பாலகிருஷ்ணா ஒளிப்பதிவாளராகப் பணியாற்றுகிறார்.

இப்படத்தின் பல கட்டங்களில் மக்கள் உணர்ச்சி வயப்படும்போது, தங்கவேலுவும் எம். சரோஜாவும் ஜோடியாக வந்து ரசிகர்களை வயிறு புண்ணாகும்படிச் சிரிக்கவைக்கப் போகிறார்கள். சௌகார் ஜானகியும் இ. வி. சரோஜாவும் தம் திறமையெல்லாம் காட்டி நடித்துவரும் இப்படம் அவர்களுக்கு மகத்தான புகழ் தரும். இரு தோழிகளின் வாழ்வில் புகுந்த டாக்டர் சுந்தராக ஜெமினி கணேசன் தோன்றி தன் பண்பட்ட நடிப்பால் உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளப் போகிறார்.

'அவரா லேசில் திருப்தியடைகிறவர்...'



"அதுவும் துணி விஷயத்திலா? அதெங்கே..." என்கிருர் பம்பாய் வாசியான ஸ்ரீமதி ஆர். ஆர். பிரபு. 'இப்போல்லாம் ஸன்லைட்டாலே வெளுக்கறேன் அவரோட துணிகள் எல்லாத்தையும். அவருக்கோ பெருமை! எனக்குந்தான். இருக்காதா? அமோகமா நுரைகட்டுது ஸன்லைட், தொட்டதெல்லாம் பளிச்சுன்னு வெளுப்பு. சலவைன்ஞ எனக்கு வேண்டியது ஸன்லைட்தான்!'

துணிகளைக் காப்பதற்குத் தூய, மென்மை வாய்ந்த ஸன்லைட்டைப் போல் வேறென்றில்லை என்பதே குடும்ப மாதர்களின் துணிவு. அதுவே உங்களுக்கும் இனிது.

ஸன்லைட்

ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

நான் ரசித்த காட்சி

பாசமலர்

தொழிற்சாலை மூடப்பட்டதால் விடு திரும்பும் தொழிலாளி ராஜு, யூனியனில் சேர்ந்ததற்காக வருந்துகிறான். யூனியன் பற்றி அவன் சரமாரியாகப் பொழிவது உள்ளத்தைத் தொடுகிறது. தொழிலாளிகளில் பலர், சில சுயநலமிகளின் பேச்சில் மயங்கி தங்கள் பிழைப்பில் தாங்களே மண் அள்ளிப் போட்டுக் கொள்ளுகிறார்கள் என்பதைக் கூறும் இக்காட்சியில் சிவாஜி கணேசனும் சாவித்திரியும் திறம்பட நடித்திருக்கிறார்கள்.

கா. சம்பத்குமார்,
சென்னை.

தங்கை ராதா, அண்ணனை ஒதுக்கி விட விரும்பும் ஆனந்தனின் காதல் தூய்மையானதல்ல என்று கூறி பாசத்தின் பெருமையை வெளிப் படுத்துகிறாள். ஆனந்தனை சுடுவதற்காகத் துப்பாக்கியுடன் வந்த ராஜுவின் கண்களிலிருந்து நீர் வழிகிறது. துப்பாக்கி கீழே விழுகிறது. உடனே ஒரு உறுதியுடன், வந்தது தெரியாமல் போய் விடுகிறான். பாசத்தின் பிரதி பலிப்பை உணர்த்தும் இக்காட்சியில் வசனம் பேசாமல் முகபாவத்தாலேயே நமது உள்ளத்தைப் பிழிந்தெடுத்து விடுகிறார் சிவாஜி கணேசன்.

எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம்.

இந்தப் பெண்கள் எந்தக் கட்சிச் சார்பிலும் சைக்கிள் ஊர் வலம் போகவில்லை! அலங்கார் பிக்சர்ஸார் பெயரிடாமல் தயாரித்து வரும் முதல் தமிழ்ப் படத்தில் அழகி பி. சரோஜா தேவியும் துணை நடிகைகளும்.

இக்கால இல்லங்களிலே ஸர்ப்...

'நம்மவர் வாழும் நவீன வழி...'

என்கிறார் பம்பாயிலுள்ள குடும்ப மாது பிரேமா சுந்தர்ஜீ.

'புதிது புதிதாக உயர்த்தி உயர்த்தியான பண்டங்கள் மீது நமக்கு நாட்டம்: இதுவே நம்மவர் வாழும் நவீன வழி. உதாரணமாக ஸர்ப். சட்டை, சேலை முதல் துண்டு, துப்பட்டா வரை எங்கள் வீட்டுத் துணிகள் எல்லாவற்றையும் சோபிதமான வெண்மையோடு சலவை செய்வது ஸர்ப்' என்கிறார் அவர். உங்கள் இல்லத்திலேயும் ஸர்ப் ஒளிவீசட்டுமே! வேலையைப் பாதியாக்குவதோடு அதே சமயம் துணிகளை உன்னதமாகவெண்மையாக்குவது ஸர்ப். இன்றே உபயோகித்துப் பாருங்கள்!



ஸர்ப் மூலம் உங்களுக்கு

வெள்ளைவெளேரென்ற சலவை



"ஐயாவுக்கு அதிர்ஸ்டம் வருகுது குடுருடு ... அம்மாவுக்கு ஆம்பிளெ பெறக்கப் போவுது குடுகுடு"—அரசு பிக்சர்ஸார் தயாரித்து வரும் "நல்லவன் வாழ்வான்" தமிழ்ப் படத்தில் குடுகுடுப்பைக்காரராக எம். என். நம்பியார் வருகிறார்.

தன் தங்கையின் தலையிலே ஆனந்தன் பூச்சூட்டுவதைப் பார்க்கிறான் ராஜு. உடனே அவளை ஜாடையாக அனுப்பி விட்டு ஆனந்தனை தனி அறைக்கு அமைத்துச்சென்று தண்டிக்கிறான். பெரிய மனிதர்கள் நான்கு பேர் முன்னிலையில் சட்டென்று யாரையும் தண்டித்துவிட மாட்டார்கள்; பெரிய மனிதர்கள் தாம் செய்யும் தவறை எப்படியெல்லாம் மறைப்பார்கள் என்பதை விளக்குப் ரசமான காட்சி இது.

கே. லக்ஷ்மி,
நாகர்கோவில்.

ராஜுவும் மாலதியும் மணமுடிந்து முதலிரவுக்காகத் தனியறைக்கு வருகின்றனர். இன்பமாக இருந்து மகிழ்கிறார்கள். பிறகு ராஜு தன் சகோதரியின் படம் மேஜை மீதிருப்பதைக்கண்டு அதை வேறுபுறம் திருப்பி வைக்கிறான். இது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ராதா எதுசெய்தாலும் ராஜுவுக்குப் பிடிக்கும். அவள் குறும்புக்காரியும்கூட. ஆகவே தன்னையும் தன் மனைவியையும் அவள் கேலி செய்வதாகக் கற்பனை செய்து தனிமையை உண்டாக்க, படத்தை வேறுபுறம் திருப்புகிறான். வெட்கம் என்ற ரசத்தை அருமையாகச் சித்தரித்திருக்கிறார் சிவாஜி கணேசன்.

எம். எஸ். வள்ளிமயில்
சுப்பிரமணியம்,
கூனியூர்

அவன் பேசுகிறான். அணையப் போகும் விளக்கைப் போலச் சுடர் விடும் தென்பு முகத்துடன் மகிழ்ச்சியோடு பேசுகிறான். அவன் நினைவில் பழைய இன்ப நினைவுகள் அலை மோதுகின்றன. தன் தங்கையிடம் அதுபற்றிப் பேசுகிறான். தான் அவளை வளர்த்தவிதம் பற்றிக் கூறுகிறான். ''கைவீசம்மா...கைவீசு ...கடைக்குப் போலாம் கைவீசு'' என்று ஆரம்பித்தவன், அதெல்லாம் வீணாகிவிட்டதே என்ற வேதனையுடன் சரியாகப் பேசமுடியாமல் அழுது விடுகிறான். பாசத்தின் சிறப்புடன் வேதனையையும் விளக்கும் அற்புதமான காட்சி இது. இதிலே மனம் விண்டு அழாதவர் யாருமே இருக்க முடியாது. சிவாஜி கணேசன் அற்புதமாக நடித்திருக்கிறார். இறப்பதைப் பற்றிக் கவலைப்படாமல், தன் தங்கைக்கு எதுவும் செய்யாமல் போகிறோமே என்று கவலைப்படும், உத்தம சகோதரனின் பாத்திரத்தில் இதைவிடச் சிறப்பாக யாரால், நடிக்க முடியும்?

சம்பத்.
சென்னை

ராதாவை தன் முன் ஆனந்தன் அடித்து விட்டதைக் கண்ட ராஜு உடனே பாய்ந்து ஆனந்தனை நொறுக்கி விடுகிறான். ஆனந்தனை விட்டு விட்டு ராஜு மீது பாய்கிறாள் ராதா. ''இது எங்கள் குடும்ப விஷயம். தலையிட நீயார்?'' என்று கேட்கிறாள். ராஜு அதிர்ந்து போகிறான். அவள் ஜீவனையே தன் ஜீவனாகப் பாவித்து, அவன் அன்பிலே வளர்ந்த ராதா அவனையே 'நீ யார்?' என்று கேட்டு விடுகிறாள். அவனும் உணர்ச்சி வசப்பட்டுத் தான் செய்த தவறை உணருகிறான். என்னதான் உயிருக்குயிராக வளர்த்து விட்டாலும் மணமான பெண்ணுக்கு கணவனும் அவன் குடும்பத்தாருமே பெரியவர்கள் என்பதை விளக்கும் சிறந்த காட்சி இது. சாவித்திரி மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

பி. ராமதுரை.
பேலமையூர்.

ராதா ஆனந்தனுடன் ஆனந்தமாகச் சுற்றிவிட்டு நேரம் சென்று விடு திரும்புகிறாள். ''ராதா!'' என்று கடுமையான குரலில் அழைக்கிறான் ராஜு. தன் காதல் விஷயம் தெரிந்து விட்டதோ என்று நடுங்குகிறாள் ராதா. மேலும் அவன் கேட்கும் கேள்விக

''நாம் இருவரும் இதே போல என்றுமே ஒன்று சேர்ந்திருக்கும் காலம் வருமா?'' —பி. வி. என். புரொடக்ஷன்ஸ் இரண்டாவது படத்தில் சௌகார் ஜானகி, புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

மைசூரில் ஒய். வி. ராவ் டைரக்ஷனில் தயாராகிவரும் "நாகார்ஜுனா" தமிழ்ப் படத்தில் ஜி. வரலக்ஷ்மி,

---

ளால் பெரிதும் குழப்ப மடைகிறாள் அவள். பிறகுதான் அவள் ஏன் தனியாகக் காரில் சென்றாள் என்று விசாரிக்கிறான். அருமையான "சஸ்பென்ஸ்" கொண்ட இந்தக் காட்சி டைரக்டரின் திறமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

கே. எம். பார்த்தசாரதி,
செங்கற்பட்டு.

வேலை நிறுத்தம் செய்ததால் ராஜுவுக்கு வேலை போய் விடுகிறது. வேதனைப்படுகிறான் அவன். ராதா அவனைத் தேற்றி தான் வேலை செய்தும் சிக்கனப்படுத்தியும் ஆயிரம் ரூபாய் வைத்திருப்பதாகக்கூற, ஆச்சரியத்தால் வாயைப் பிளக்கிறான் ராஜு. ஆண்களைவிட குடும்பப் பெண்கள்தான் குடும்பப் பொறுப்புணர்ந்து சிக்கன வாழ்க்கையை நடத்தி எதிர்காலத்திற்கு மிச்சப்படுத்துவார்கள் என்பதை விளக்கும் ரசமான காட்சி இது. சிவாஜி கணேசனும் சாவித்திரியும் தரமாக நடித்திருக்கிறார்கள்.

கி. பலராமன்,
சென்னை.

ராஜு ஏழை. தங்கை ராதாவை உயிருக்குயிராகப் பாதுகாக்கிறான். பணம் அவனிடம் வருகிறது. அமைதி போய் விடுகிறது. மீண்டும் பணம் போகிறது. ஆனால் அமைதி மீளவில்லை. அமைதியுடன் பார்வையும் போய் விடுகிறது. கடைசியில் தான் அலங்கரித்து, ஆதரவு காட்டி வளர்த்த தங்கையின் குரலைமட்டும் கேட்டபின் அவன் உயிரும் போகிறது. ராதா எழுந்திருக்கிறாள். அவன் கையைப் பிடித்தபடி விழுகிறாள். அவள் ஆவியும் பிரிகிறது. ராஜுவும் அவளும் ஒருவரின்றேல் மற்றவர் இல்லை என்று வாழ்ந்த உடன் பிறப்புக்கள். அவன் போனதும் அவள் உயிர்மட்டும் நிலைக்குமா? பாசமலரின் இரு இதழ்கள் உதிர்ந்து விடுகின்றன. பாசத்தின் சிறப்பை விளக்கும் இக்காட்சியில் சிவாஜி கணேசனும் சாவித்திரியும் அற்புதமாக நடித்திருக்கிறார்கள்.

டி. அகஸ்டின் சாயர்,
அயன்புரம்.



குகா பிலிம்ஸ் தமிழ்ப் படத்தில் பிரேம்குமார் நடிக்கிறார்.

வாடாத இளமையழகு

வாராதோ விரலசைந்தால்!

மேனி யெழிலைப் பராமரிப்பதே உங்களுக்கழகு! இளமை மாருத மெருகுடன் மிளிர ஹிமாலயா புக்கே ஸ்நோ உபயோகியுங்கள். சோர்வுற்று வரண்ட சருமங்கூட துளிர்த்தெழும் புதுமலர்ச்சியோடு தள தளப்புடன் விளங்கக் காண்பீர்கள். வெயில், புழுதிக் காற்று ஆகியவற்றிலிருந்து மேனி யெழிலைக் காப்பதோடு, முகப்பருக்களும், சுருக்கங்களும் வராமல் தடுக்கிறது ஹிமாலயா புக்கே ஸ்நோ. உங்கள் மேனி யெழிலுக்குத் தக்க பராமரிப்பு அளியுங்கள். இளமை மாருத அழகைக் கொஞ்சியழைப்பது....

ஹிமாலயா புக்கே ஸ்நோ

HBS. 22-50 TM லண்டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினுல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

போடு...

தியேட்டர்களுக்கு அருகிலிருப்பதால் சிலருக்கு அதிக வியாபாரம்

ஓட்டல் முதலாளிக்கு, படம் விட்டதும்—ஆரம்பமாகு முன்னும் வியாபாரம் நடக்கிறது.

படம் பார்த்து வெளிவருவோர் உடனே தலைவலி மாத்திரை வாங்க நேரிடுகிறது.

ஹாஸ்யத்தை ரசிப்போருக்கு_(!) வயிற்றுவலி நிவாரண மருந்து தேவைப்படுகிறது.

சிகரெட், பீடி வியாபாரிக்கு நிறைய வியாபாரம் நடக்கிறது. ஊதித்தான் தள்ளுகிறார்களே!

ஆகவே இந்த வியாபாரிகளுக்கெல்லாம் தனிவரி போட்டு விட்

வரி!

•••

நடக்கிறது. அவர்களுக்கு ஏன் பிரத்தியேக வரி போடக்கூடாது.

படத்தில் பாடல் நன்றாக இருந்தால் இசைத்தட்டு ஏராள மாக விற்பனையாகிறது.

கத்திச்சண்டைப் படம் முடிந்ததும் பலர் அவசரமாக வந்து கத்தி வாங்குகிறார்கள்.

புதுமாதிரிப் புடவையைப் படத்தில் பார்த்து விட்டால் புடவைகள் விற்பனையா கின்றன.

படம் முடிந்து வெளிவரும் பெண்களில் பலர் பிரெய்ஸரி உடனடியாக வாங்குகிறார்கள்!

டால் என்ன? என்று கேட் கிறார் ஒரு திரைப்பட ரசிகர்!



அசோகா பிக்சர்ஸார் தயாரித்து வரும் ''இந்திரா என் செல்வம்'' படம் முடிவடையும் கட்டத்திலிருக்கிறது. அசோகன், நடிகவேள் எம். ஆர். ராதா, பண்டரிபாய், ஏ. கருணாநிதி டி. பி. ஹரிசிங் முதலியோர் நடித்துவரும் இப்படத்தை டங்கன் மணி, பத்மநாபன் இருவரும் டைரக்ட் செய்து வருகிறார்கள். நல்ல கதை அமைப்பு கொண்ட படம் இது.

அன்னையின் அன்புலகிலே...பொன்னான பொருள்களே யன்றி வேறுண்டோ?

ஆதரவுக்கு ஆதரவான அன்னைக்கு ஆதரவு: டால்டா



'அன்பு' 'அன்பு' என்கிறது நம் வீடு... அன்னை
தரும் பொருள்கள்... 'அன்பு' 'அன்பு' என்கிறது...
நல்லுணவு! அவள் சமைக்கும் ஒவ்
வொரு காய்கறியிலும் அன்பின் சுவை!
நம் சுகமே தன் சுகமெனக் கருதிப் பொன்
னான பொருள்களையே தரும் தாய்,
கருத்துடன் சமையலுக்குத்
தேர்ந்தெடுப்பது டால்டா.

அருமையான தாவர எண்ணெய்களா
லான, தூய டால்டா; வளரும் உடம்
புக்கான வைட்டமின்கள் அடங்கிய,
மேலான வனஸ்பதி...
அறுசுவை நல்லுணவுக்கான
டால்டா... அது நம்மவர்க்கே உகந்ததன்றோ...

டால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

DL. 68-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

குட்டிச் சம்பவங்கள்

89705

பாரணி ஸ்டுடியோவில் பானுமதியின் சொந்தப்படம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. பானுமதியின் கணவரான ராமகிருஷ்ணு படத்தை டைரக்ட் செய்து வந்தார்.

குறிப்பிட்ட அன்றைய தினம், பானுமதியும் அவருடன் கதாநாயகனுக நடித்து வந்த நாகேஸ்வரராவும் சந்தித்து காதல் கொள்ளும் காட்சி படமாக்கப்பட வேண்டியிருந்தது.

படத்தின் டைரக்டரான ராமகிருஷ்ணு பானுமதியை அழகாக ஆடை அணிகள் அணிந்து வரும்படிச் சொன்னுர். ஆனுல் படத்தின் ஒளிப்பதிவாளரோ, அவர் அணிந்து வந்த நகைகளையும் புடவை ரவிக்கையையும் கவனித்துவிட்டு, ''படப்பிடிப்புக்கு இது சரியாக வராது. சாதாரண உடைகளையே அணிந்து வாருங்கள்'' என்று சொன்னுர்.

ராமகிருஷ்ணுவுக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது!

''எளிமையான உடை ஏன் அணியவேண்டும்? கவர்ச்சிகரமான ஆடை அணிகளை அணிந்துகொண்டால்தானே காதலே வரும்! இந்த உடையே இருக்கட்டும்!'' என்று சொல்லி விட்டார்!

இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்டபோது செசில் பி. டிமிலியின் உதாரணம் ஒன்றும் எனது நினைவுக்கு வருகிறது.

'சாம்ஸனும் டிலேலாவும்' படத்தை டிமிலி தயாரித்து வந்த சமயம் அது. படத்தின் கதாநாயகியான டிலேலாவாக நடிக்கும் ஹிடிலாமர் அணிவதற்காக உயர்தர விலையில் துணியை வாங்கி வரும்படி சிப்பந்திக்குக் கட்டளை யிட்டார் டிமிலி.

டிமிலியின் சிப்பந்தி கடைவீதிக்குச் சென்று டிமிலி சொன்ன வண்ணத்தில், அதே தரத்தில்—ஆனுல் மிகக் குறைந்த விலையில் துணி ஒன்றை வாங்கி வந்தார்.

மிகக் குறைந்த விலையிலேயே அவர் சொன்ன தரத்திற்கேற்ப துணி வாங்கி வந்ததுபற்றி டிமிலியிடம் பெருமையாகச் சொன்னுர் அவர்.

ஆனுல் சிப்பந்தியின் சிக்கனம், டிமிலிக்கு ஆத்திரத்தை மூட்டிவிட்டது.

''உன்னை யார் இவ்வளவு குறைந்த விலையில் இந்தத் துணியை வாங்கி வரச் சொன்னது?'' என்று சீறினர் டிமிலி.

''நீங்கள் சொன்ன எல்லா அம்சங்களும் இந்தத் துணியில்

தியேட்டரிலே நீங்கள் படம் பார்க்கும்போது ''பொறெண்ணேய் ஸேட்'' என்ற குரல் காதுகளைத் துளைக்கிறதே அது என்ன தெரியுமா?

பொறை, வெண்ணே, பிஸ்கட்.



படத்தின் இடைவேளையில் காற்ருட வெளியே வந்தால் ''வேறேல்லே, வேறெல்லே'' என்ற ஒலிகேட்கிறதே அது என்ன என்று தெரியுமா?

— ஜாஷரீரூ —

இருக்கின்றன. தவிர, படத்தில் பார்க்கும்போது நீங்கள் குறிப்பிட்ட அந்த உயர்தர விலையுள்ள துணிக்கும் இதற்கும் வித்தியாசமே தெரியாது! அப்படியிருக்க எதற்கு வீண் செலவு என்றுதான் இதை வாங்கி வந்தேன்!' என்று டிமிலியிடம் விளக்கினுர், அந்தச் சிப்பந்தி.

"நீ நினைப்பது தவறு. நீ வாங்கி வந்திருக்கும் குறைந்த விலையுள்ள துணியில் நான் எதிர்பார்க்கும் 'ரிசல்ட்' கிடைக்காது. சாதாரணமான துணிதானே என்று கதாநாயகியும் இருந்து விடுவார். அதுவே தான் அணிந்திருப்பது மிக்க விலை உயர்ந்த துணி என்று அவருக்குத் தெரிந்தால் இயல்பாகவே அவருக்கு ஒரு மிடுக்கு வந்துவிடும். இதுதான் மனிதத் தன்மையின் சித்தாந்தம். எனவே விலையைப்பற்றிக் கவனியாதே! நான் சொன்ன விலையிலேயே துணியை வாங்கி வா!'' என்று சொன்னுர் டிமிலி.

சிப்பந்திக்கும் டிமிலியின் நுணுக்கம் அன்றுதான் புரிந்தது!

*　　*　　*

தெலுங்குப் படவுலகின் 'ஹாஸ்ய மன்னன்' என்று திகழும் ரேலங்கி ஒரு தமாஷான நடிகர். தமாஷ் நடிகர்தானே அவர்?

அவர் நடித்துவந்த படமொன்றுக்கான பணத்தை பலமுறை அப்படத் தயாரிப்பாளரிடம் கேட்டும் அவர் தரவில்லை. கடைசியில் ரேலங்கி ஒரு யோசனை செய்தார். கடிதமொன்றை எழுதி அவருக்கு அனுப்பினுர். அவர் எழுதிய கடிதம் இதுதான்!

"அன்புள்ள ஐயா!

தங்கள் படத்தில் நடித்து வரும் நான் பலமுறை பணம் கேட்டும் தாங்கள் தருவதாக இல்லை. இத்துடன் சரியாக பனிரெண்டு மாதங்கள் ஆகின்றன. ஒரு தாயார்கூட தன் பிள்ளையை பொறுமையுடன் பத்து மாதங்கள்தான் சுமக்கிருள். ஆனுல் நானே பனிரெண்டு மாதங்களுக்குமேல் பொறுமையுடன் இருந்து விட்டேன். இனி என்னுல் பொறுமையுடனிருக்க முடியாது!

இப்படிக்கு,
ரேலங்கி!''

கடிதத்திற்குப் பலன் என்ன கிடைத்திருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம்!

*　　*　　*

'காகா' ராதாகிருஷ்ணன் பேச ஆரம்பித்து விட்டால் ஹாஸ்ய வெடிகள் உதிர்ந்து கொண்டே இருக்கும்.

சென்னை வாணி மகாலில் நாடகமொன்றுக்கு வாழ்த்துரை வழங்க 'காகா' ராதாகிருஷ்ணனை மேடையிலிருந்த 'மணப்பந்தல்' அசோகன் அழைத்தார்.

திடுதிப்பென்று, முன்னறிவிப்பேதுமின்றி, வந்த இடத்தில்

பேச அழைத்து விட்டதைக் குறித்து ராதாகிருஷ்ணன் அயரவில்லை!

நேரே மேடைக்குப் போனார். கூடியிருந்த ரசிகர்களை கண்ணோட்டம் விட்டார்.

"அன்புள்ள ரசிகர்களே! சாதாரணமாக காக்காவுக்கு இரவு நேரங்களில் கண் தெரியாது. வேலையும் இருக்காது. அது வேறு! ஆனால் இந்தக் 'காக்கா'வுக்கு அப்படியில்லை!......" என்று பேச்சை ஆரம்பித்ததுதான் தாமதம், கொட்டகையே அதிர்ந்து விட்டது கரகோஷத்தால்!

* * *

'தங்கப்பதுமை' படத்திற்கான காட்சியொன்று மூண்டந்துறையில் படமாக்கப்பட்டு வந்தது.

சிவாஜி கணேசனுக்கு வேட்டை ஆடுவதென்றால் பிரியமல்லவா? ஆகவே அங்குள்ள ஆற்றங்கரை, தோப்பு இவற்றைப் பார்க்க துப்பாக்கியுடன் கிளம்பி விடுவார் அவர் ஓய்வு நேரங்களில்.

வேட்டையாடிக் கழித்த காலம் போக மிச்சமுள்ள நேரத்தில் சிவாஜி பல்வேறு ஆட்டங்களில் கலந்து கொள்வார்.

படப்பிடிப்பின் இடைவேளையிலே சிவாஜி கணேசன், பக்கத்திலிருக்கும் கட்டையை மட்டையைப்போல் பிடித்துக் கொள்வார். காலஞ் சென்ற ஜூபிடர் சோமுவின் மகன் காசி சிறு கூழாங்கல்லை எடுத்து பந்தாகப் போடுவார்.

இருவரும் கிரிக்கெட் ஆடுவார்கள். ஒருநாள் படத்தின் வசனகர்த்தாவான அரு. ராமனுதன் அங்கு வந்தார்.

எல்லாரும் சேர்ந்து புது விளையாட்டை ஆரம்பித்தார்கள். அதாவது கல்லெறியும் விளையாட்டு. மிகப் பெரிய கல்லொன்றை எடுத்து யார் அதிக தூரம் எறிகிறார்களோ, அவர்களே வெற்றி பெற்றவராவார் என்று சொல்லி, விளையாட்டை ஆரம்பித்தார்கள்.

சிவாஜி கணேசன் உட்பட அனைவரும் விளையாட்டில் கலந்து கொண்டார்கள்.

வெற்றி பெற்றது யார் தெரியுமா? சிவாஜி கணேசன்தான்! அவர் எறிந்த கல் பதினேழு அடி சென்று விழுந்தது!

'கடைசி பரிசு' கிடைத்தது யாருக்குத் தெரியுமா? போட்டியை ஏற்படுத்திய அரு. ராமனுதனுக்குத்தான்.

அவர் வீசிய கல் ஐந்து அடி தூரம் தான் சென்றது!

தியேட்டரில் நம்மைப் படம் பார்க்க விடாமல் நின்று கைகளையும் தூக்கியபடி "சோடேலேர்" என்று கூவுகிறானே அது என்ன தெரியுமா?

[illegible]

நல்லவன் வாழ்வான்





அரசு பிக்சர்ஸாரின் "நல்லவன் வாழ்வான்" தமிழ்ப்படம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. கருத்துமிக்க கதையைக் கொண்ட இப்படத்தை ப. நீலகண்டன் டைரக்ட் செய்து வருகிறார். கதை-வசனம் எழுதியிருப்பவர் அறிஞர் அண்ணா.

சில பெண்கள் இயற்கையாக அழகாக இருக்க மாட்டார்கள் அவர்களது ஆடையணிகள் அவர்கள் அழகை (!) மேலும் கெடுத்துவிடும். சில அழகிகள் எது செய்து கொண்டாலும் அழகு கூடி விடும். இவள் அழகு மங்கை. ஆடையணிகள் மேலும் அழகு சேர்க்கின்றன. சித்ராலயாவின் "தேன் நிலவு" படத்தில் இயற்கை யழகு மிகுந்த வைஜயந்திமாலா

பருவப் பூரிப்பு கொண்ட இளம் பெண்கள் சிரித்து விட்டால் எதிரே இருப்பவன் தேனில் விழுந்த ஈயாகி விடுகிறான். அவன் இளைஞனாகத்தானிருக்க வேண்டுமென்பதில்லை! இவளது குறும்புப் பார்வையே யாரையோ தலைவணங்கச் செய்கிறது என்று தெரியவில்லையா? அரசு பிக்சர்ஸார் வேகமாகத் தயாரித்து வரும் "நல்லவன் வாழ்வான்" படத்தில் இ. வி. சரோஜா.

இவளும் பருவமங்கைதான். வாளிப்பான உடற்கட்டு கொண்ட இவள் கொஞ்சம் சங்கோஜி போலிருக்கிறது. இவள் விரும்புகிறவன் எதிர்ப்பட்டு விட்டான் போலும். அதுதான் இப்படி வெட்கப்படுகிறாள். இந்த ஆரணங்கு கொஞ்சம் கர்னாடகம். ஆகவேதான் இத்தனை வளையல்கள் அணிந்திருக்கிறாள்! அரசு பிக்சர்ஸாரின் "நல்லவன் வாழ்வான்" படத்தில் ராஜசுலோசனா

'சஸ்பென்ஸ்' என்கிறார்களே, அது பெண்களிடம் நிறைய உண்டு! அவர்களை ஒருவன் உற்றுப் பார்த்தால், முக அழகு முழுவதையும் காட்டாமல் தலையை கவிழ்த்துக் கொண்டு விடுவார்கள்! தெரிந்தும் தெரியாமலும் அழகை வெளிப்படுத்தும்போதுதான் ஆடவன் ஏமாந்து விடுகிறான்! சரவணா பிலிம்ஸார் தயாரித்துவரும் "பாலும் பழமும்" படத்தில் அழகி சரோஜாதேவி

இவள் நாகரீக மங்கை. கொஞ்சம் படித்தவள் போலிருக்கிறது. அதனுல்தான் கொஞ்சம் மமதையும் கொண்டிருக்கிருள் போலும். ஆடைகள் சாதாரணமாக இருந்தாலும் இவற்றுக்கு நிறைய கவர்ச்சியுண்டு. அதற்காகவே நாகரீகமான சில்க் புடவையும் சோளியும் அவளே அலங்கரிக்கின்றன. சரவணு பிலிம்ஸின் "பாலும் பழமும்" படத்தில் சௌகார் ஜானகி.

இவள் குடும்பத்திலே கொஞ்சம் செல்லமாக வளர்ந்தவள். ரொம்பவும் குறும்புக்காரியாக இருப்பாள் என்பதைப் பார்வையே சொல்லுகிறதே! உடம்பெல்லாம் நோகும்படியாக ஆடையாபரணங்கள் அணிந்திருக்கிருள். இந்த இரட்டைப் பின்னல் (வடநாட்டுக்)காரி, பரணியின் "கானல் நீர்" படத்தில் எல். விஜயலக்ஷ்மி இப்படிக் கவர்ச்சிகரமாக வருகிருர்.

இவள் சகல வசதிகளும் கொண்டவள். நினைத்ததையெல்லாம் நடத்திக் கொள்ள இவளால் முடியும். ஆனால் இத்தனை ஆடையணிகளிருந்தும் இவள் முகத்திலே சோகம் படர்ந்திருக்கிற தென்றால் அது காதலில் கிடைத்த ஏமாற்றமாகத்தானிருக்க முடியும். சரஸ்வதி பிக்சர்ஸாரின் "ராணி சம்யுக்தா"வில் பத்மினி சம்யுக்தாவாக அருமையாக நடித்து வருகிறார்.

காட்டில் சுதந்திரமாகத் திரியும் புள்ளிமானைப் போன்றவள் இந்த அழகி. பருவம் இவளுக்கு முலாம் பூசி விட்டிருக்கிறது. ஆனால் இவள் காட்டில் காயும் நிலவாகிவிட மாட்டாள். இவளது இனத்தவர்கள் நாகமலைப் பக்கத்திலே நிறைய உண்டு. மாதேஸ்வரியின் ''நாகமலை அழகி''யில் புதுமுகம் லீலா கதாநாயகியாகக் கவர்ச்சிகரமாகத் தோன்றி நடிக்கிறார்.

IOB 747

நாங்கள் உண்மையிலேயே பெருமை அடைகிறோம்

இன்று மக்கள் சமுதாயத்திற்கு இன்றியமையாதது பாங்கிங் தொழில். வாடிக்கையாளர்களுக்கு சிநேகப் பண்புடன் உபயோகமான சேவை செய்வதை அனுசரிப்பதே அத்தொழிலின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணம்.

எமது வாடிக்கையாளர்கள்—தொழிலதிபர்கள், ஏற்றுமதி செய்பவர்கள் அல்லது ஒரு ஐந்து ரூபாயை சேமிப்பு கணக்கில்கட்ட விரும்பும் சாதாரண மனிதர்களானாலும் சரி-தமக்கு எல்லாத் துறைகளிலும், சிநேகப் பண்புடன் சேவை யளிக்கக்கூடிய ஸ்தாபனம் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் என்று உணருகிறார்கள். இதுவே எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது என்பதை நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம்.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிட்.

ஸெண்ட்ரல் ஆபீஸ் : மதராஸ்

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

ஸி. பி. துரைக்கண்ணு
ஜெனரல் மானேஜர்

எல்லாம் உனக்காக

தொடர்ச்சி

சர: தெரியாது. நீங்க செய்தது எனக்குத் தெரிஞ்சு போச்சுங்கிறது உங்களுக்குத் தெரியாது?

வெங்: என்னம்மா இது? என்னென்னமோ பேசறே?

சர: பேசவேண்டியதை என்னுலே பேசமுடியலே. நீங்க என்னைப் பெத்தவராச்சேங்கிற பாசமும், மதிப்பும் என்னைப் பேச விடாமல் தடுத்துக்கிட்டிருக்கு. ஏன் தெரியுமா? இதுவரை எந்தப் பெண்ணுடைய வாழ்விலும், கனவிலும்கூட நடந்திராத காரியம் நடந்திருக்கப்பா.

வெங்: சரளா! உனக்கு அவமானமா? நம்பிக்கை துரோகமா? யார்...? அவ்வளவு துனிச்சலுள்ளவன் யார் அம்மா?

சர: நீங்கள் தானப்பா.

வெங்: சரளா...

சர: ஆமாப்பா நீங்கதான். இதை செய்ததெல்லாம் நீங்களே தான்.

வெங்: நானு? சரளா ... என்னைப் பார்த்துப் பேசு. நான் உன்னைப் பெத்த தகப்பன் அம்மா... என் கனவில்கூட உனக்கு துரோகம் செய்ய நினைக்கலேம்மா. என்னுலே செய்யவும் முடியாதே.

சர: இனிமே செய்யறதுக்கு என்னப்பா இருக்கு? அந்த துரோகம் ரெண்டு வருஷத்துக்கு முன்பே நடந்திடுச்சு. என் கல்யாண சமயத்திலேயே அந்தக் காரியம் பூர்த்தியாயிடுச்சு.

வெங்: கிடையாதம்மா. கிடையவே கிடையாது. உனக்கு எந்தத் துரோகமும் நடக்கலேம்மா. தாயிழந்த உன்னை என் மடியிலே கிடத்தி தாலாட்டுப் பாடி வளர்த்தேனே, எந்தக் கையாலே உனக்குப் பால் கொடுத்தேனே, அதே கையாலே உனக்கு விஷம் கொடுப்பேனு? என்னை நம்பு தாயே. நான் எது செய்தாலும் உன் நன்மையை முன்னிட்டுத் தான் செய்திருப்பேன்.

சர: எதப்பா எனக்கு நன்மை? ரெண்டு வருஷ வாடகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட கணவனேடு வாழ்க்கை நடத்தறது எனக்கு நன்மையா? கணவனிருந்தும் நான் விதவையாகி வேதனை அனுபவிக்கிறது எனக்கு நன்மையா? நான் உயிரோடிருக்கும் போதே நான் பெத்த பிள்ளையை தகப்பனிருந்தும் அனுதையென்று நாலுபேர் பார்த்து சிரிக்கிறது எனக்கு நன்மையா? இல்லே இதெல்லாம் நன்மைதான்னு நீங்க நம்புறீங்களா?

வெங்: சரளா! யாரம்மா உங்கிட்டே இப்படியெல்லாம் சொன்னது? அந்த மாதிரி எதுவும் நடக்கல்லே. நடக்கவும் முடியாது.

சர: நடக்கக் கூடாதுன்னு தான் இந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்தீங்களா? எதுக்காக இந்தப் பத்திரம்? இதுக்கு என்ன அர்த்தம்?

வெங்கடாசலம் மெதுவாக போகிருர்.

சர: அப்பா! இவ்வளவு கொடூரமான தண்டனையை எனக்கு எதுக்குப்பா கொடுத்தீங்க? புனிதமான விவாகத்தை வியாபார முறையிலே செய்திருக்கீங்களே, விலைமாதரைப்போலே வேருருத்தருகிட்டே கெடுவு வச்சு என்னை அடைக்கலமா கொடுத்திருக்கீங்களே, இது உங்களுக்கு அவமானமா தெரியலையா? நம்பிக்கைத் துரோகம்னு படலையா? உலகத்திலே எதை இழந்தாலும் யார் இல்லேன்னுலும் எனக்கு அப்பா இருந்தால் போதுமுன்னு நினைச்சேனே. எனக்கு கல்யாணமாகி என் கணவரோடு வெளியேற நேர்ந்தால் உங்கள் அன்பு நிழலை விட்டு அகலவேண்டி வருமேன்னு அல்லும் பகலும் கண்ணீர் சிந்தினேனே, அழுதாலும் ஆனந்தப்பட்டாலும் அப்பாங்கிறதைத் தவிர, அம்மான்னு கூப்பிட்டு அறியாத என்னையா மோசம் பண்ணினீங்க? ஆண்டவன் என் காலை ரெண்டா ஒடிச்சான். நீங்க என்

ஹிருதயத்தையே சுக்கு நூறு ஒடிச்சுட்டீங்க.

வெங்: சரளா, இப்போ நான் எது சொன்னாலும் நீ நம்பமாட்டே. நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் உனக்கு எந்தத் துரோகமும் செய்யலே. நீ ஒப்புக் கொண்டாலும் மறந்தாலும் நான் உனக்கு அப்பா அப்பாதான்...உன்னைப் பெத்தவன்கிறதுக்காக அல்ல. உன்னை என் பிராணனுக்கு நிகரா பாசம் வச்சதுக்காக ஒவ்வொரு கணமும் உன் நன்மையை முன்னிட்டு வாழ்ந்ததற்காக நான் உனக்கு அப்பாதான்.

சர: கிடையவே கிடையாது. நீங்க அப்பாவும் இல்லே. நான் இனி உங்களுக்கு மகளும் இல்லே. அந்த சரளா இறந்து மண்ணோடு மண்ணாயிட்டா.

சரளா நாற்காலியை தள்ளிக் கொண்டு வேகமாகப் போகிறாள்.

வெங்: சரளா...சரளா.

வேதனைப்படுகிறார்.

பத்து

ஆனந்தனின் கேள்வி

ஆனந்தன் வருகிறான் வெங்கடாசலத்திடம். அவேசத்துடன் பேசுகிறான். வெங்கடாசலம் கண்களைத் துடைத்தபடி வருகிறார்.

ஆன: நில்லும். இனி நீர் ஓடி ஒளிஞ்சு தப்ப முடியாது. நீர் செஞ்சுகிட்டு வந்த அக்கிரமம் எல்லாம் அம்பலத்துக்கு வந்திடிச்சு. இதோ பாரும், அலையெனத் திரண்டு வரும் மக்கள் கூட்டம் உம்மைச் சும்மா விடமாட்டாங்க. மன்னிக்கவும் மாட்டாங்க.

வெங்: நான் மன்னிப்பு கேக்கவும் தயாராயில்லே. என்னை



யாரும் மன்னிக்க வேண்டிய அவசியமும் இல்லே.

ஆன: இப்படிச் சொல்லித் தப்பிச்சுக்கலாமுன்னு நிணக்கிறீரா?

வெங்: ஆனந்த், உன்னுடைய ஆத்திரம், ஆவேசம் எல்லாமே அனுவசியம். நான் இப்போ செத்த பாம்பு.

ஆன: நீரா செத்த பாம்பு? உம்முடைய தில்லு முல்லு திருகு தாளத்தை எல்லாம் தொடர்ந்து செய்ய முடியாதுங்கறதை எச்சரிக்கை பண்ணிட்டு போக வந்திருக்கிறேன்.

வெங்கடாசலம் தன் தவறுகளைத் தானே கூறுகிருர்.

ஆன: ம்...பொறியில் அகப்பட்ட எலி நீர். இனி புத்தி வந்து என்ன பிரயோஜனம்?

வெங்: ஆனந்த், ஏம்பா என்னைக் கொஞ்சம் கொஞ்சமா கொல்றே? தயவு செய்து இந்த இடத்தை விட்டுப் போ.

ஆன: நீர் என்னைத்தான் போகச் சொல்ல முடியும். பொங்கி வந்திருக்கும் இந்த மக்களைப் போகச் சொல்ல முடியாது. அவங்க உம்மை நடுத்தெருவிலே நிறுத்தி கேள்வி கேட்கப் போருங்க. பதில் சொல்றதுக்குத் தயாராக இரும்.

வெங்: ஆனந்த், போறதுக்கு முன்னலே ஒண்ணு கேட்டுட்டுப் போ. ஒரு காலத்திலே நான் வெங்கடாசலம் அல்ல. சரளாவைப் பெத்த தகப்பன் ஸ்தானத்திலே பேசறதா சொன்னேன். இன்னிக்கு உன் காலைப் புடிச்சு கன்னிகாதானம் செய்து கொடுத்த மாமனருங்கற முறையிலே...

ஆன: அந்த உறவெல்லாம் அறுந்து போச்சு. இனி நீர் மாமனுருமல்ல. நான் மருமகனுமல்ல. நீர் வெங்கடாசலம். நான் ஆனந்தன்.

போகிருன்.

பதினென்று

எல்லாம் உனக்காக

ஆனந்தன் சரளாவை தன்னுடன் வருமாறு அழைக்கிருன். ஆனுல், அவன்தான் மறுமணம் செய்ய விரும்பியவன் என்று தவருகக் கருதிய சரளா மறுக்கிருள்.

ஆன: சரளா புறப்படு.

சரளா: எங்கே?

ஆன: நான் போற இடத்துக்கு. இனிமே ஒரு நிமிஷம்கூட இந்த வீட்டில் இருக்கக்கூடாது.

சர: ஏன் இந்த வீடு உங்களே என்ன செஞ்சுது?

ஆன: வீடா இது? விஷப் பாம்புகள் நிறைஞ்ச புத்து. வஞ்சனேயும் சூதும் நிறைஞ்ச கூடாரம்.

சர: யார் செஞ்சது வஞ்சனேயும் துரோகமும்?

ஆன: யாரா? அந்தப் பெரிய மனுஷன், உங்கப்பா.

சர: உங்களுக்கு அதிலே பங்கில்லேயா?

ஆன: சரளா...

சர: எங்கப்பா மத்தவங்களே ஏமாத்திளுரு, நீங்க உங்களேயே ஏமாத்திக்கிட்டீங்க.

ஆன: சரளா...

சர: பணம் பதவியோடு வந்த பகட்டான வாழ்வுக்காக உங்களுக்கே இஷ்டமில்லாமே ஒரு நொண்டிப் பெண்ணைக் கல்யாணம் செய்துகிட்டீங்களே, அந்த நேரத்திலே உங்க மனசை நீங்களே ஏமாத்திக்கிலேயா? சொல்லுங்க.

ஆனந்தன் சரளாவைப் பார்க்கிருன்.

சர: பணத்துக்காகத்தான் என்னைக் கல்யாணம் செய்துகிட்டீங்க. பதவிக்காகத்தான் என்னைக் கல்யாணம் செய்துகிட்டீங்க. என் மேலே பிரியப்பட்டா கல்யாணம் செய்துகிட்டீங்க? வாய் திறந்து பதில் சொல்லுங்க. என் மேலே பிரியப்பட்டா என்னைக் கல்யாணம் செய்துகிட்டீங்க?

ஆனந்தன் இல்லை யென்று தலையசைக்கிருன்.

சர: பின்னே எதுக்காகத்தான் என்னைக் கல்யாணம் செய்து கிட்டீங்க? உங்களை யாராவது வற்புறுத்தினுங்களா? உங்க வாசல் தேடி வந்தாங்களா?

ஆன: வாசல் தேடி வந்ததுமில்லாமே, என் மகளுக்கு வாழ்வு கொடுன்னு என் காலைப் பிடித்து கண்ணீர் விட்டுக் கதறினுர் உங்க அப்பா.

சர: அதனுலே உங்க மனசு இளகிப் போச்சாக்கும். ஆ ஹா... எங்கப்பாவுக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பிலேயே விரோதிகளாகத்தான் சந்திச்சிருக்கீங்க. அரசியல் அபிப்ராயம் எல்லா வகையிலும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்குள்ளே இருந்தது. அவ்வளவு கருத்து வேறுபாடு உள்ள என் தகப்பனுர் கண்ணீர் விட்டார். அதனுலே மனசு இளகிப் போச்சுன்னு சொல்றீங்களே, இதுக்கு என்ன பேர் சொல்றதுன்னே எனக்குப் புரியல்லையே.

ஆன: அநுதாபம், கருணை இப்படி பல பேர் சொல்வாங்க. என்னைப் பொருத்தவரை தியாகம்னுகூட சொல்லலாம்.

சர: மனைவி கணவன் கிட்டே எதிர்ப்பார்க்கிறது தியாகத்தை அல்ல. இதய பூர்வமான அன்பை.

ஆன: அப்படின்னு நான் உங்கிட்டே அன்பு செலுத்தலேங்கிறியா?

சர: அப்படி நீங்க அரை குறையா செலுத்தின அன்பை நம்பித்தானே உங்ககூட ரெண்டு வருஷம் வாழ்க்கை நடத்தினேன். அந்த ஒரு துளி அன்பை நம்பித்தானே உங்க குழந்தைக்கு நான் தாயானேன்.

ஆன: இப்போ அந்த நம்பிக்கை குறையும்படியா என்ன நடந்தது?

சர: இத்தனை நாளுமில்லாமே இப்ப எதுக்காக என்னை வெளியே கூப்பிடுறீங்க?

ஆன: அதான் சொல்லித் தொலைச்சேனே, இது அயோக்கியர்கள் வாழுற இடம்னு.

சர: எங்கப்பா அயோக்கியன்கிறது உங்களுக்கு இன்னிக்குத்தான் தெரிஞ்சுதா?

ஆன: ஏன், அன்னிக்கே தெரியும்.

சர: தெரிஞ்ச நீங்க கல்யாணம் முடிஞ்ச உடனே என்னை ஏன் வெளியே அழைச்சுக்கிட்டுப் போகலே? இது அயோக்கியனுடைய இடமுன்னு தெரிஞ்சிருந்தும் ரெண்டு வருஷமா எதுக்காக இந்த வீட்டிலே தங்கினீங்க?

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. பி. செலவு ரூ. 1.4.0.

வாணி தமிழ்-இந்தி ஆசான்: தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்) சோப், இங்கி, ஊதுவத்தி, வாசனைத் தைலம், ஸ்னே, பேஸ்பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ. (P. B. 239). 3, மலையபெருமாள் தெரு, சென்னை-1.

அவரைப் பாருங்கள்!

★ அவரது மூக்கில் நமைச்சலோ தொண்டையில் கபமோ ஏற்படுகிறது.

★ படுக்கையில் உட்கார்ந்து பார்க்கிறார்—ஜன்னலுக்கு ஓடுகிறார்.

★ மார்பை அடைக்கிறாப்போல் இருக்கிறது. பெருமூச்சு விடுகிறார்.

★ மூச்சு இழுப்பு அதிகரிக்கிறது.

★ மூச்சு விடும்போது திணறுகிறது.

★ இருமும்போது வியர்த்துக் கொட்டுகிறது.

★ உதடுகள் உலர்ந்துவிட்டன.

★ முகமே ஒரு கதை சொல்லுகிறது.

அதுதான் ஆஸ்த்மா

பரிதாபமும் ஏக்கமும் உண்டாக்கும் நோய், கண்ணீருக்கும் அப்பாற்பட்டது. இந்த நிலை மாறி நம்பிக்கையும் சந்தோஷமும் உண்டாக

நவரத்ன கல்ப

உபயோகித்துப் பாருங்கள்

★

சிருஷ்டித்தவர்
கவிராஜ்
பண்டித
துர்க்காதத்
சர்மா
வைத்திய
வாசஸ்பதி

NAVRATNA KALPA
PHARMACY
JULLUNDUR CITY (India)

வெங்கடாசலம் பயந்தபடி மறைவிலிருந்து பார்க்கிறார்.

ஆன: அந்த வெக்கங்கெட்ட வாழ்வுக்கும் பாழாப்போன இரக்க உணர்ச்சிதான் காரணம். உனக்கும் உங்கப்பாவுக்கும் உள்ள பாசத்தைப் பார்த்தேன். உன்னைப் பிரிச்சுக்கிட்டுப் போயி வேதனைப்படுத்த வேண்டாங்கிற நல்ல எண்ணத்திலே இருந்தேனே தவிர, துரோகத்தால் உருவான உங்க வீட்டு சுகத்தை அனுபவிக்கிறதுக்காக அல்ல.

சர: சுகத்துக்காக அல்ல. பதவி பறிபோய் விடுமெங்கிற பயத்துக்காகவும் இருந்தீங்க.

ஆன: (கத்தியவாறு) சரளா.

சர: ஆமா, எப்போ அந்தப் பதவி போயிடுச்சோ அதைத் தொடர்ந்து நானும் போக வேண்டியதுதானே?

ஆன: அப்படின்னா என்கூட வர முடியாதுங்கிறியா?

சர: தயவு செய்து அந்த வார்த்தை என் வாயிலிருந்து வரும்படியா செய்திடாதீங்க. நான் வந்தாலும் வராவிட்டாலும் நீங்க போகத்தான் போறீங்க. போறதுக்கு முன்னாலே புருஷன் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசினாங்கிற பழியை என் மேலே சுமத்தாதீங்க. என்னை வேதனைப் படுத்தாதீங்க.

ஆன: நானா உன்னை வேதனைப்படுத்தறேன்? அரசியல் வாழ்க்கையிலே உங்கப்பா எனக்கு அளவில்லாத வேதனையைக் கொடுத்தார். நீ இப்போ என் அந்தராத்மாவுக்கே வேதனையைக் கொடுக்கறே. போகட்டும். உங்களை மன்னிக்க நான் வேறு யாரையாவது கட்டிக்கிட்டா வரப்போறேன்? நானே மன்னிச்சுட்டேன். புறப்படு.

சர: என்னை ஏன் கூப்பிடுறீங்க? பிரியமில்லாமத்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு சொன்னீங்களே.

ஆன: சரளா...இப்பவும் அதே தான் சொல்றேன். அனுதாபத்தினாலே தான் உன்னைக் கல்யாணம் செஞ்சுகிட்டேன். ஆனா... நம்

முடைய முதல் இரவு அன்னிக்கு, உலகம் தெரியாத குழந்தையைப் போலே என்னைப் பார்த்து உன் ரெண்டு கைகளையும் நீட்டினியே, நடக்கத் தெரியாத சிசு தளர் நடை போடற மாதிரி தடுமாறி என் மடி மீதுவந்து விழுந்தியே, கள்ள மில்லாத உன் கண்கள், மழலைக்கு நிகரான புன் சிரிப்பு, சூதுவாது அறியாத சுந்தர முகம் இத்தனை யும் காட்டி, என்னை உனக்கு அடிமை ஆக்கிக்கிட்டே. சத்திய மாச் சொல்றேன், சரளா! இப்போ உன் மேலே எனக்கு இருக்கிற பிரியம் இந்த உலகத் திலே வேற யார் மேலேயும் கிடை யாது. உன்னைப் பச்சை சிசுவைப் போல பராமரிக்கலையா?

சர: போதும் நிறுத்துங்க. இனி நான் யாரையும் நம்பத் தயா ராயில்லை. ம்...பச்சைக் குழந்தை, அந்தப் பருவத்திலிருந்து பாலூட்டி பாதுகாத்த என் தகப் பனே எனக்கு துரோகம் செஞ்ச பிறகு நீங்க செய்யறதிலே ஆச்சர் யம் என்ன இருக்கு? யார் என்ன கெடுதல் செய்தாலும் சரி. தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவந்த வுடனே தன் மடியிலே தாங்கி நான் தவழ இடம் கொடுத்த இந்த வீடு, எனக்கு, என்னிக்கும் துரோ கம் செய்யாது.

ஆன: அதனாலே இந்த வீட்டை விட்டு உன்னாலே வர முடியாது. இல்லையா?

சர: ஆமாம்.

ஆன: நான் உன் கணவன் கூப்பிடறேன். வறயா இல்லையா?

சர: யார் கூப்பிட்டாலும் இந்த இடத்தை விட்டு அசையவே மாட்டேன்.

ஆனந்தன் கோபத்தினுல் அறை கிறுன். "அப்பா" என்று கத்திய வாறு, நாற்காலியுடன் சரளா பின்னுல் போகிருள். சரளாவின் நாற்காலி தொட்டிவில் மோதி நிற்கிறது. ஆனந்தன் வேகமாக வந்து குழந்தையை எடுக்கிருன்.

ஆன: வரவே மாட்டியா? உன்னை எப்படி வரவழைக்க ணும்கிறது எனக்குத் தெரியும்.

குழந்தையுடன் போகிருன்.

WANTED AGENTS All over India ON COMMISSION

For booking orders of our Artistic Offset Calendars (in various sizes) & Plastic Advt. Novelties for New Year. Special Arrangements for Advt. Printing in different Languages. Even Part-time Agents may easily Earn Rs. 250/- per month as comm.

For Agency Terms Apply To-day

PRATIBHA CALENDAR MFG. CO.
PROPS.- PRATIBHA PRESS PVT. LIMITED.
LATOUCHE RD., LUCKNOW (U.P.)

கண்கவர் பிளாஸ்டிக் பொருள்களுக் கும், காலண்டர்களுக்கும் ஆர்டர்கள் வாங்கித்தர பகுதிநேர ஊழியர்கள் தேவை, நிறைய கமிஷன் உண்டு.

கடிதங்களை ஆங்கிலத்தில் மட்டுமே எழுதவேண்டும்.

Pratibha Calendar Mfg. Co.,
LUCKNOW



திருடர்களிடமிருந்தும் துஷ்ட மிருகங் களிடமிருந்தும் உங்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள். பிக்னிக், பிரயாணம், நாடகம் முதலியவற்றுக்கு உபயோக மானது. தன்னியக்க ஆறு வெடிகள். இலேசான நிறை. பெரும் சப்தமும் திகைக்க வைக்கும் நெருப்புப் பொறி யும் உங்களை ஆபத்திலிருந்து காக்கும். விலை நெ. 777 — ரூ. 6/- நெ. 888 — ரூ. 8/-. நெ. 999—ரூ. 13/. 25 தோட் டாக்கள் இலவசம். தனி 100 தோட்டாக் களுக்கு ரூ. 3/- தோல் உறை ரூ. 4/- தபால் செலவு ரூ. 2/- லைஸன்ஸ் தேவை யில்லை. ஒரே பாக்கிங்கில் இரண்டு ரிவால்வர்களுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் பாக்கிங் செலவு இனும்.

Indian Chamber of Science
(p p p) JULLUNDUR CITY

சர : ஐயோ என் குழந்தை... அப்பா...பாட்டி...அப்பா.

ஆனந்தன் வேகமாக குழந்தையுடன் போகிறான். நாகு அவனைத் தடுத்து நிறுத்துகிறான்.

நாகு : நில்.

ஆன : விடுடா வழியை.

நாகு : குழந்தையை வச்சுட்டு போ வெளியே.

ஆன : ஆங் ... டேய், யாரு கிட்டே பேசறே...?

நாகு : மானமிழந்த மாஜி சேர்மன் கிட்டே.

ஆன : அயோக்கிய ராஸ்கல், என்னடா சொன்னே?

நாகு : ஏய் விடப்பா...கால் ஒடிந்த மனைவியை கண் கலங்க விட்டுட்டு, இன்னொரு கட்டழகியை கல்யாணம் செய்துக்கப் போறியே, நீ அயோக்கியனா, நான் அயோக்கியனா?

தொட்டிலில் மாட்டிக்கொண்ட தனது நாற்காலியை எடுக்க முயற்சிக்கிறாள் சரளா.

ஆன : நாகு!

நாகு : இங்கே மனைவியைக் கதற வைச்சுட்டு மாற்றாந்தாய் கிட்டே, குழந்தையைக் கொடுத்து கதற வைக்கவா நினைக்கிறே?

ஆன : அட துரோகிப் பயலே,

நாகு : பாசத்தினாலா கொண்டு போறே? பாட்டன் சொத்து பேரனுக்குத்தான்ங்கிற சட்டம் தெரிஞ்சவனாச்சே நீ.

ஆனந்தன் நாகுவை அடிக்கிறான்.

கண்ணாடி பீரோவின்மேல் கல் விழுகிறது. கண்ணாடி உடைய

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூறமுடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 48 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை. ரூ.4.

BED ROOM PHOTOS படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்குப் படுக்கை அறைக் காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3.50. கடிதப் போக்கு வரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ. வில் முன்பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

பீரோவின் உள் இருக்கும் விஷ பாட்டில் தெரிகிறது. வெங்கடாசலம் விஷ பாட்டிலைப் பார்க்கிறார். சரளா "அப்பா" என்று கத்துகிறாள். சோபாவில் நாகு விழ, அவன் பாக்கெட்டிலிருந்து ரிவால்வர் சோபாவில் விழுகிறது. அதை நாகு எடுக்கிறான். நாகு ரிவால்வரை ஆனந்தனுக்கு நேரே நீட்டியபடி எழுந்து நிற்கிறான். சரளா, "நாகு" என்று கதறியபடி நாற்காலியிலிருந்து கதறி எழுந்து பதறி ஓடுகிறாள். ஓடிவந்த சரளா நாகுவின் கையில் இருந்த ரிவால்வரை தட்டிவிடுகிறாள். அது கீழே விழுகிறது.

சர: என்ன தைரியம் உனக்கு? அவரைக் கொல்லவா பாக்கிறே?

சரளாவின் கால் சரியாகி விடுகிறது. ஆனந்தன் ஆச்சரியத்தால் சரளாவைப் பார்க்கிறான். சரளா தன் கால்களைப் பார்க்கிறாள். சரளா "ஆ" என்று கத்தியபடி விழப்போக, ஆனந்தன் ஓடிவந்து சரளாவைப் பிடித்து அணைத்துக் கொள்கிறான். விஷப் பாட்டில் வெங்கடாசலம் கையிலிருந்து கீழே விழுகிறது. சரளாவுக்கு கால் குணமாகி விட்டதறிந்து மகிழுகிறார் வெங்கடாசலம்.

வெங்: சரளா! உனக்கு கால் வந்திடிச்சாம்மா? நான் சாகப் போற நேரத்திலே இப்படி ஒரு சந்தோஷத்தை அனுபவிப்பேன்னு நினைக்கவே இல்லையம்மா. சரளா! என் வாழ்க்கையிலே நல்லதும் செஞ்சிருக்கேன். கெட்டதும் செஞ்சிருக்கேன். அப்படி எது செய்தாலும் "எல்லாம் உனக்காக." உன் நன்மைக்காகத் தான் அம்மா. இப்போ சொல் அம்மா. நான் உனக்கு அப்பா தானே?

சர: அப்பா.

வெங்: அம்மா சரளா, நீ மாப்பிள்ளையைப்பற்றி தவறா நினைச்சிட்டே அம்மா. அவர் ரொம்ப உயர்ந்தவர். இந்த ஒப்பந்தத்தைப்பத்தி அவருக்கு ஒண்ணுமே தெரியாது. ஆமாம் மாப்பிள்ளே, அது...எனக்கும் உங்க அப்பாவுக்கும் ஏற்பட்ட ரகசிய ஒப்பந்தம். அதிலே உங்களுக்கும் பங்கு இருக்கும்னு சரளா தவறா நினைச்சுட்டா. அவளை மன்னிச்சிடுங்க. இனிமே நீங்கதானே அவளுக்கு சகலமும்.

ஜனக்கூட்டம் கத்தியவாறு வீட்டிற்குள் வர, ஆனந்தன் சைகை காட்டுகிறான். மக்கள் அமைதியாகிறார்கள். வீட்டுக்கு வெளியே பதுங்கியபடி வெளியே றும் நாகுவை ஏகாம்பரம் பிடிக்கிறார். ஏகாம்பரம் நாகுவை அடிக்கிறார். போலீஸார் நாகுவை இழுத்துப் போகிறார்கள்.

வெங்: மாப்பிள்ளை, அவங்க ஆத்திரப்படறதிலேயும் நியாயம் இருக்கு. இந்தப் பொது மக்களை ஏமாற்றித்தானே இந்த சொத்துக்களையெல்லாம் சம்பாதிச்சேன். அதிலே பெரும் பகுதி அவர்களையே சேரட்டும். சரளா... சரளா.

வெங்கடாசலம் இறக்கிறார்.

வெங்கடாசலத்தின் பிணத்தை தூக்கிக்கொண்டு போக, மக்கள் பின்னால் செல்கிறார்கள். சரளா ஓடிவருகிறாள். ஏகாம்பரம் தடுக்கிறார்.

ஏகா: பொம்பளைங்க மயானத்துக்கு வரக்கூடாதம்மா.

ஆன: அப்பா...பேசாமே இருங்க. சரளா நடக்கிறதை பாக்கணுங்கிறதைதான் வெங்கடாசலத்தின் வாழ்க்கையிலே லட்சியமா நினைச்சிருந்தாரு. அதைப் பார்க்க அவர் கொடுத்து வைக்கல்லே. இந்தக் கடைசி மயான யாத்திரையிலாவது அவ நடந்து வர்றதைப் பார்த்து அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும் வா...சரளா.

போகிறார்கள். வெங்கடாசலத்தின் பணத்திமிரே அவர் வாழ்க்கையை அழித்து விடுகிறது. ஆனந்தனும் சரளாவும் மக்கள் சேவையிலீடுபடுகிறார்கள். ★

நகீனில் நாங்கள்.....

ஸ்ரீதர்





தமிழ்ப் படங்களில் இதுவரை இடம்பெறாத காட்சிகளுடன் "தேன் நிலவு" படத்தைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பியது.

அதன் விளைவாக காஷ்மீரிலேயே முழுக்க முழுக்க வெளிப்புறக் காட்சிகளில் நடிகர்களைக் கொண்டு படத்தை தயாரிக்க முடிவு செய்தேன். பத்திரிகையாளர்கள், படவுலக நண்பர்கள், பொதுமக்களின் ஆசியுடன் எங்கள் குழு கிளம்பியது.

காஷ்மீரில் நாங்கள் படமாக்கிய இடங்களில் நகின் ஏரி குறிப்பிடத் தக்கது.

பிரம்மாண்டமான அந்த நகின் ஏரியைச் சுற்றி பசுமையும் பனியும் நிறைந்த மலைகள் கரைபோல் அணிவகுத்து நிற்கின்றன. ஏரியின் நடுவிலே நீச்சல் குளம் கட்டப்பட்டிருக்கிறது. ஏரியின் கரையிலே நகின் கிளப் இருக்கிறது. இதிலே அங்கத்தினராகி விட்டால் எல்லா வசதிகளும் கிடைக்கும். இங்கே தான் உல்லாச பிரயாணிகள் படகு வீடுகளில் தங்கி சுற்றி வருவார்கள்.

'நிலவும் மலரும் பாடும்' என்று பாடியபடி கதாநாயகியும் கதாநாயகனும் மகிழ்ந்திருக்கும் காட்சியை இங்கே படமாக்கினோம்.

அடுத்து அலைச்சவாரிக் காட்சி படமாக்கப்பட்டது. இதற்காக நிறைய மோட்டார் படகுகளை அமர்த்திக் கொண்டோம்.

ஜெமினி கணேசனும் வைஜயந்திமாலாவும் இந்தக் காட்சியில் நடித்தார்கள். மோட்டார் படகின் பின்னால் ஒரு பலகையை நீண்ட கயிற்றில் கட்டி, அந்தப் பலகையின் மற்ற முனையில் உள்ள கயிறைப் பற்றியபடி அவர்கள் நிற்பார்கள். முன்னால் அதனுடன் இணைக்கப்பட்ட மோட்டார் படகு வேகமாகச் சென்றால் முன்பக்கம் பலகை தூக்கி நிற்க, அவர்கள் தண்ணீரைக் கிழித்தபடி பலகையுடன் வருவார்கள். ''ஓஹோ எந்தன் பேபி'' பாடல் இந்தக் காட்சிக்காகப் பதிவாகியிருந்தது.

இந்தக் காட்சியில் நடிக்கும்போது ஏற்படக்கூடிய விபத்தைச் சமாளிக்க வைஜயந்தி நீச்சல் கற்றுக்கொண்டார்.

சுமார் ஐம்பதடி ஆழமுள்ள இடத்தில் படமாக்க ஏற்பாடு செய்தோம். தண்ணீர் ஆழமாக







இருப்பதோடன்றி ஏராளமான கொடிகள் வளர்ந்திருக்கின்றன. ஆகவே நீரில் யார் தவறி விழுந்தாலும் உயிருக்கு ஆபத்துதான்.

காட்சி ஆரம்பமாயிற்று. முன்னால் போகும் படகு காட்சிமுடிந்ததும் மெதுவாக போய் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்கும். ஆனால் படகுக்காரர் குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தாமல் போகவே பின்னால் பலகையில் நின்ற



படி வந்த வைஜயந்தி, பலகையுடன் தண்ணீருக்குள்ளே அமிழ ஆரம்பித்தார். நல்ல வேளையாக உடனடியாக மோட்டார் படகு ஒன்று விரைந்து 'லைப் பெல்ட்' என்று அழைக்கப்படும் உயிர்காக்கும் காற்றடித்த வளையத்தைப் போட அதன் மூலம் வைஜயந்தி காப்பாற்றப்பட்டார். அவர் பயப்படாமல் மேற்கொண்டு நடித்தது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாடலின் ஒலியை நடிகர்கள் கேட்டு வாயசைக்க வேண்டும். படமாக்கப்படுவதற்குத் தேவையான ஜனரேடர், ஒலிப்பதிவு இயந்திரங்கள் ஆகியவை படகுகளில் இருந்தன. அலைச்சவாரியால் ஏற்படும் அலைகள் இந்த யந்திரங்கள் வைக்கப்பட்டிருந்த படகுகளைக் கண்டபடி ஆட்டின. எந்த நிமிஷமும் இந்தப் படகுகளில் இருந்த யந்திரங்களும் ஆட்களும் விழுந்து விடும் நிலை இருந்தது.





படகுகளில் நானும் மாதவன், ஒளிப்பதிவு டைரக்டர் வின்சென்ட், ஒளிப்பதிவாளர் சுந்தரம் முதலியோரும் நீச்சல் உடையுடனிருந்தோம். எந்த நிமிஷமும் நீரில் விழுந்து விடுவோமே! முதன் முறையாக இந்தியாவில் அலைச் சவாரிக் காட்சி இந்தப் படத்தில் தான் இடம் பெறுகிறது என்ற மகிழ்ச்சியில் நாங்கள் துணிவுடன் பணியாற்றினோம்.

கணேசனும் வைஜயந்தியும் ஏரியின் நடுமத்தியில் படகில் சந்தித்துக் காதலிலீடுபடும் காட்சியையும் சகலவித யந்திரங்களுடனும் சென்று படமாக்கினோம்.

உல்லாச பிரயாணிகள், அழகிய பங்களாவின் வசதிகளுடன் கூடிய படகு வீடுகளை வாடகைக்கு எடுத்துத் தங்குவது வழக்கம். அத்தகைய படகுகளில் மூன்றை படப்பிடிப்புக்காக ஏற்பாடு செய்து கொண்டோம். பதினைந்து நாட்கள் அவை எங்கள் பொறுப்பிலிருந்தன.

தங்கவேலு, எம். சரோஜா, ஜெமினி கணேசன், வைஜயந்திமாலா, புதுமுகம் வசந்தி ஆகியோர் கலந்து கொண்ட பல காட்சிகளை இதில் படமாக்கினோம். ஆங்கிலப் படங்களைப் போல், இயற்கைச் சூழ்நிலையிலேயே இக்காட்சிகள் படமாக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

தங்கவேலுவும் எம். சரோஜாவும் படகில் போகும் காட்சி இந்த ஏரியின் மத்தியில் படமாக்கப்பட்டது. தனிமையில் மனைவியுடன் உல்லாசமாகப் படகை இதில் தானே ஓட்டிக் கொண்டு சென்று, இடையே துடுப்பைத் தவறவிட்டுத் தவிக்கும் காட்சியில், தங்கவேலு துடுப்பைத் தவற விட்டுத் தவித்த காட்சி சிறப்பாக அமைந்தது!

இந்த ஏரியில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல ஷிகாரா எனப்படும் சிறிய படகுகளைத்தான் பயன்படுத்த வேண்டும். அதைச் செலுத்துவதற்குத் தனித் திறமை வேண்டும். அங்குள்ளவர்களிடம் ஹிந்தியில் பேசிப் புரிய வைப்பதும் அவர்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளுவதும் மிகவும் சிரமம். ஹிந்தியே தெரியாத தங்கவேலு அவர்களுடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பார். ''என்ன பேசினீர்கள்?'' என்று கேட்டால் பூர்வ பீடிகையுடன் ஒரு கதையே கூறுவார். நாங்களெல்லாம் அவரது 'டுப்'புக்குச் செவி சாய்க்கத் தயாரில்லை என்பதுபோல் போய்விடுவோம்.

பயங்கர அனுபவங்களும் ஹாஸ்ய நிகழ்ச்சிகளும் நிறைய கொண்ட நகின் ஏரியையும் படப்பிடிப்பு நிகழ்ச்சிகளையும் எங்களால் மறக்கவே முடியாது.

89705

ஜூலை
14உ
முதல்
புரட்சி நடிகர்
எம்.ஜி.ஆர்
நடிக்கும்
ராகவன்
புரொடக்ஷன்ஸ்
சபாஷ்
மாப்பிளே!
தயாரிப்பு & டைரக்ஷன் S. ராகவன்
சென்னை
பிளாசா · பாரத்
மகாலட்சுமி · ராம்
(கோடம்பாக்கம்)
மற்றும் தென்னாடெங்கும்

ELEGANT

REGD.No.M4523
பேசும்பட
ஆகஸ்ட் 1961 • 75 காசு
அசோகா பிக்சர்ஸ்
இந்திரா என் செல்வம்
திரைக் கதை வசனம்: விருதை • ந. ராமசாமி
டைரக்ஷன்
ங்கன் மணி • C. பத்மநாபன் B.A.
ஸ்டுடியோ
விஜயா-வாஹி